892

# ஜகன்மோகினி

1—12—1949 அணு நான்கு

892/ 4-49
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1949
MADRAS

வை.மு.கோ.


86-வது நாவல்
**ஜயபேரிகை**
(இவ்விதழில் முடிவு)

★

87-வது நாவல்
**ஜீவநாடி**
மோகினி" 27-வது ஆண்டுமலரில் வெளியாகிறது.

★

88-வது நாவல்
**வீராங்கனை**
ஜனவரி இதழில் ஆரம்பம்



உங்கள் பிரதியை உடனே ரிஸர்வ் செய்யுங்கள்

27-வது ஆண்டு மலர்
1—1—'50 இதழுடன் வெளியாகும்

★

● முழுநாவல் ● இலக்கியம் ● கவிதை ● கற்பனை
● உண்மைச்சித்திரங்கள் ● ஆன்மீகவிருந்து
● சிறுகதைகள் ● ஓவிய, போட்டோ அனுபந்தங்கள்

பல துறைகளில் விருந்தளிக்கும் அரிய மலர்—
அடக்கவிலைப் பதிப்பு ரூ. 2. தான்

# க்ஷேமலாபங்கள்

வாசகமகனியர்களுக்கு வந்தனம். உபயக்ஷேமங்கள்.

ஸ்ரீ கிதாசாரியனின் க்ருபாகடாக்ஷத்தினாலும் மோகினியின் அன களின் பேருதவியினாலும் மோகினிச்செல்விக்கு இம்மாதத்துடன் 26 வய பூர்த்தியாகி 27-வது ஆண்டு பிறக்கும் குதூகலத்தை உங்களுடன் நா பங்கிட்டுக்கொள்கிறேன். 26 வருஷ காலத்தில் மோகினி எத்தன இடையூறுகளுக்குப், யுத்த பயங்கரத்திற்கும் அஞ்சாமல் தனது கட யில் கண்ணாகி எப்படியெல்லாம் ஸேவைபுரிய வேண்டுமோ அவ்வ புரிந்து வாசகமகனியர்களின் அன்புக்குப் பாத்திரமாகி இருக்கி என்பது நீங்களறிந்த விஷயம். மனித வாழ்க்கையை ரஸமாகக் க தற்குப் பலவித மார்க்கங்கள் இருக்கின்றன; எனினும் இலக்கியப் பூங் வில் மெய்மறந்து சிலமணி நேரமாவது திளைத்து இன்புறுவதில் உள் தனி ஆனந்தம் வேறெதற்குமில்லை. அம்முறையில் பத்திரிகைகள் அளிக் ஸாரமான நவரஸ விருந்துக்கு ஒரு தனி ஸ்தானத்தைப் பெரியோர்கள் வகுத்திருக்கிறார்கள். அவ்வழியில் மோகினி முக்யமாய் வாழ்க்கைக்கு அத்யாவச்யமான ரஸங்களை அங்கமாகவும், பக்தி, கடமை இவைகளை ப்ரதான அங்கியாகவும் வகுத்து,— கதைகள், கட்டுரைகள், பாடல்கள், சிறந்த ஞாதாக்களுடைய ஒப்புயர்வற்ற விஷயதானங்கள் முதலியவை களைக் கோத்த மாலையாக மாதாமாதம் சமர்ப்பித்துவருகிறாள்.

## 27–வது ஆண்டு ஆரம்பம்

அடுத்த முதல்தேதி வை. மு. கோ. 88-வது நாவல் வீராங்கனையுட வழக்கம்போல் ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார், பி. ஸ்ரீ. ஆசார்ய ப்ர. ப. அண்ணங்கராசாரியர், வை. மு. ஸ்ரீ., சகோதரி R. S சுபலக்ஷ் அம்மாள், வஸுமதி ராமஸ்வாமி முதலியோரின் கட்டுரைகளும், புதி எழுத்தாளர்களின் சிறுகதைகள், ஹாஸ்யக்கதைகள், படங்கள், ம புரை, போட்டோக்கள்......மற்றும் சில புதிய அம்சங்களும் மோ தாங்கிவந்து உங்களை மகிழ்விப்பாள்.

## கவனிக்கவும் ஜனவரி முதல்தேதி மலர் வெளிவரும்.

27-வது ஆண்டுமலரை தன் ஜீவநாடியுடன் பல பல உயர் கதைகள், கட்டுரைகள், ஓவியங்கள், புகைப்படங்கள் முதலியவற்றுட சிகரமான விருந்தாக அளிக்கத் தயாரித்துவருகிறாள்.

எப்போதும்போல் உங்கள் பேராதரவு நிறைந்த அன்பை ஆசியையும் கொடுத்து மோகினியையும் மலரையும் சேர்த்து ஆதரி உதவும்படியாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.

---

## 27-வது ஆண்டுக்கொண்டாட்டம்

### சந்தாநேயர்களுக்குப் பல சலுகைகள்

**ஒரு வருஷ சஞ்சிகை இனாம்**

ஆறு புது சந்தாநேயர்களைச் சேர்த்து முன்பணமனுப்புவோர்க்கு.

**நமது நாவல்கள் இனாம்**

இரண்டு புதிய சந்தாநேயர்களைச் சேர்த்தனுப்பினால், ஒரு ரூபா விலையுள்ள நாவலும், மேலும் எத்தனை புதிய சந்தாநேயர்களைச் சே தனுப்புகிறீர்களோ அத்தனை 8 அணா விலையுள்ள நாவல்களும் இனாம அனுப்புவோம்.

— காரியஸ்தன், ஜகன்மோகி

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
– திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
– வீராகவ கவி

Vol. 26. விரோதி ௵, சுதந்தரா சகாப்தம் December.
No. 12. கார்த்திகை ௴ 29-ம் திங்கள் 1949.


## அடுத்த இதழில் ஆரம்பம்

ஹாஹா!...என்ன ஆச்சரியம்!...குடியானப்பெண் வள்ளிக்குப் பெண் குழந்தை பிறந்ததா...என்ன ஜோஸ்யமா...ஊம்...பயித்யக்காரனின் பிதற்றலல்லவா......அடாடாடா....என்ன அழகு! என்ன வசீகரம்!...ஐயோ! பயித்யம் குழந்தையைத் தீண்டுகிறதே....ஐயோ!...வள்ளியின் மகளை யானை மிதித்துவிட்டதாம்......என்ன என்ன!...வள்ளிக்கு திடீரென்று யோகம் பிறந்ததா...வீராங்கனையின் புகழ் அண்டத்தையளாவுகிறதா ...திவான் கஜபதியின் சூழ்ச்சியில் வீராங்கனையின் புகழ் சாம்பலாகி விடப்போகிறதா......ஜோஸ்யம் கூறிய பயித்யம் எங்கே? வள்ளியின் செய்கையா இத்தகைய விபத்தை உண்டாக்கியது?....ஆதி மூலபுரியின் அரசன் விக்ராந்தனு போர் தொடுக்க

## வீராங்கனை

வை. மு. கோ.
88-வது நாவல்

கிளம்புகிறான்... அரசியின பிதா எங்கே மாயமாய் மறைந்துவிட்டார்? வள்ளியின் கதி என்னவாகிறது? வீராங்கனையின் செங்கோல் எப்படி நியாயமழையைப் பெய்து பிரமிக்கச் செய்கிறது? குழந்தை வீரலக்ஷ்மி யார்? வீராங்கனை யார்? வள்ளியின் குழந்தை என்னவாகிறது? உலகத்தில் கண்டிராத நியாயத்தை கஜேந்திரபுரி அரசி வழங்கியதை உலகமே கொண்டாடுகிறதா...ஆம். இதுமட்டுமா!... இன்னும் காதல், வீரம், சோகம், ஹாஸ்யம், நட்பு, பரோபகாரம், பக்தி, கடமை, தர்மம் முதலிய பலவித ரஸங்களை ஒவ்வொரு வரியிலும் அபாரமான விருந்தாக மோகினி அளிக்கக் காத்திருக்கிறாள். தொடர்ந்து படித்து இன்புறுங்கள்!

## 10. பித்தன் யார், சித்தன் யார்?

'அடே, நான் யார் தெரியுமா? திப்புசுல்தானின் மந்திரி'.

'அடே, உன்னை நான் அப்படி நியமிக்கவில்லையே.'

இந்தச் சம்பாஷணை மைசூர் அரண்மனையில் நடைபெறவில்லை; கீழ்ப்பாக்கம் ஆசுபத்திரிபோன்ற ஒரு கட்டடத்தில் நடைபெற்றதுதான். ஆனால் பித்தர்களெல்லாம் இவ்வளவு நகைச்சுவையுடன் பேசிக்கொள்வதில்லை.

ஒரு பெரிய மோட்டார்வண்டியில் இரட்டைவரிசையாகப் பைத்தியக்காரர்களை உட்காரவைத்து ஆசுபத்திரிக்குக் கொண்டுபோன ஒரு காட்சி நினைவிற்கு வருகிறது. இரட்டை வரிசைகளும் எண்ணான்கு பற்கள் இலங்கச் சிரித்துக்கொண்டே போயின. பித்தர்களெல்லாம் இப்படிச் சிரித்துக்கொண்டிருப்பதுமில்லை.

### ரகமும் தரமும்

பக்தர்களில் சிரிக்கும் பக்தர்களும் உண்டு; அழும் பக்தர்களும் உண்டு. வேதாந்திகளிலும் இப்படி இரு வகுப்பினருண்டு என்பர். பித்தர்களிலும் சிரிக்கும் பித்தருண்டு; அழும் பித்தருண்டு; தொழும் பித்தர், ஆசாரப் பித்தருண்டு; அனாசார, நாஸ்திகப் பித்தரும் உண்டு. அசட்டுத் தைரியத்துடன் 'யாரே எனக்கு நிகர்? என்று தன்னை ராஜாவாகவோ மந்திரியாகவோ, தெய்வமாகவோ மதித்துக்கொள்ளும் பைத்தியம் உண்டு. கண்ட இடமெல்லாம் பேய் கண்டதுபோல் அஞ்சும் பைத்தியமும் உண்டு. கெஞ்சும் பைத்தியமுண்டு; கொஞ்சும் பைத்தியமும் உண்டு; பயமுறுத்தும் பைத்தியமுண்டு. நயமாகப் பேசிப் பசி தீர்த்துக்கொள்ளும் பைத்தியமுண்டு. இத்யாதி, இத்யாதி. பைத்தியத்திலும் பல ரகம்.

ஆனால் பைத்தியம்தான் பைத்தியமா? பைத்தியக்கார ஆசுபத்திரிக்கு வெளியிலும், 'பைத்தியக்காரர்' என்று உலகம் சொல்லாத பேர் வழிகளிலும், பைத்தியங்கள் இல்லையா? குடிவெறியும் கோபமும் குட்டிப் பைத்தியம்தானே? 'பக்காத்திருடன், முக்கால் திருடன்' என்று சொல்வது போல், 'பக்காப் பைத்தியம், முக்கால் பைத்தியம்' என்றெல்லாம் மக்களுலகைப் பிரித்துப் பேசலாம்.

பரம லோபி தன்னைப் பரம லௌகிக ஞானியென்று எண்ணிக்கொள்ளலாம். ஆனால் 'அதோ போகிறது பணமூட்டை, பணப்பைத்தியம்' என்று மற்றவர்கள் சுட்டிக்காட்டுவதில்லையா? பரம்பொருளை நாடும் பக்தமணியைக்கூடத் 'தெய்வப் பைத்தியம்' என்று சொல்வதில்லையா? 'இந்த உலகமே ஒரு பித்தர் சாலை—ஒரு பைத்தியக்கார ஆசுபத்திரி. இதில் ஒருவருக்கு ஒரு பைத்தியம்; வேறொருவருக்கு வேறொருவகைப் பைத்தியம். ஒருவனுக்குப் பொருட் பைத்தியம், ஒருவனுக்குப் புகழ்ப் பைத்தியம்... எனக்கோ பக்திப் பைத்தியம்' என்று பொருள்பட அமைந்திருக்கிறது, ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் உபதேச ரத்தினமாலையில் ஒரு மணி.

18/3/56.

### விஞ்ஞானப் 'பைத்தியம்'

பரமஹம்ஸரைப்போன்ற பக்தமணிகளை 'ஞானப் பைத்தியம்' என்று புகழ்ந்தவர்களுண்டு. 'ஞானப் பைத்தியமல்ல, அஞ்ஞானப் பைத்தியம் தான்' என்று இகழ்வோர் இன்றும் உண்டு. இவர்களுக்கு, விஞ்ஞானம் ஒன்றே மெய்ஞ்ஞானம்,—மெய்ம்மைக்கு ஒரே வழி, உண்மை காணவல்ல வேறு வழிகளை இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. எனினும் விஞ்ஞானத்தில் பைத்தியமே இல்லையா?

அர்ஜெண்டைன் பிரதேசத்தில் விஞ்ஞான மனப்பான்மையுள்ள ஒருவர் காட்டு வெளியொன்றில் ஒரு தனிக்குடிசை போட்டுக்கொண்டு அக் குடிசையில் ஒவ்வொரு வருஷமும் நாலு மாதம் வசித்துவந்தார். ஆகஸ்டு மாதம் வாத்துக்களின் பெருங்கூட்டங்கள் தெற்கேயுள்ள சில தீவுகளைநோக்கிப் பறந்துபோவது வழக்கம். ஒருநாள் இவர் குதிரை சவாரி செய்துகொண்டிருக்கையில் அந்த வெளியிலே ஒருஜோடி வாத்துக்கள் பெருங்கூட்டத்துடன் போய்விடாமல் பின்தங்கி விட்டனபோல் நடந்து போய்க்கொண்டிருந்தன,—பழுப்புப் பேடையும் வெள்ளை ஆணுமாக. புருஷ வாத்து முன்னே போயிற்று. சிலவேளை எழும்பிச் சுமார் நூறு கஜம் பறந்துசெல்லும்; மறுபடியும் திரும்பிவந்து நடக்கும். பேடைக்கு ஒரு சிறகு முறிந்திருந்தது; பறந்துசெல்லப் 'புருஷனுக்கு' இஷ்டமில்லை. எனினும் விரைவாகவோ, சற்றுத் தாமதித்தோ ஊனுண்ணும் பறவைகள் பேடையைப் பிடித்துக்கொள்ளும். புருஷ வாத்து வாழ்க்கைத் துணையின்றி, வழித்துணையின்றி தெற்கே போகவேண்டியதுதான்.

'ஒரு பறவையின் தாம்பத்ய தர்மம் இது!' என்று அதிசயமாய்க் குறிப்பிடுகிறார் ஒரு விஞ்ஞானி 'உயிர்வகை இயற்கை' என்ற தமது புத்தகத்திலே. கேவலம் பொருளே பரம்பொருள் என்றும், போகமே வழிபாடென்றும், வேகமே சாதனமென்றும் கருதும் லௌகிகர்கள் மேலே சொன்ன விஞ்ஞானியை 'இப்படியும் ஒரு விஞ்ஞானப் பைத்தியம்' என்று தானே மதிப்பார்கள்?

## வீரப் பைத்தியம்

'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்று போர்முனையில் முன்வைத்த காலைப் பின்வாங்காது நின்று நாட்டுக்காகவோ, தன் சுத்தவீர லட்சியத்திற்காகவோ உயிரை விடுகின்ற வீராதிவீரனும் பைத்தியம்தான், வீட்டிலே சுகவாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு. சமாதான காலங்களிலும் மரணத்தை அஞ்சாத வீரர்களுண்டு. மலேரியா என்ற விஷஜ்வரம்குறித்து விஞ்ஞான ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கையில் அந்த ஜ்வரத்தை விளைக்கும் கொசுக்களைத் தம்மீது கடிக்கவிட்டுக்கொண்டனர் இரண்டு விஞ்ஞானியர். மான்ஸன், வாறன் என்று பெயர். இருவருக்கும் மலேரியா ஜ்வரம் ஒருதடவையல்ல, பன்முறை வந்து கஷ்டம் விளைத்தது. ஆனால் அத்தகைய கொசுக்கள் அணுஉயிர்களை உடம்பிற்குள் செலுத்துவதால் இந்த ஜ்வரம் ஏற்படுகிறது என்ற ஞானம் உலகில் உதித்ததல்லவா? இதனால் கொசுக்களை ஒழித்து இந்த விஷஜ்வரத்தைத் தடுத்தொழிக்கும் சுகாதாரமுறைகள் தோன்றலாயின. இந்த இரு விஞ்ஞானியரின் வீரத்தையும் பைத்தியம் என்று சுகபோக உலகம் அந்நாளில் பழித்திருக்குமல்லவா?

## சுதந்திரப் பைத்தியம்

அமெரிக்காவில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டபின், ஓர் அமெரிக்கச் சீமான் கந்தைகட்டிய நீக்ரோ ஒருவனைச் சந்திக்க நேர்ந்தது.

சீமான்:—உனக்கு வேலை தேவையா?

நீக்ரோ:—தேவைதான்.

சீ:—நீ அடிமையாக இருந்தகாலத்தில் இந்த வயிற்றுக் கவலையாவது இருந்திராதே?

நீ:—இந்தக் கவலை அப்போது கிடையாதுதான். மேலும் என் எஜமானர் பட்சமாக 'நடத்தினர்'; அதிக வேலை வாங்கியதில்லை, அடித்ததுமில்லை.

சீ:—அப்படியானால் இந்த நிலையைக்காட்டிலும் அந்த நிலைதானே சிறந்ததென்று ஒப்புக்கொள்கிறாய்?

நீ:—இல்லவே இல்லை. இந்தக் கந்தலிலும், இந்தப் பட்டினியிலும் இன்பம் தருகிறது இந்தச் சுதந்திரம். இதில் ஏதோ, இன்னதென்று என்றால் சொல்லமுடியாத, ஒருபெரிய சுகம் இருக்கிறது.

இத்தகைய சுதந்திரமே உயிர், சுவாசமும் உயிரன்று என்பதுதான் சுதந்திரலட்சுமியின் உபாஸகர் கொள்கை. சுதந்திரத்திற்காக உயிரை விட்டவர்களும், சிறையில் தவம் கிடந்தவர்வர்களும் எத்தனை பேர்? நமது நாட்டிலும் சுதந்திரப் போராட்டம் மும்முரமாக நடைபெற்றுவந்த காலங்களில் துன்பமும் இன்பமாய் மரணமும் திரணமாய் தோன்றவில்லையா? ஆனால் சுகவாசிகளும் சோம்பேறிகளும் சுயநலக்காரர்களும், 'சுதந்திரப் பைத்தியம் இந்த வந்தேமாதரங்கள் என்ன செய்யமுடியும்? அசைக்கமுடியுமா ஆங்கில மகாராஜ்யத்தை?' என்றெல்லாம் சொல்லி நகையாடவில்லையா?

## பரோபகாரப் பைத்தியம்

ஒரு பாதிரியார் குஷ்டரோகிகள் குடியேறியிருந்த ஓர் இடத்திலே தங்கி அவர்களுக்குப் பணிசெய்து அதனால் தாமும் குஷ்டநோயுற்று மரணமடைந்தார். சுகபோக உலகம் இவரையும் பைத்தியமாகவே கருதியது. ஆனால் அறிஞர்கள் கிறிஸ்துசமானரென்று பாதிரியாரைப் போற்றினார்கள். இத்தகைய பரோபகாரிகளும் லட்சியவாதிகளுமே இம்மண்ணுலகத்தையும் பொன்னுலகமாக்கக் கூடியவர்கள்.

பாரதப் பெரும்போரில் படைகளைக் காட்டிலும் கண்ணனையே பெரிதாக மதித்தான் அர்ச்சுனன். துர்யோதனனோ கண்ணனுடைய யாதவப் படைகளையே மகிழ்ச்சியுடன் வேண்டினான். அர்ச்சுனன் லட்சியவாதி; துரியோதனன் காரியவாதி. லட்சியந்தானே உண்மையான வெற்றி தரவல்லது? ஒரு லட்சியத்தை முன்னிட்டுத் தவம் கிடந்தவர்களை நாம் முனிவர்களென்று போற்றுகிறோம். லட்சியவாதிகள் பிரம்மரிஷிகளாக இருக்கலாம், ராஜரிஷிகளாக இருக்கலாம், லட்சியவாதிகள் தத்துவஞ்ஞான உலகிலும் காணப்படலாம், விஞ்ஞான உலகிலும் காணப்படலாம்.

## லட்சியப் பைத்தியம்

பிராணிசாஸ்திர ஆராய்ச்சியில் மூண்டிருந்த அகாஸிஸ் (Agassiz) என்பவரை நோக்கி ஒரு பெரிய அமெரிக்க அரசாங்க அதிகாரி, 'நீர் சில பிரசங்கங்கள் செய்ய ஒப்புக்கொண்டால் உமக்கு நிறையப் பணம் தருகிறேன்' என்றான். அதற்கு அந்த விஞ்ஞானி, 'பணம் சம்பாதிப்பதிலே என் பொழுதை வீணாக்கமுடியாது' என்று பதில் சொல்லிவிட்டார். உலகத்திற்குப் பெரு நன்மை விளைப்பவர் இத்தகைய லட்சியவாதிகளா, அல்லது அத்தகைய அதிகாரிகளா?'—சிந்தித்துப்பாருங்கள்.

காரியவாதிகள் லட்சியவாதிகளைப் 'பைத்தியம்' என்று கருதுவது போல், லட்சியவாதிகளும் காரியவாதிகளைப்'பைத்தியம்'என்றே கருதுவர். ஈச்வரசந்திர வித்யாசாகரர் என்ற வங்கநாட்டுப் பண்டிதர் ஓர் அருமையான புத்தகாலயம் அமைத்திருந்தார். அதைப்பார்வையிடவந்த ஒரு சீமான் விலையுயர்ந்த சில புத்தகங்களையும், உயர்ந்த 'பயிண்டு' செய்திருந்த நூல்களையும் கவனித்து, 'ஐயா, ஐரோப்பாவிலிருந்து இவ்வளவு விலையுயர்ந்த புத்தகங்களுக்காகவும், இவற்றை உயர்ந்த 'பயிண்டு' செய்வதற்காகவும், செல்வரல்லாத நீர் எவ்வளவு பணத்தை வாரி இறைத்துவிட்டீர்; நீர் பைத்தியம் என்றே நினைக்கிறேன்' என்றார். வித்யாசாகரர் புன்னகையுடன் சம்பாஷணையையே வேறுவிதமாகத் திருப்ப விரும்பியவர்போல், 'ஐயா, தங்களுடைய இந்த பட்டுச்சால்வையின் விலை என்ன?' என்று கேட்டார்.

'ஐந்நூறு ரூபாய்' என்று குதூகலமாகப் பதில் சொன்னார் சீமான்.

மேலும், 'இது அசல் காஷ்மீரச் சரக்கு,என் உத்தரவின்மேல் தயாரானது' என்றும் தெரிவித்தார்.

அப்போது வித்யாசாகரர் சொன்னர்: 'ஐயா, பிரபுவே, சாதாரணப் போர்வையே குளிருக்குப் போதுமானதாயிருக்க, தாங்கள் காஷ்மீரத்திலிருந்து இவ்வளவு விலையுயர்ந்த சால்வை வரவழைத்ததேனே? இதோ தங்கக் கடிகாரச்சங்கிலி ஒன்றும் அணிந்திருக்கிறீர்களே, ஒரு நூல்கயிறு போதாதா? நீரும், பைத்தியந்தானையா!'

## பக்திப் பைத்தியம்


இப்படியேதான் பக்தர்களும், தங்களைப் பிறர் பைத்தியமென்று எண்ண, மற்றவர்களைப் பைத்தியக்காரர்களென்றும் பேயர்களென்றும் எண்ணுகிருர்கள். குலசேகராழ்வார் வீரமன்னராக இருந்து பக்தரானதும் இவரை உலகம் எப்படி மதித்திருக்கும்? 'உண்டியும் உடையும் சுகபோகமும் புருஷார்த்தம்' என்று மதிக்கும் உலகத்தைத்தான் இவர் எப்படி மதித்திருப்பார்? இந்தக் கேள்விகளுக்கு விடையாக இவர் அருளிய பாசுரம் ஒன்றைப் பாருங்கள்;

பேயரே எனக்(கு) யாவரும் : யானும் ஓர்
பேயனே எவர்க்கும்! இது பேசி என்?
ஆயனே! அரங்கா! என்(று) அழைக்கின்றேன் ;
பேய னாய்ஒழிந் தேன்எம்பி ரானுக்கே!

பொருளும் போகமும் விரும்பிப் பரம்பொருளை மறந்தவர்களைப் பேயர்கள் என்று சொல்லிவிட்டார், லட்சியத்தை யறிந்து பரம புருஷார்த்தத்தை விரும்பியவர். 'சிங்காசனத்திலிருந்தும் சுகபோகங்களை அனுபவிக்கக்கொடுத்துவைக்கவில்லையே, இப்படியும் ஒரு பைத்தியமா!' என்று கருதிய அவர்களும், 'இது பேய்தான், மனிதனல்ல!' என்று இவரையும் கைவிட்டார்கள். இவருடைய மனக்கண்ணாடியில் அவர்கள் முகம்பார்க்க விரும்பமாட்டார்கள். இவரோ அவர்கள் மனக்கண்ணாடியில் முகம்பார்த்து ஆறுதலும் அடைகின்ருர். 'சரி, ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில் பித்தேறிவிட்டது உண்மைதான், இவர்களும் சாட்சியல்லவா?' என்ற குதூகலத்தில் 'ரங்கா, கோபாலா?' என்று பகிரங்கமாக அழைக்கத் தொடங்குகிருர். 'ஊர்பெருமானுகிய நம்மைக்குறித்து என்ன நினைப்பார்களோ?' என்ற கவலை லவலேசமும் இப்போது கிடையாது. இத்தகைய மனநிலை பேயாழ்வாரின் சிறப்பியல்பு என்பர். உண்மையில் எல்லா ஆழ்வார்களும் ஸாராம்சத்தில் பேயாழ்வார்களே! ஏன், பக்தமணிகளெல்லாம் இந்த ரகந்தான்.

இத்தகைய பித்தர்கள் உலகம் உய்யப் பிறந்தவர்கள். பக்தஉலகில் மட்டுமல்ல, பலவகை இலட்சிய உலகிலுந்தான். பக்தர்களே பித்தர்களில் சிரேஷ்டர்கள் என்று வேண்டுமானல் சொல்லிக்கொள்ளலாம். பக்தர்களோ பகவானைப் 'பித்தன்' என்பர். சிவபெருமானைப் 'பித்தா பிறைசூடி, பெருமானே! அருளாளா!' என்று சுந்தரர்மூர்த்தி நாயனர் பாடியிருப்பதை அறியாதார் யார்? சிவபெருமானையே 'பித்தன்' என்று சாதாரணமாய்ச் சொன்னபோதிலும், திருமாலையும் தொண்டரடிப்பொடியாழ்வார் 'பித்தன்' என்கிருர்: 'பித்தனைப் பெற்றும் அந்தோ பிறவியுள் பிணங்குமாறே!'

பித்தனை பெருமானை எல்லாம் வல்ல சித்தன் என்றும் கூறுவதுண்டு. எனவே 'பித்தனும் சித்தனும்' அவனே! பக்தர்களைப் பித்தர்கள் என்று சொல்வதுபோல், இறைவனது அடியார்களில் ஒரு ரகத்தினரைச் 'சித்தர்கள்' என்றும் சொல்வதுண்டு. பித்தர்களும் சித்தர்களும் அங்குமிங்கும் திரிவதால் இவ்வுலகம் பாக்கியம் செய்திருக்கிறது, தவம் செய்திருக்கிறது, என்று சொல்லவேண்டும்.




# இரு கல்யாணங்கள்

## ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி

"வாருங்கள், வாருங்கள்! என்ன விசேஷம் எல்லோரும் சேர்ந்தாற் போல வந்துவிட்டீர்கள்! அதனால்தான் இன்று இவ்வளவு மழைபோலு!"

"என்ன மாமி, அப்படி சொல்லிவிட்டீர்கள்? நாங்கள் தான் அடிக்கடி வருகிறோமே. மாமியை பார்க்காவிட்டால் எங்கள் கண்கள் பூத்துப் போய்விடாதா? கார்த்திகை மாதம் மழை பெய்யாதா என்ன? எங்கள் வருகை அப்படி அபூர்வமே இல்லை"

"என்ன கலா! நீ ஐப்பசி மாதம் அத்தை பெண் கல்யாணம், சித்தி பெண் கல்யாணம் எல்லாவற்றிற்கும் போனாயே. கல்யாண வைபவமெல்லாம் சொல்லு".

"சரி, கலாவை கிளப்பிவிட்டாயே! நாம் பிரசங்கமாரியைத் தாங்க தயாராக வேணும்..."சகோதரிகளே இப்பொழுது கலாவதி அம்மையார் அருமையான சொற்பொழிவாற்றுவார்கள். கேளுங்கள்" என்று கிண்டல் செய்தாள் பார்வதி.

இதையெல்லாம் ஹாஸ்யமாகக் கொள்ளும் பெரும் மனம் படைத்த கலாவுக்கா கோபம்? "சகோதரிகளே! அப்படியே உன்னத விவாக விஷயத்தைப்பற்றி என்னுடைய சிற்றுரையைப் பொறுமையாக சகோதரிகள் கேட்கவேணும்" என்று ஆரம்பித்தாள்.

"போதுமே உங்கள் தமாஷ்! கலா! விஷயத்தைச் சொல்லு. உங்கள் சித்திபெண் லலியை நான் பார்த்திருக்கிறேன். சுடர்மாதிரி பெண் பளிச் சென்றிருப்பாளே. நல்ல இடமா? சீர் செனத்தி நிறைய செய்தார்களா? மாப்பிள்ளைக்கு உத்தியோகமா?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டு போனாள் சாவித்திரி மாமி.

"இரண்டு கல்யாணங்களும் இரண்டுவிதம் மாமி! சித்தி பெண் நல்ல சமர்த்து. சித்தி சம்சாரி. எங்கள் சித்தப்பா ஊதாரி. ஆதி நாளில் அவர் குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுடன் ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது எவ்வளவோ திருந்திவிட்டார். சித்தப்பாவை வெறுக்கும் அவர்கள் உறவினர்கள் சித்தியைத் தெய்வமாகப் போற்றுவார்கள். அப்படி நடந்துகொள்வாள். அவர்கள் உதவியெல்லாம் வைத்துகொண்டு சித்தி சமத்காரமாய் கல்யாணத்தை நிறைவேற்றினாள்.

லலியும் அதிர்ஷ்டசாலி; சம்பந்திகள் தங்கமானவர்கள்; மாப்பிள்ளை பம்பாயில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் இருக்கிறான். முகத்தில் ஒரு சாந்தமும் அநாயாஸ நடையும் அவனுடைய குணத்தைக் காட்டுகிறது. சித்தி ஒரு சின்ன குடும்பத்தை நடத்த உபயோகமான பாத்திரங்களும், தட்டுமுட்டு சாமான்களும் குருவிமாதிரி சேர்த்துவைத்திருந்தாள். புடவை, வேஷ்டி, திருமங்கல்யம், இதர சுப பொருள்களை பொறுக்கி வாங்கி கல்யாணத்தை நன்றாய் நடத்தினாள்.

சம்பந்திகளும் மிகுந்த திருப்தியுடன் மருமகளை மகாலக்ஷ்மியே தம்மிடம் வந்ததாக பாவிக்கும் போக்குள்ளவர்கள். இப்படியே நீடிக்கும்

என்பதிலும் ஐயமில்லை. அவர்கள் வீட்டு பெரிய மருமகள் ஏழைவீட்டுப் பெண்ணைத்தான் செய்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணைக் கொண்டாடி அவர்கள் தம்பெண்ணைவிட போற்றி நடத்துகிறார்கள்.

லலி குணமோ கேட்கவேண்டாம். வசனம் சொல்லுவார்கள். கண்ணுக்கழகில் மெச்சிக்கொள். காரியசீரில் மெச்சிக்கொள், பெண்ணுக் கழகில் மெச்சிக்கொள், பிறந்தகத்து அழகில் மெச்சிக்கொள் என்பார்கள். பிறந்தகத்து சீர் கொஞ்சம் மட்டமாக இருந்தாலும் மற்றைய பாகங்களில் நிறைந்தபெண். ஷட்குணயசாலி, குலதர்மபத்தினி என்பதற்கிணங்க ஒரு பாரதநாட்டு உத்தம மனைவியாக இருக்க லலியை சித்தி வளர்த்திருக்கிறாள். இவள் புருஷன்வீட்டில் எல்லோருடைய மனதையும் கவர்ந்து கட்டிவிடுவாள்; சந்தேகமேயில்லை''

''பார்த்தாயா, கலா சித்திபெண் கல்யாணத்தையும் கல்யாணப் பெண்ணையும் புகழ்ந்தது ஒரு பிரசங்கமாக இல்லையா? என்ன கல்யாண வைபவத்தை அளக்கிறாயே. ஒரு நல்ல கச்சேரி உண்டா? தேநீர் விருந்து, போட்டோ இவையெல்லாம் கிடையாதா? இதெல்லாம்கூட இல்லாத கல்யாணம் என்ன பெரிய வைபவம்?'' என்றாள் பர்வதம்.

''என்ன பர்வதம், நீ தெரிந்துதான் பேசுகிறாயா? எல்லாராலும் கச்சேரியும், விருந்தும் வைக்கமுடியுமா? வரவர உனக்கு விஷயமே தெரியாமல் மூளை மழுங்கிவிட்டதே!'' என்றாள் கமலா.

''ஆமாம்! மழுங்கிவிட்டால்தான் என்ன, சாணைபிடிக்க கலாதான் இருக்கிறாளே. ஒரு மணி நேரம் கல்யாணத்தைப்பற்றி அளாவினாளே. இந்த நிகழ்ச்சிகள் இல்லாத கல்யாணம் எடுக்குமா?''

''கமலா! ஏன் பர்வதத்தை பரிகசிக்கிறாய்? பர்வதம் நிஷ்கபடியென்று ஆதியிலேயே சொல்லிஇருக்கிறேன். அத்தைபெண் கல்யாணத்தையும் விவரமாகச் சொல்லுகிறேன். அந்த கல்யாணம் தடபுடல்தான். எது உண்மையான மனம் நிறைந்த ஆனந்த கல்யாணமென்று நீயே சொல்லு.

''அத்தைக்கென்ன? வேண்டிய பணம் இருக்கிறது. தங்கமும் வெள்ளியும் நிறைத்திருப்பார்களல்லவா?'' என்றாள் சாவித்திரி மாமி.

''ஆம் மாமி! அத்திம்பேர் கையில் எட்டு வித கம்பெனிகள். கொள்ளை லாபம். பெரிய பங்களா, ஆள்படை, வண்டிவாகனம் தோட்டம்துரவு வீடுவாசல், நகைநட்டு ஒன்றுக்குமே பஞ்சமில்லை.

பெண் சசிகலா பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறாள். அத்தையும், அத்திம் பேரும் செல்வமாக வளர்த்திருப்பதால் அவளுக்கு சூதுவாது விஷய ஞானம் ஒன்றுமே தெரியாமல் ஓயாமல் ஆடை அலங்காரமும், சிநேகிதிகளுடன் சுற்றுவதும், ஸினிமா, பீச்சு, இப்படியாக வளர்கிறாள். பார்ப்பதற்கும் லலியைப்போன்ற அழகில்லாவிட்டாலும் சாதாரண ரூபமுடையவள்தான். சம்பந்திகள் பெரிய கை. மாப்பிள்ளை மேல்நாட்டுப் படிப்பு; பெரிய உத்தியோகம். இப்படிப்பட்ட சம்பந்தத்தில் என்ன குறைவு இருக்கிறது?

ஆனால் சம்பந்திகளுக்கு ''போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்னும் உண்மை தெரியாமல், தாங்களும் கௌரவத்தை இழந்து பிறரையும் தொந்திரவு செய்கிறார்கள். சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குச் செய்தும் மோட்டார் பிடிக்கவில்லையென்று மாப்பிள்ளை ஆரம்பித்தான். அவன் தலை நிமிர்வும் கோணச் சிரிப்பும், மகா கர்வியாகக் காணப்பட்டான் சம்பந்தி அம்மாள் உபசரணை போதவில்லை, புடவை புதுமோஸ்தரில்லை, பெண் சமத்து போதாதென்று இப்பவே சொல்ல ஆரம்பித்தாள்.

மாப்பிள்ளையின் தங்கைகள் நான்குபேர்கள். அவர்கள் பெரிய படிப்பு படித்து பட்டம் பெற்றவர்கள். அரைப் பின்னலும் கத்திரித்துக்

கொண்டமுடியும் உதட்டுச்சாயமும் புடவை வேஷமும் பெண்கள் ஆவிகள் மாதிரி தோற்றம். காணுகதை கண்டதுபோல சிரிப்பும் எக்காளமும் ஆங்கிலப்பேச்சும் சகிக்கவில்லை. அடிக்கொரு தடவை கல்யாணப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்து பரிகசிப்பது. இப்படி கொஞ்சம் கூட படிப்புக்குகந்த பண்பாடில்லை.

தலை சிறந்த பாடகியின் கச்சேரி அமோகமாக நடந்தது. சம்பந்திகள் ஒருவராவது கச்சேரிக்கு வரவில்லை. ஸரிகம ததிிணம் என்று என்ன கச்சேரி! காட்டுபுறம்! நாகரீகத்திற்கேற்க ஆங்கில நடனம், அரை கிர்வாண நடனம் இவைகளெல்லாம் வைக்காமல் இந்த கச்சேரியை யார் கேட்பார் களென்று சொன்னார்களாம். மாப்பிள்ளை அந்தப் பக்கமே வரவில்லை.

அத்திம்பேருக்கு நிறைய சிநேகிதர்கள். பெண்மட்டும் கல்யாணப் பந்தலில் உட்கார்ந்து இருப்பதைப்பார்த்து வந்தவர்கள் கேட்காதவர்களே இல்லை. மாப்பிள்ளைக்குத் தலைவலியென்று அத்தையும் அத்திம்பேரும் முழுப்பொய்யைச் சொல்லி கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளப் பார்த் தார்கள். ஆனால் விஷயம் சிலருக்குத் தெரிந்தது. சிலருக்குத் தெரியாமல் அனுதாபமாகப் பேசிப்போனார்கள்.

சசிகலா முகத்தில் எப்போதும் விளையாட்டும் பேதமையும் நிஷ்களங்க மாக குழந்தைபோல் தாண்டவமாடும்; அப்படிப்பட்டவளை விசனமும் பெருமூச்சும் கண்ணில் நீருமாய்ப் பார்க்கும்பொழுது மிகவும் கஷ்டமாக இருந்தது. நாகரீகத்தைப் புரிந்துகொள்ளாமல் கர்வத்தையும் அகங்காரத் தையும் நாகரீகமாகக்கொண்ட அந்த சம்பந்திமடைகளுடன் சசிகலா தன் வாழ்நாளை எப்படி நிம்மதியாகக் கழிப்பாள்? அந்த குட்டையில் ஊறின மட்டையான மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானை பார்த்தால், அவன் பிறப்ப தற்கு முந்தியே கர்வம் பிறந்துவிட்டதை அறியலாம்.

அத்தைக்கும் அத்திம்பேருக்கும் இவ்வளவு பெரிய இடமென்று ஆசைஆசையாக சம்பந்தம் செய்தும் மனதிற்கு நிம்மதியில்லாமல் சசி யும் சந்தோஷமில்லாமல் இருப்பது நிர்ஜீவனுப் விட்டார்கள். இப்பொ ழுது சொல் எந்த கல்யாணம் உயர்வு, பர்வதம்! மனம் நிறைந்து சம்பந்திகளும் தம்பதிகளும் ஒத்து இனிமை பருப்பு பாயஸத்துடன் ஆனந்தமாய் சாப்பிடுவது மேலா? ஆயிர ஆயிரமாக வாரி இறைத்து பரஸ் பர ஒற்றுமையின்றி போலி கௌரவத்தில் வாயைத்திறக்க வழியில்லாமல் செய்யும் கல்யாணம் உயர்வா?

"வாஸ்தவம்தான், கல்யாணமென்றால் சட்டியா, பானையா மாற்ற? இந்த அசட்டுத்தனம் போகணும். மற்றையநாடுகளைப்போல விவாக ரத்து விரும்பினால் செய்துகொள்ளவேண்டியதுதான்!" என்றாள் கமலா.

அப்படி சொல்லாதே கமலா! தலையை வலிக்கிற தென்றால் தலையை வெட்டி விடுகிறோமா? தலைவலி வராமல் பாதுகாக்கத்தான் பார்க்க வேணும். சமூகம்தான் திருந்தணும். ஏனைய நாடுகளில் இந்த விவாக தால் கல்யாணத்தின் பயங்கரம் சொல்லத்தரமில்லை. நம்நாட்டில் வாழ்வின் தத்துவமே தெய்வீகம்தான். விவாகம் வாழ்வின் அடிப்படையான சடங்கு. எனவே நம்முடைய மணம் தான் நம்காலத்திலும் பிற்காலத்திலும் சந்ததி களுக்கும் பெரும் நன்மையையும் ஆணிவேரையும் அமைக்கிறது.

"சரி! வாருங்கள்! மழை வரும்போலிருக்கிறது. இன்னொரு நாள் சர்வதேச கல்யாணங்களையும், புராதன விவாகத்தையும் பற்றி பேசு வோம்" என்றாள் பர்வதம்.

"இருங்கள்! இன்று வெள்ளிக்கிழமை; மஞ்சள் குங்குமம் பெற்றுக் கொண்டு போகலாம்"

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### பாம்பா ? பேயா ?

இரண்டாவது மாடி ப்ரார்த்தனை ஹாலில் ஒரு இரவு சுமார் 20 பெண்கள் படுத்திருந்தார்கள். ஒருத்தியின்மேல் ஒரு குட்டிப்பாம்பு ஊர்ந்து சென்றது. வழுவழுவென்று அவள் கைமேல் அந்தப்பாம்பு சென்ற உணர்ச்சியினால் அவள் தூக்கம் கலைந்து பயந்து "பாம்பு பாம்பு" என்று கத்திவிட்டாள். இந்த அகோரமான கத்தலைக்கேட்டு மற்றப்பெண்களும் ஒன்றும் புரியாமல் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு மேலே மூன்றுவது மாடியிலுள்ளவர்கள் கீழேயுள்ளவர்கள் எல்லாரும் வந்து கூடினார்கள். ப்ரார்த்தனைஹாலில் பக்கத்து அறையில் படுத்திருந்த நான் எழுந்து விளக்கைப் போடுவதற்குள் ஒரே அமளிதுமளியாகிவிட்டது.—எல்லாம் 5 நிமிஷந்தான். பிறகு எல்லா விளக்குகளையும் போட்டுக்கொண்டு பாம்பைத்தேட ஆரம்பித்தோம். உண்மையில் பாம்பா அல்லது சொப்பனத்தில் பாம்பா என்று அந்த மாணவியைக்கேட்டுக்கொண்டே தேடினபோது பக்கத்தில் ஒருசிறு அறையில் ஒரு தையல்துணியைச் சுற்றிவைத்திருந்த ஒரு கடிதச்சுருளை நான் எடுத்தேன். அதில் மறைந்துகொண்டிருந்த பாம்பு, பாவம் ! வெளியில் வந்து தோட்டக்காரன் தடிக்கு இரையாயிற்று.

மறுநாள் அதிகாலையில் பக்கத்து வலையர் சேரியிலிருந்து மீசை நரைத்துப்போய் சுமார் 90 வயது மதிக்கக்கூடிய ஒருகிழவனும், இன்னும் 2 வலையர்களும் வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிழவன் அந்தச் சேரியிலேயே பிறந்து வளர்ந்தவன் என்றும் ஐஸ்ஹௌஸைப்பற்றியெல்லாம் தனக்குத் தெரியுமென்றும் அங்கு பேய்பிசாசுகள் பக்கத்துச் சுடுகாட்டிலிருந்து வருவது உண்டென்றும் முக்கியமாக என் அறைக்குப்பக்கத்தில் வெளியிலுள்ள ஒரு முருங்கை மரத்தில் நிரந்தரமாக ஒரு பேய் இருப்பதாயும் அதுதான் வந்து பசங்களைப் பயப்படுத்தியிருக்குமென்றும் பசங்களுடைய அலறல் முதல்நாள் இரவு தங்களுக்குக் கேட்டது என்றும் பன்னிப்பன்னி சொன்னான். பிறகு அவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன்—அந்தக் கிழவன் உடனே "அந்த மரத்திலுள்ள பிசாசுக்கு ஒரு ஆடும் கோழியும் பலிகொடுத்துவிட்டால் அதன்பிறகு அந்தப் பிசாசு திருப்தியடைந்து பசங்களை பயமுறுத்தாது" என்று சொன்னான். பேய் பிசாசு அல்ல பாம்புதான் ஒன்று வந்தது என்று நான் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பினேன். அவர்கள் தங்களுக்கு ஒரு ஆடும் கோழியும் கிடைக்கவில்லையே என்று மிகுந்த அதிருப்தியுடன்தான் போனார்கள்.

### திருடனா ? ப்ரமையா?

மற்றொரு சமயம் இரவு சுமார் 8 மணிக்கு பெரியவகுப்புப் பெண்கள் சிலருடன் மூன்றும் மாடிக்கு வெளியில் உள்ள திறந்த மொட்டை மாடியிலிருந்துகொண்டு அவர்களுக்கு நக்ஷத்திரங்களைப்பற்றியும் வான சாஸ்திரத்தைப்பற்றியும் சொல்லிக்கொண்டிருந்தேன். அவர்களும் நிரம்ப

ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்ததில் சாப்பாட்டுக்கு அடித்த மணி யோசை எங்கள் காதில் படவில்லை. நாங்கள் இருந்த இடத்துக்கு பக்கத்து ஹாலில் இருந்த பெண்கள் நாங்கள் அங்கிருப்பது தெரியாமல் கதவை தாளிட்டுக்கொண்டு சாப்பாட்டுக்குப் போய்விட்டார்கள். நாங்கள் கதவைத் தட்டினபோது யாரும் திறக்காமையால் ஜன்னல்வழியாக எட்டிப்பார்த்து விட்டு எல்லாரும் சாப்பாட்டுக்குப்போய்விட்டார்கள் என்பதை ஊகித்துக் கொண்டு கதவினருகிலேயே நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தோம். பிறகு மாணவிகள் வந்துவிட்டார்கள் என்னும் அரவம் தெரிந்துகொண்டு ஸ்வாரஸ்யமாக பேசிக்கொண்டே கதவைத்தட்டினோம். 10நிமிஷத்துக்குப் பிறகு ஏன் கதவு திறக்கப்படவில்லையென்பதையறிவதற்கு ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தால் அறையில் யாருமில்லை. 'கதவைத் திறக்காமல் ஏன் போய்விட்டார்கள்? என்பது தெரியாமல் நாங்கள் விழித்துக்கொண்டு ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். சற்று நேரத்துக் கெல்லாம் தோட்டக்காரன் "கேட்" காவல்காரன் சித்தி மூவரும் கனமான இரண்டிரண்டு தடிக்கம்புகளுடன் எதிர்ப்பக்கத்து வாயிற்படி வழியாக உள்ளே வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து சில தைர்யமான மாணவிகள் பயந்த மிரண்ட பார்வையுடன் உள்ளே அங்கு மிங்கும் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். தோட்டக்காரன் மெதுவாய் ஜன்னல் வழியாக வெளியில் பார்க்கிறான்—உடனே நான் "என்னடா, முழிக்கிறாய், திற கதவை" என்றவுடன், அவன் நடுக்கம் நீங்கி "நம்ம அம்மான்னு வெளியேயிருக்காங்க, திருடன்னு இப்படி அமக்களப்படுத்தினீங்களே" என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தான். சாப்பிட்டுவிட்டு பாடம் படிக்கவந்த பெண்கள் நாங்கள் இரண்டுமூன்று பேராக கதவைத்தட்டின வுடன் யாரோ திருடர்கள் வந்து கதவையிடிப்பதாக நினைத்துப் பயந்து போய் கீழே ஓடி திருடர்கள் வந்திருப்பதாக சமாசாரத்தைப் பரப்பி தடிக்கம்புகளுடன் திருடர்களை அடிப்பதற்கு மிகவும் தைர்யமாக வந்து சேர்ந்தார்கள்!

## ருக்மிணியின் சாமர்த்யம்

1917-ஆம் வருஷத்தில் விவாக மாதங்களாகிய சித்திரை வைகாசியில் விவாகமாகி அந்த வருஷத்து இன்ப்ளுவென்ஸா ஜுரத்தில் கணவனை யிழந்து வைதவ்வியமடைந்த நாலைந்து சிறுவயதுப்பெண்கள் ஆச்ரமத்தில் வந்து சேர்ந்தார்கள். அதில் ஒரு பெண் ருக்மிணி யென்பவளை அவள் தாயாருடைய பூர்ண சம்மதியில்லாமலே அவளது அம்மான் ஒருவர் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். அந்தப் பெண்ணுக்கு அப்போது வயது 11, 12 தானிருக்கும். தகப்பனார் சாது. திருநெல்வேலியில் வேலையாயிருந் தார். சம்சாரி. 10 குழந்தைகளுக்குமேல் முன்னும் பின்னும் இணையிணை யாகக் குழந்தைகளை வைத்துக்கொண்டு உதவிக்கு மனிதர்களுமில்லாமல் தாயார் சிரமப்பட்டுக்கொண்டிருந்தாள். மறுவருடம் கோடைவிடுமுறைக்கு ருக்மிணி அவள் பெற்றோர்களிடம் போனபோது அவள் தாயார் அவள் மறுபடி படிக்கப்போகக்கூடாதென்றும் தான் திண்டாடும்போது தனக்கு உதவியாயில்லாமல் இவளுக்கு படிப்பு என்ன வேண்டிக்கிடக்கிறது என்றும் தீர்மானமாக கட்டுப்பாடு செய்துவிட்டாள். அது மாத்திரமா? கூடியசீக்கிரத்திலேயே மடி ஆசாரத்துக்காக வேண்டி அவளுக்கு விதவைக்கோலமும் செய்துவிடவேண்டுமென்று முடிவுசெய்துவிட்டாள். ருக்கு மிணி எத்தனை கெஞ்சிக் கூத்தாடியும் பலனில்லை. அந்த வருஷம் கோடை லீவுக்கு நாங்கள் பாபநாசம் குற்றாலம் போயிருந்தோம். ருக்குமிணி மேற்படி விவரங்களையெல்லாம் எழுதி என் சிரமத்தைப் பார்க்காமல் நான் எப்படியாவது பட்டணம் திரும்பும் வழியில் திருநெல்வேலியிலிறங்கி

அவன் தாயாருக்கு புத்திமதி கூறி தன்னை யழைத்துப் போகவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தன் வாழ்க்கையே பாழாய்விடுமென்றும் சொல்லி அந்தக் கடிதம் எழுதினது தன் தாயாருக்குத்தெரியக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டு அவள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் அவள் சின்னத்தம்பி ஒருவனுக்கு ½ அணா இனாம்கொடுத்து கடிதத்தை போஸ்டில் போடச் செய்தாள். அவள் இஷ்டப்படியே திருநெல்வேலியில் இறங்கி அந்த வருஷம் திருச்செந்தூர் சென்று அலைவாய் உகந்த குமரேசனைத் தரிசித்துவிட்டு ஒருநாள்மாலை ருக்மிணி வீட்டுக்குச் சென்று அவள் தாயாருக்கு வேண்டிய உபதேசம் செய்து ருக்மிணியை எங்களுடனேயே சென்னைக்கு அழைத்துச்சென்றேன். தற்சமயம் ஒரு கவர்மெண்ட் பாடசாலையில் வேலைசெய்துகொண்டு விதந்துவான தன் தாயாரையும் சம்ரக்ஷித்துக்கொண்டுசந்தோஷமாயிருக்கிறாள்ருக்மிணி.

## 1918-ஆம் வருஷம்

ஆச்ரமத்தின் எண்ணிக்கைபெருகிக்கொண்டேவந்தது. பொதுஜனங்களுக்கு ஆச்ரமத்தில் ஒருநம்பிக்கையும் மதிப்பும் பெருகிற்று. புருஷனில்லாத பெண்கள் படித்து முன்னுக்குவந்தால் அவர்களுக்கும் மனச்சந்துஷ்டியும் நல்ல பொழுதுபோக்கும் ஏற்படுவதுடன் அவர்களால் ஜனசமூகத்துக்கும் நன்மை ஏற்படும் என்னும் எண்ணமும் உண்டாயிற்று. மேலும் பொதுவாக பெண்கல்வி அவசியம் என்ற அபிப்ராயம் ஜனங்களுக்கு உண்டான காரணத்தினால் வெளியூர்களில் பெரிய உத்தியோகங்களிலிருந்த சிலர் அந்த ஊர்களில் பெண்கல்விக்கு வேண்டிய வசதியில்லாமையால் அவர்களது விவாகமாகாத பெண்களையும் ஆச்ரமத்தில் சேர்த்துக்கொண்டு படிக்கவைக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டனர். ஆகவே, ஐஸ்ஹௌஸுக்குச் சென்ற நாலைந்து வருஷங்களுக்குள் 25, 30 விவாகமாகாத பெண்களும் வந்து சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் சிலர் ஏற்கெனவே வந்து சேர்ந்திருந்த விதவைப்பெண்களின் சகோதரிகள்.

தமிழ், தெலுங்கு மலையாளம் இந்த இடத்துப் பெண்கள்தான் இதுவரைக்கும் அதிகமாயிருந்தார்கள். சித்தூர், பல்லாரி, கடப்பை முதலான பிற்போக்கான ஜில்லாக்களிலிருந்து யாரும் வரவில்லை மிஸ் லிஞ்ச் பாடசாலைகளைப் பார்வையிடப்போகும் இடங்களிலெல்லாம் அந்த ஊர்களில் இளம் வயது விதவைகள் இருக்கின்றார்களா என்று விசாரிப்பது வழக்கம். ஒரு சமயம் அவர் நெல்லூர் போயிருந்தபோது அங்கு ஒரு ஏழைக்குடும்பத்தைச்சேர்ந்த 11, 12 வயதான ஒரு விதவைப்பெண்ணை ஆச்ரமத்துக்கு அனுப்பும்படி அவள் சகோதரனைத் தூண்டினார்களாம். அப்படி படிப்பதற்கு அனுப்பினால் ஜாதிப்ரஷ்டம் செய்துவிடுவார்கள் என்று பயந்தானாம். அந்த ஜில்லா கலெக்டராயிருந்த ஸ்ரீமான் ராமசந்திர ராவ் என்பவர் அந்தக் குடும்பத்திற்குத் தான்மாதம் ரூ 5 கொடுப்பதாக ஏற்றுக்கொண்டு அந்தப் பெண்ணையனுப்பும்படி அவர்களுக்கு தைரியமுண்டாக்கினார்.

ஒரு சமயம் மிஸ் லிஞ்ச் அவர்கள் புரோத்தத்தூர் போயிருந்தபோது அங்கு நிரம்பவும் வைதிகமான ஒருவருக்கு 13வயதில் ஒரு விதவைப்பெண் இருப்பதாயும், அந்தப் பெண்ணை அவர் தைரியமாகப் படிப்பதற்கு அனுப்பினால் இன்னும் அநேகர் அவரைப் பின்பற்றி அவர்களது விதவைப்பெண்களையும் அனுப்புவார்கள் என்றும் கேள்விப்பட்டு அந்த வைதிகரை வருவித்து அவர் பெண்ணையனுப்பும்படி கேட்டுக்கொண்டாளாம். இந்த வெள்ளைக்கார அம்மாளை நம்பிக்கொண்டு பெண்ணைப்படிக்க அனுப்பினால் கொஞ்ச நாளில் அந்தப் பெண்ணை கிறிஸ்தவ மதத்தில் சேர்த்துவிடுவாள்; எங்கள் குடும்பங்களுக்கு மிகுந்த தலைகுனிவும் அவமானமும் ஏற்படும்

என்று சொல்லி மறுத்துவிட்டாராம். பிறகு மிஸ் லிஞ்ச் அவருக்கு சென்னைக்கு வந்துபோவதற்கு வேண்டிய ரயில்சார்ஜ் பணம் கொடுத்து எனக்கு ஒரு கடிதத்துடன் என்னிடம் அனுப்பினுள். நான் அவரை மரியாதையாக வரவேற்று தெலுங்கில் பேசி சமையல்கட்டுக்கு அழைத்துச் சென்று காண்பித்தேன். அந்த சமயம் சித்தி வைதீகமாக சிவபூஜை செய்துகொண்டிருந்தார். சமையல் அம்மாக்கள் ஸ்நானம் செய்து மடியாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆசார நியம நிஷ்டைகளுடன் உள்ள இந்த ஏற்பாடுகளையெல்லாம் பார்த்த அவருக்கு திருப்தியுண்டாகி உடனே ஊருக்குச் சென்று அவர் பெண் சுந்தரம்மாளை யனுப்பினுர். அவள் வந்துசேர்ந்த சில மாதங்களுக்குள்ளேயே அவரைப்பின்பற்றி இன்னும் சிலரும் அவரவர்கள் பெண்களை அனுப்பினுர்கள்.

1918-ஆவது வருஷம் உலகமகாயுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. யுத்த உதவிக்காக எங்கள் பாடசாலை மாணவிகளைக்கொண்டு ஒரு கதம்பக் கொண்டாட்டம் தயாரித்தோம். பிப்ரவரி மாதத்தில் ஹிந்து ஹைஸ்கூல் ஹாலில் கல்வியிலாகா தலைவர் மிஸ்டர் ஸ்டோன் முதலான பெரியோர்கள் ஆதரவில் கதம்பம் நன்றாக நடந்து சுமார் 600 ரூபாய் யுத்தத்திற்கு அனுப்பினோம்.

ஏப்ரல் மாதம் இரண்டாவது தொகுதி மாணவிகள் S. S. L. C. பரீக்ஷைக்கு எழுதினுர்கள். அவர்களுள் ஆச்ரமத்துப் பெண்கள் 4 பேர். பாலம், அகிலா, லக்ஷ்மிதேவி, பத்மாபாய்—நால்வரும் பரீக்ஷையில் தேர்ச்சி யடைந்தனர். முதல் வருஷத்து மாணவிகள் மூவரும் பேரி ராணிகள் ஊரிக்குப் போனுர்கள். இந்த இரண்டாவது வருஷ மாணவிகளுக்கு டாக்டர் தொழிலுக்குப் படிக்க மிகுந்த விருப்பமிருந்தது. சென்னையில் இண்டர்மீடியட் பரீக்ஷை முடித்துவிட்டுத்தான் மெடிகல் காலேஜில் சேரலாம். மேலும் மெடிகல் காலேஜில் புருஷர்களுடன் சேர்ந்து படிக்க வேண்டும். அந்த சமயம் டில்லியில் லேடி ஹார்டிஞ்ச் மெடிகல் காலேஜ் ஒன்று ஆரம்பித்த 23 வருஷங்களாக நடந்துவந்தது. அங்கு S. S. L. C. முடித்தவர்கள் F. Sc. என்னும் வகுப்பில் சேர்ந்து 2 வருடம் படித்தும் பிறகு M. B. C. M. வகுப்பில் சேர்ந்து 5 வருடம் படிக்கவேண்டும். மிஸ் லிஞ்சினுடைய முயற்சியால் பெற்றேர்கள் அனுமதியுடன் பாலம், அகிலா, லக்ஷ்மிதேவி மூவரும் டில்லியில் F. Sc. வகுப்பிலும் பத்மாபாய் நர்ஸ் வகுப்பிலும் செப்டம்பர் மாதத்தில் போய்ச் சேர்ந்தார்கள்.

1918-ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மிஸ் லிஞ்ச் என்பவள் மிஸ்டர் டிரைஸ்டேல் என்பவரை விவாகம் செய்துகொண்டாள். இருவரும் சற்று வயதானவர்கள். இது ஐரோப்பியர்களுக்கு சர்வசாதாரணமான சம்பவம்.

## கோடை விடுமுறை

அந்த வருஷம் கோடை விடுமுறையில் முதலில் சித்தியும் அம்முக்குட்டியும் திருக்கழுக்குன்றம் சென்று 20 நாள் இருந்துவிட்டு வந்தார்கள். மே மாதம் 7-ஆந் தேதி காஞ்சிபுரத்தில் ராஜதானி கல்விக்கூட்டமும் ஜனசமூக சீர்திருத்தக்கூட்டமும் 5 நாட்கள் நடந்தன. நாங்கள் சிலர் அதற்குப்போனேம். ஸரோஜினிதேவியார் அக்கிராசனம் வகித்தார். அவருடைய தலைமை உபந்நியாசமும் ஸ்ரீயான் சத்தியமூர்த்தியின் வீராவேசம் நிறைந்த பேச்சுக்களும் ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையாரின் ஆழ்ந்த கருத்துக்களமைந்த பேச்சுக்களும் ஜனங்களுக்கு பரவசத்தையும் மனோவேகத்தையும் உண்டாக்கின. கோவில்கள் சில பார்த்துவிட்டுச் சென்னை திரும்பினேம். ஆச்ரமப் பெண்கள் சிலரை அழைத்துக்கொண்டு தின்னனூர் போய் வந்தோம்.

அந்த வருஷம் வெளியூர்களுக்கு நாங்கள் விடுமுறையில் போகவில்லை. பெரிய தெருவில் வாங்கின ஆனந்தவிலாஸ் வீட்டில் முன்கட்டு பின்கட்டு இரண்டுக்கும் மேல்மாடிகள் கட்டப்பட்டன. என் தங்கை ஸ்வர்ணம் B.A. பரீக்ஷையில் தேறி சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜில் L. T. வகுப்பில் சேர்ந்தாள். ஜட்கா வண்டியொன்று அமர்த்தி அதில் வீட்டிலிருந்தே போய்வந்தாள். நடராஜன் L. T. முடித்து புரசையில் ஒரு ஹைஸ்கூலில் வேலைக்கு அமர்ந்தான்.

## முதல் சீர்திருத்தம்

நித்யா, காந்தாமணி இருவரும் திருவல்லிக்கேணி ஹைஸ்கூலிலேயே 6-ஆவது 5-ஆவது பாரங்களில் படித்துக்கொண்டிருந்தனர். பெண்கள் பெரியவர்கள் ஆவதற்கு முன் விவாகம் செய்யவேண்டுமே என்னும் கவலையை விட்டுவிட்டோம். 1910-இலேயே ஸ்வர்ணத்துக்கு விவாகம் செய்ய முயற்சித்தார்கள் என் பெற்றோர்கள். வரதக்ஷிணைகூட இல்லாமல் ஸ்வர்ணத்தை விவாகம் செய்துகொள்ள விரும்பிச் சிலர் கேட்டார்கள். ஆனால், ஸ்வர்ணம் பிடிவாதமாக விவாகம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள். என் தாயாருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. பிடிவாதம் செய்யும் இந்தப் பெண்ணை இப்படியே விட்டுவிடுவதா அல்லது நிர்ப்பந்தமாக கலியாணம் செய்துவிடுவதா என்று யோசித்தார்கள். "எங்களுக்குப் பிற்காலம் நீ என்ன செய்வாய்? பாலம் சாவித்திரியைப்போல உனக்கும் ஒரு நல்ல வரனைத் தேடி விவாகம் செய்துவைத்துவிட்டால் தானே எங்களுக்கு மனநிம்மதியாயிருக்கும்" என்று என் தாயார் சொன்னபோது, "நான் அக்காளுடன் இருப்பேன்" என்று வெடுக்கென்று பதில் சொன்னாள். என் தாயாருக்கு அழுகையே வந்துவிட்டது. முடிவில் விவாகம் என்னும் பேச்சை எடுத்தாலே அழுகின்ற பெண்ணை அவசரப்பட்டுக் கொண்டு விவாகம் செய்யவேண்டாம், பிற்பாடு பார்த்துக்கொள்வோம் என்று தைரியமாக இருந்துவிட்டனர். 13, 14 வயதில் பெரியவளான போது நான்காம் நாள் அவளுக்கு மங்கள ஸ்நானம் செய்துவைத்து புதிய புடவை கட்டி மணையில் வைத்து அந்த எழும்பூரிலுள்ள 4 ஸுமங்கலிகளைக்கொண்டு "ஏத்திபிறக்கி" வேண்டிய சிலரை அழைத்து விருந்து செய்தோம். அந்தக் காலத்தில் இது வேறு யாரும் துணிந்து செய்யாத ஒரு தைரியமான சம்பவம். எங்கள் வீட்டு வைதீகர் ஒருவர் "அம்மா, பெண்களை வைத்துக்கொண்டு எதிர் ஜாமீன் கொடுக்க வகையில்லாமல் தவிக்கும் ஏழைகளுக்கு நீங்கள் வழிகாட்டியாயிருந்து, தைரியத்தை உண்டாக்கினீர்கள். விவாகம் ஆகாமல் பெண்கள் பெரியவர்களாகி விட்டால் அது வெளிக்குத் தெரியாமல் மறைத்துவைப்பதற்கு ஜனங்கள் எத்தனை சிரமப்படுகிறார்கள். இனிமேல் அப்படி மறைத்துவைக்கவேண்டாம்" என்றெல்லாம் திருப்தியாகவே பேசினார். வம்பு பேசினவர்களும் சிலர் இருந்திருப்பார்கள். ஆகவே, எங்கள் குடும்பத்தில் ஸ்வர்ணத்திலிருந்து பெண்களுக்கு அவசரமாக விவாகம் செய்யும் வழக்கம் நீங்கிற்று. புருஷப் பிள்ளைகளைப் போலவே பெண்களையும் படிக்கவைப்பது பழக்கமாகிவிட்டது.

அந்த வருஷம் S. S. L. C. பரீக்ஷை தமிழ் விடைத்தாள்களைத் திருத்தும் வேலை எனக்குக் கிடைத்தது. 59 இடங்களிலிருந்து பேப்பர்கள் வந்தன. திருத்தியனுப்பினேன். அக்டோபர் மாதத்தில் ஆச்ரமத்துக்கு டாக்டராயிருந்த டாக்டர் ஸைமன்ஸன் ரிடயர் ஆகி லண்டனுக்குப் புறப்பட்டார். அவருக்காக ஒரு பிரிவுபசாரம் கொடுத்தோம். அதன் பிறகு டாக்டர் முத்துலக்ஷ்மி ஆச்ரமத்து டாக்டர் ஆகி வாரம் ஒரு முறை வந்து மாணவிகளை கவனித்துப்போவார்.

# அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இராமபிரானுடைய சீலகுணம் விளங்கினவிடங்கள் பலபலவுமுண்டாகிலும் குகன் ஸுக்ரீவன் விபீஷணன் என்ற மூன்றிடங்களை யெடுத்துக்காட்டினதே போதும். வேதாந்த தேசிகன் தயா சதகத்தில் "நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ" என்னும் ச்லோகத்தில் சபரியையும் எடுத்துக்காட்டியிருக்கையாலே அவ்விடத்தையுங் கொள்வோம்.

வான்மீகிராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும், பெருமாள் சபரியினிடம் கலந்து பரிமாறின வரலாறு விசேஷித்து ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லையாயினும் இதர ராமாயணங்களிலுள்ளதைக் கொண்டோ, வான்மீகிராமாயணத்தையே ஆழ்ந்து நோக்கியோ நம் ஆசாரியர்கள் அருளிச்செய்துள்ள விசேஷம் குறிக்கொள்ளத்தக்கது.

ஸ்ரீவசனபூஷணத்தில் (233) "பெருமாள் ஸ்ரீ சபரி கையாலே அமுது செய்தருளினார்" என்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள்—"ரகுகுலதிலகராய் ஆசாரப்ரதாநரான பெருமாள் *சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:* என்னும்படி வேடுவிச்சியாய்வைத்தே குருசுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய் தன்நாவுக்குஇனிதாயிருந்தபலமூலாதிகளெல்லாம்இங்குத்தைக்கென்று ஸஞ்சயித்துக்கொண்டு வரவுபார்த்திருந்த ஸ்ரீசபரி, தன் ஆதராநுகுணமாகத் தன் கையாலே அமுதுசெய்யப்பண்ண அதிஸந்துஷ்டராய் அமுதுசெய்தார்" என்றருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் விசேஷித்து அநுஸந்திக்கத் தக்கவை. இதில் "தன் நாவுக்கு இனிதாயிருந்த" என்கிற வார்த்தையை மாமுனிகள் மூலப்ரமாணமின்றி அருளிச்செய்யார். வான்மீகி (ஸம்க்ஷேபத்தில்) "சபர்யா பூஜிதஸ் ஸம்யக்" என்றவிடத்து ஸம்யக் என்பதில் உள்ளுறையும் பொருளே இது என்று கொள்ளலாம்.

அவளிடத்தில் பெருமாள் இவ்வளவு கலந்து பரிமாறக் காரணமென்ன? என்று சிலர் விமர்சிக்கவும் நேரும். கேண்மின்; குஹனோடு கலந்து பரிமாறினபோது அவன் சில வுணவுப் பொருள்களைக் கொணர்ந்துகொடுத்து இவற்றைத் திருவுள்ளம்பற்றியருள வேணுமென்று வேண்டினன்; அதற்குப் பெருமாள்சொன்ன மறுமொழி—(வால்மீ. அயோ- 50)

"யத்த்விதம் பவதா கிஞ்சித் ப்ரீத்யா ஸமுபகல்பிதம்,
ஸர்வம் தததநுஜாநாமி ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே.

...அச்வாநாம் காதநேநாஹமர்த்தீ நாங்யேந கேநசித்,
ஏதாவதாத்ர பவதா பவிஷ்யாமி ஸுபூஜிதః"

என்பது. 'நான் இந்த வனவாஸத்தில் யாரிடத்திலும் ஏதும் பெற்றுக்கொள்வதில்லையென்று விரதம் கொண்டிருக்கிறேன்; இதோ நமது தேர்க்குதிரைகள் விடாய்த்திருக்கின்றன; அவற்றுக்கு வேண்டிய வுணவுகளையே நான் விரும்புபவன்' என்று சொல்லி அவற்றைத் தாம் கைப்பற்றுமலே யிருந்துவிட்டார் பெருமாள்.

இங்கு பெருமாள் "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" [நான் தானம் வாங்கக்கூடாதென்று வைத்துக்கொண்டிருக்கிறேன்] என்பது அவசியம் சொல்லியாகவேண்டிய வார்த்தையோ? குகன் மதுபர்க்கம் முதலிய சில வுணவுப்பொருள்களைக் கொணர்ந்து கொடுக்க வந்தானே யல்லது தன தான்ய வஸ்த்ராதிகளொன்றும் கொடுக்க வந்திலன். அவை கொடுக்கவந்தால் அப்போது 'நான் ப்ரதிக்ரஹம் பண்ணுவதில்லை' என்று சொல்லி மறுக்க நியாயமுண்டு. தேன் முதலிய காட்டுணவுப் பொருள்களையே கொடுக்கவந்தபோது "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று சொல்லி மறுத்ததானது அவச்யம் ஆராயத்தக்கதன்றே? குகனிடம் இப்படிச்சொன்னவரே சபரியிடம் மறுத்துக் கூறுமல் "அர்ச்சிதோஹம் த்வயா பக்த்யா" என்று உகந்து கூறி அவளுடைய ஸமர்ப்பணையை ஏற்றுக் கொண்டார்.

இது எதனுலென்னில், கீழே நாமெடுத்துக்காட்டியுள்ள ஸ்ரீவசநபூஷண வியாக்கியான ஸ்ரீஸூக்தியில் "குரு சுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய்" என்று மருமமாக வருளிச் செய்திருப்பதை இங்கு விவரிக்கிறோம். சபரியிடம் மிகச்சிறந்ததொரு தருமம் குருசுச்ரூஷை யென்பது இருந்தது. இதைக் கபந்தன் பெருமாளுக்குத் தெரிவித்தனன். "ச்ரமணீ சபரீ நாம காகுத்ஸ்த! சிரஜீவிநீ, த்வாம்து தர்மே ஸ்திதா நித்யம்" என்றும் "ச்ரமணீம் தர்மநிபுணும் அபிகச்ச" என்று முள்ள கபந்தன் வார்த்தைகளில் தர்மசப்தத்தினுல் கூறப்பட்டது குருசுச்ரூஷாதர்மமேயாகும்.

பெருமாளும் சபரியைக் கண்டவுடனே க்ஷேமம் வினவுகையில் "கச்சித் தே குருசுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி!" என்று உன்னுடைய குருசுச்ரூஷை நிறைவேறியதா வென்று கேட்டிருக்கிறுர். அவளும் தான் செய்த குருசுச்ரூஷையைப் பற்றி ஆனந்தமாக விடை கூறியிருக்கின்றுள். "இங்கு என்னுடைய பணிவிடைகளைக்கொண்ட ஆசாரியர்கள் திருநாடுசென்றிருக்கின்றுர்கள். அவர்களது திருவடிவாரஞ் செல்ல எனக்கு அனுமதி தரவேணு"மென்றும் கோரியிருக்கிறுள். இத்தகைய தருமம் குகனிடத்து இல்லாமைபற்றியே அவன் தந்த வுணவுகளைத் திருவுள்ளம் பற்றவில்லை - என்பதாகப் பேராசிரியர்களின் நிர்வாஹம்.

இங்குச் சிலர் வேறுகக் கூறவருவர்; எங்ஙனே யென்னில்; குகன் சபரியைப் போல்பழம் கொடுத்திருந்தாணுகில் பெருமாள் அதை ஸ்வீகரித்தேயிருப்பர். அவன் பழம் கொடுக்கவில்லை யென்பது அந்த ப்ரகரணத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆகவே

குகனிடம் பெற்றுக்கொள்ளாமைக்கும் சபரியிடம் பெற்றுக் கொண்டமைக்கும் இங்குக் கூறிய காரணம் யுக்தமானதன்று என்று சிலர் சொல்லக்கூடும். அவர்கள் "நஹி வர்த்தே ப்ரதி க்ரஹே" என்று குகனிடம் இராமபிரான் கூறியுள்ளதை நன்கு ஆராயவேணும். "குகனே! நீ காய்கனி ஏதாவது கொணர்ந்து கொடுத்தால் ஸ்வீகரிக்கிறேன்" என்றுவது பெருமாள் கூறியிருக்க வேண்டுமே. அங்ஙனம் கூறாது தாம் ஊர் திரும்பிச் சென்று சேருகிறவரையில் ஒருவரிடத்திலும் ஒன்றுமே பெற்றுக்கொள்வ தில்லையென்று ஒரு விரதம் கொண்டிருப்பதாகப் பொருள்படும்படிக் கூறியது ஏதோ தட்டுக்கழிக்கிறபடியாகவன்றோ காண்கிறது.

உணவைக் கைக்கொள்ளும்படியான அதிகாரபூர்த்தி குக னிடம் இல்லையென்பதே பெருமாளுடைய திருவுள்ளம். அக் கருத்தைப் பெருமாள் செவ்வனே தெரிவியாமல் 'நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே' என்று கபடமாகக்கூறிக் கழித்தது அவருடைய பெருங்குணத்திற்குக் குறையன்றோ வென்று சிலர் சங்கிக்கக் கூடும். இதற்குச் சமாதானமாவது, "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று பெருமாள் கூறியது 'யாரிடத்திலும் எதுவும் நான் வாங்கிக் கொள்ளமாட்டேன்' என்றே பொருள்படவேணு மென்கிற நிர்ப் பந்தமில்லை. 'உன்னிடத்தில் வாங்கிக்கொள்ள எனக்கு ப்ரிய மில்லை' என்று சொல்லுவதாகவும் பொருள்படும். அப்படி விருப்பமில்லாமைக்குக் காரணம் கீழே நாம் விவரித்ததே.

வேதாந்ததேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஆறுவது அங்கத்தில், விவேகன் ஆனந்தமாகப் பாடுவதாய்வைத்து அற்புத மான வொரு ச்லோகமியற்றி யுள்ளார்; "பகவதி பரத்வாஜே புக் திஸ் ததா சபரீ க்ருஹே" என்பது அதன் முதற்பாதம். பெருமாள் பரமபவித்ரமான பரத்வாஜாச்ரமத்தில் அமுது செய்தாரென்று கேள்விப்படுவதுபோலவே சபரி திருமாளிகையிலும் அமுது செய்த தாகக் கேள்விப்படுகிறோம்; இது என்ன நீர்மை! என்று ஈடுபட்டுக் கூறியுள்ளார். அதுவும் இங்கு அநுஸந்தேயம்.

"க: குணவாந்?" என்ற வால்மீகியின் வினவுக்குத் தகுதியாக இராமனுடைய மற்றொரு குணவிசேஷமும் அநுஸந்திக்கத்தக்க தாகும். கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் (ச்லோ. 27.) "கோயம் குண: கதரகோடிகத: கியாந் வா கஸ்ய ஸ்துதே: பதம் அஹோ பத கஸ்ய பூமி:!" என்றொரு குணவிசேஷத்தை யெடுத் துரைத்து மாய்ந்துபோகிறார். அதாவது, [யத் தாத்ருசாகஸமரிம் ரகுவீர! வீக்ஷ்ய விச்ரம்யதாமிதி மூமோசித முக்தமாஜௌ.] போர்க்களத்தில் "சசால சாபஞ்ச மூமோச வீர:" என்னும்படியே நிலைகலங்கிநின்ற இராவணனை நோக்கி 'இன்றுபோய் நாளைவா' என்று பெருமாள்கூறி விடைகொடுத்தனுப்பினதுண்டே, இது மிகச் சிறந்ததொரு குணமாகக் குலாவப்படுகின்றது.

"சுரி குழற் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்" என்று திருமங்கையாழ்வார் அருளியபடியும், "பஞ்செனச் சிவக்குமென்கால் பாவையைப் பிரித்தபாவி வஞ்சன்" என்று கம்பர் கூறியபடியும் மஹாபாதகிகளில் தலைவனான அவனை

ஒரு நொடியிலே வதஞ்செய்து தொலைக்கவேண்டியிருக்க, அங்ஙனம் தொலைத்திடாமல் "கச்சாநுஜாநாமி ரணார்திதஸ் த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ் சரராஜ லங்காம், ஆச்வாஸ்ய நிர்யாஹி" என்று விடைகொடுத்துப் போகவிட்ட பெருந்தகையாளனது இக்குணம் ஸ்ரீராமாயணத்திற் காணும் ஸகலகுணங்களினும் மிக மேம்பட்டதாதலால் அதனையும் இங்குக் கொள்ளுதல் ஏற்கும்.

அஷ்டாதச ரஹஸ்யத்தில் தனித்வய மென்னும் ரஹஸ்யத்தில் "கோந்வஸ்மிந்....குணவாந்" என்பதை யெடுத்து விவரித்தருளுகை யில்—"சீலவத்தையாகிறது அபிஷேகவிக்னம் பிறந்ததென்று வெறுப் பின்றியே *வநவாஸோ மஹோதய:* என்று காடேறப் புறப் பட்டுப்போவது, *ஆவாஸம் த்வஹமிச்சாமி* என்று ரிஷிகள் பக்க லிலே சென்று தாழ்நிற்பது, *இங்கரௌ ஸமுபஸ்திதௌ* என்பது, ஜன்ம வ்ருத்தங்களில் குறைய நிற்கிறவர்களை *உகந்த தோழனீ* என்பது, இப்படிகளாலே சீலவத்தையை மூதலித்தது" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அதையும் சற்று விவரிப்போமிங்கு.

"ஜன்மவ்ருத்தங்களில் குறைய நிற்கிறவர்களை உகந்த தோழன் நீ என்பது" என்றதைக் கீழே விரிவாக விவரித்தாயிற்று. மற்றைய விரண்டு விஷயங்கள் இனி விவரிக்கப்படுகின்றன. தசரதசக்ரவர்த்தி இராமபிரானை ஒரு தடவைக்கிரண்டு தடவையாக அழைத்து 'உனக்கு ராஜ்யம் தந்தேன், முடிசூட ஸன்னாஹம் செய்' என்று சொல்லிவிட்டு, அப்படியே ஸன்னாஹங்கள் செய்து முடிந்தபின் ஒரு பெண்பெண்டாட்டியின் வார்த்தைக்கு இசைந்துநின்று 'உனக்கு நாடில்லை, காடுதான்' என்று சொல்ல, அப்போது சிறிதும் மனவேதனையின்றிக்கே 'நாட்டையாள்வதிற் காட்டிலும் காடு சென்று உறைவதே எனக்குப்பரமானந்தம்' என்று உள்ளம் பொங் கிக்கூறியது மஹாகுணம் என்று ஆசிரியர் திருவுள்ளம் பற்றுகிறார்.

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து, (அயோத். கைகே. 108)

> "இப்பொழுதெம்மனோராலியம்புதற் கெளிதோ? யாருஞ்
> செப்பருங்குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
> ஒப்பதே முன்பு பின்பவ் வாசகமுரைக்கக் கேட்ட
> அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா."

என்றார். 'உனக்கு நாடில்லை; காடுதான் நீ செல்லவேண்டும்' என்று சொன்னபோது இராமபிரானது திருமுகக் கமலத்தில் தோன்றிய விகாஸத்தை அப்பொழுது கட்கூடாகக் கண்டவர்கள் சொல்ல வேண்டுமேயல்லது நாமா அதைச் சொல்ல வல்லோம்!' என்று கைவிட்டவர், ஆகிலுஞ் சொல்லுவோமென்று ஒருவாறு சொல்லு கின்றார். காடு செல்வாயென்கிற சொல் செவிப்படுவதற்கு முன்னே இராமனது முகம் தாமரைபோன்றிருந்ததாம்; அச் சொல் செவிப்பட்டதும் தாமரையை வென்று விளங்கிற்றாம்.

இதனால், காடு செல்வதைப்பற்றிச் சங்கடமில்லையென்பது மாத்திரமேயன்றி அளவுகடந்த ஆனந்தமுமுண்டாயிற் றென்ற வாறு. அவ்வளவு ஆனந்தம் எதற்காக வெனனில்; நாட்டில் அரச னாகிச் சிங்காசனத்து வீற்றிருந்தால் பரத்வகுண மொன்றையே

காட்டமுடியுமே யல்லது சீலகுணத்தைக் காட்ட அவகாசமே நேரிடாது. அதிகமாக அக் குணத்தைக் காட்டுதற்கென்றே அவதாரம் செய்த தனக்கு அக்குணம் மிகமிக விளங்குதற்குரிய வனவாஸமே யன்றோ ஆனந்த கந்தமாகும். ஆனதுபற்றியே 'வநவாஸோ மஹோதய:' என்றனன்.

இனி, ரிஷிகள் பக்கலிலே சென்று தாழநின்ற சீலமும் நெஞ்சை யுருக்குவதாகும். மஹர்ஷிகளின் ஆச்ரமங்களிலே தானாகச்சென்று அவர்களைத் தெண்டனிட்டுக் குசலப்ரச்னம் பண்ணவேணுமென்று தானிருக்க, அவர்கள் முற்பட்டுவந்து தம்தம் குறைகளை விண்ணப்பஞ் செய்தபோது *ப்ரஸீதந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா, யதீத்ருசை ரஹம் விப்ரை ருபஸ்தேயை ருபஸ்தித:* என்று அவர்களிடம் இராமபிரான் தான் பொறைவேண்டினது சீலகுணத்தை விளக்கினபடியே யாகும்.

"அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்று சொன்ன விச்வாமித்ர முனிவனை நோக்கி, *இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்* என்று தன்னையும் தம்பியையும் அவனுக்கு வேலையாட்களாகத் தெரிவித்துக்கொண்டதும், உமக்கு விருப்பமானபடியெல்லாம் எமக்குக் கட்டளையிட்டு எங்களிடம் பணிவிடை பெற்றுக்கொள்ளவேணுமென்றதும் ஒப்புயர்வற்ற மஹாகுணமன்றோ. இன்னமும் விரிப்பிற் பெருகுமென நிற்கிறோம்.

(இனி இரண்டாவது திருக்குணம்.—அடுத்த இதழில்.)

---


# குஷ்டம் ★ வெண் குஷ்டம்

LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.


கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானல் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனல் அவை திருப்பி அனுப்பப்படும்.

*தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.*

ஆப்பிரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt.)    TANUKU, M. S. M.



# ஆத்ம சோதனை

★

கவியோகி

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

## 29. போ உன் அம்மாகிட்ட.

கோடை விடுமுறை. அம்மாளும் நானும் மதுரைக்கு வந்தோம். மாமா என்னை என்றுமில்லாத பிரியமுடன் பேணினார்; ஒருநாள்முழுதும் அம்மாளுடன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார். தத்து தத்து என்று என்காதில் விழுந்தது. ஆம், என்னை மாமா தெத்தெடுத்து, பெரிய அந்தஸ்திற்குக் கொண்டுவர நினைத்தார். இதை நான் யூகித்தே கோயிலுக்குச் சென்று அம்பிகைமுன் நின்று "அம்மா நான் உன் குழந்தை, பணம் எதற்கு? உன் அருளே வேண்டும். என்னைக் காப்பாற்று" என்று வணங்கிவந்தேன். அப்போது சுந்தரேசர் பிராகாரத்தில் "மற்றுப்பற்றெனக்கின்றி நின் திருப்பாதமேமனம் பாவித்தேன்" என்ற பாசுரம் நடந்தது. தமிழ் வேதம் என் உள்ளத்தைத் தொட்டது...

ஐந்தாறுநாட்கள் இப்படியே சென்றன. புதன்கிழமை மாலை; அம்மா "வாடாசெல்லம்" என்று எனக்கு மகமல்பட்டில் செய்த இஜார், கோட்டுமாட்டிக் குல்லாவும் போட்டாள். மாமா என்னை அன்புடன் தமது நிதிச்சாலைக்கு அழைத்துச்சென்றார். முதலில் கிராமபோன் வைத்தார். "இனியேது எனக்குனருள் வருமோ எனக் கருதி ஏங்குதே நெஞ்சம் ஐயோ" என்ற தாயுமானார் பாடல் என் மனதைத் திறந்தது. "இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பரென்று எண்ணவோ திடமில்லையே!" என்று நானும் சேர்ந்து பாடினேன். "படவா! நீ இந்தமாதிரி பாட முடியுமோ?" என்றார் மாமா. "திருவருள் இருந்தால் பாடுவேன்" என்றேன். பிறகு "மாதர் பிறை கண்ணியானை...கண்டறியாதன கண்டேன்" என்ற தேவாரம். நானும் "கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று பாடினேன்..."செல்லம்! கண்டறியாதன எல்லாம் காட்டுகிறேன் பார்" என்று மாமா என்னை உள்ளே அழைத்துச் சென்றார். ஆவலாகக் சென்றேன். 'பார்' என்று மாமா என் முகத்தைப் பார்த்தார்.

பெட்டகம் திறந்தது. செடிப்பவுன்களும் மோகராக்களும் நவமணிகளும் குவிந்து கிடந்தன. வெள்ளி தங்கச்சாமான்கள் பல, பளபளபள...

மாமா:—பார் கண்டறியாதன...

நான்:—இதுதானா பூ...இதெல்லாம் உனக்கு ஏது மாமா?

மாமா:—எல்லாம் என் சொத்துடா...செல்லம்.

நான்:—உன்னதா? இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்ப ரென்று எண்ணவோ திடமில்லையே...இப்போதுதானே இதைக் கேட்டோம்.

மாமா:—அதிகப்ரசங்கி! வேதாந்தம் வேண்டாம்! கேள் செல்லம்; இந்த பங்களா உனக்கு வேண்டுமா?

நான்:—ஆகாச பங்களா போதுமே. எவ்வளவு பெரிய பங்களா...

மாமா:—அதிகப்ரசங்கி கேளடா!...இந்தப் பவுன், மோகரா, நகை, வெள்ளி, தங்கம் எல்லாம் பார்......எனக்கு எவ்வளவு சொத்திருக்கிறது பார்.

நான்:—இதெல்லாம் எதற்கு மாமா? யாருக்காக வைத்திருக் கிறாய்?

மாமா:—உனக்குத்தானடா.......செல்லம், இந்த மாளிகை, பணம் எல்லாம் உனக்குத் தருகிறேன்...எனக்குப் பிள்ளையாயிருக் கிறாயா?

சிறிது திகைத்து நின்றேன்...நான் மட்டும் சரி என்று தலை அசைத்திருந்தால், போதும். மறுநாளே தத்தெடுத்திருப்பார். என் விதியே மாறியிருக்கும். நான் பெரும் செல்வனாகி பாரிஸ்ட ராகி, மாடியில் சுருட்டுவிட்டுக்கொண்டிருப்பேன். ஆனால் யோகி யாயிருக்கமுடியாது. எனக்கு இன்னது சொல்வதென்றே தெரிய வில்லை. அப்போது வாசலில் ஒரு அந்திப்பிச்சைக்காரன் வந்தான். 'அம்மா பிச்சை!...பசி பொறுக்கமுடியவில்லை அம்மா...ஏழைக் கிரங்கும் அம்மா'...என்னும் பிச்சைக்காரன் குரல் என் மனதில் பாய்ந்து ஒரு புரட்சியை உண்டாக்கியது...

மாமா:—என்னடா செல்லம் சும்மா முழிக்கிறாய்? பார் எவ் வளவு பவுன் எல்லாம் உனக்கு; எனக்குப் பிள்ளையாயிரு...ஆகட் டுமா...சொல்.

நான்:—மாமா நான் அம்மா பராசக்தி மதுரை மீனாக்ஷிபிள்ளை. உனக்கேன் பிள்ளையாவேன்?

மாமா:— ஹு என்னடா சொன்னாய்?...செல்லம்! நீ என் பிள்ளை; உனக்கு இந்த பங்களா சொத்து சுகமெல்லாம் தரு கிறேன். உன்னை பாரிஸ்டராக்குவேன்...

நான்:—இவ்வளவு சொத்து எதற்கு மாமா?...

மாமா:—எதற்கா......படாவா...னென்றாய் சாப்பிட்டு சுகமாக அட்டணக்கால் போட்டுக்கொண்டிருக்கலாம்...

நான்:—மாமா! நாம் சும்மா சாப்பிட்டிருக்கவா வந்தோம்... நான் சாப்பாட்டுராமனில்லை; நான் ஒன்று சொல்கிறேன். இதெல்

லாம் என் அம்மா தந்த சொத்து. அதோ ஏழை அலறுகிறான்! ஏழைக்கு எல்லாம் தா. புண்ணியமுண்டு.

மாமா:—சை! அதிகப்ரசங்கி. குட்டிவேதாந்தி, சொன்னதைக் கேள். இரு என் பிள்ளையாக....சொத்தை அனுபவி...

மாமா:—இதோ அனுபவிக்கிறேன் மாமா...

நான் பெட்டகத்தில் குவிந்த பவுன்களில் கைபோட்டு அள்ளினேன். 'இதெல்லாம் அந்தப் பிச்சைக்காரனுக்கு' என்று ஓட அடியெடுத்தேன். மாமா கண் சிவந்தது..."படவா அதிப்ரசங்கி.. சிசி!" என்று கையிலிருந்ததைப் பிடுங்கிப் பெட்டகத்தில் போட்டார். டப்பென்று அதை மூடிப்பூட்டினார். நான் வெளியே வந்துவிட்டேன். அவரும் கஜானாவைப் பூட்டிவிட்டு வந்தார். அப்போது என் தாய் காமாக்ஷிவந்து "செல்லையா மாமாபிள்ளையாயிரு.. இந்த பங்களா எல்லாம் சொத்தெல்லாம் உனக்கே"...என்று கொஞ்சலாகச் சொன்னாள். நான் ஏதோ ஆவேசத்தில் விறிட்டேன்.

நான்:—ஏனம்மா உனக்கும் இப்படிப் புத்தி போனது. நான் அம்பிகைபிள்ளை.

மாமா:—அப்படியானால் அம்பிகைதான் உனக்குச் சோறு போடுகிறாளோ...?

நான்:—தடையில்லாமல்; எனக்கு உனக்கு ஈ எறும்புக்கும் என் அம்மா சுத்திசக்திதான் சோறுபோடுகிறாள்.

மாமா:—அப்படியானால் போ படவா உன் அம்மாளிடம்... இன்றிவு எப்படிச் சாப்பிடுகிறாயோ பார்க்கிறேன். போ உன் அம்பிகையிடம்...

கட்டளை பிறந்துவிட்டது. நான் மௌனமானேன். பேசாமல் மாடியில் ஏறி கோயில் கோபுரத்தையே பார்த்திருந்தேன். அது 'உன் அம்மா இங்கே இருக்கிறாள் வா' என்று அழைப்பதுபோல் இருந்தது. நான் மெல்லக் கொல்லைப்புறமாகநழுவி ஆவேசமாக அம்மன் சந்நிதிக்கே ஓடினேன். உலகையே மறந்தேன்.

## 30. அடைக்கலம்

கூட்டமில்லை. பட்டரும் இல்லை. அம்மாமுன் நின்றேன். "ஓம் சுத்தசக்தி நீயே என் அம்மா...நான் உன் பிள்ளை. என்னைக் காப்பாற்று தாயே" என்றதே நினைவிருக்கிறது. பிறகு அம்பிகை பாதத்தில் விழுந்தேன். பாதத்தைத் தொட்டேன்...நின்றேன்... செல்லமுடியவில்லை. அப்படியே சந்நிதானத்தில் சாய்ந்தேன். உடலை மறந்தேன். விம்மிவிம்மி அழுதேன். இதயம் பட் பட் என்று குதிரை ஓட்டம்போல் அடித்துக்கொண்டது. நரம்புகளில் எறும்பூர்வதுபோல் ஓர் மின்சார விறுவிறுப்பு; மனதில் புதிய எக்களிப்பு; உள்ளத்தில் பனிக்கட்டி வைத்ததுபோல் ஓர் குளிர்ந்த இன்பம். கடுங்கோடையில் வேர்த்து விறுவிறுக்தவனுக்கு, தேனும் பாலும் இளநீரும் கலந்துகொடுத்தால் எப்படி யிருக்கும்? அத்துடன் தெளிந்த பாலாற்றில் நீந்தினால் எப்படியிருக்கும்? அப்படிப் பட்ட அனுபவம் அந்த நிமிஷத்தில் உண்டானது. நாவில் ஒரு சுழற்சி யெழுந்தது. மூளையில் புருவநடுவிலிருந்து உச்சி மூளையூடே

ஒரு தீபம் எரிவதுபோல்ஒளி பொலிந்தது. ஐந்துநிமிஷம் அதே அனுபவம்; பிறகு சட்டென்று எழுந்தேன். என்னையாளுடைய சுத்த சக்தி முகத்தைத் பார்த்தேன்; புன்னகை பூத்திருந்தது. அபயக் கரம் "அஞ்சாதே மகனே" என்பது போலிருந்தது. என் முன் விளங்கியது அப்போது சிலையாகத் தோன்றவில்லை. என் குழந்தையுள்ளத்தில் உருக்கொண்ட சுத்தசக்தி வடிவாகவேயிருந்தது. நான் "அம்மா அம்மா அம்மா" என்றேன். பிறகு "அம்மா பரதேவி தயாபரியே" என்றேன்....அதைத்தொடர்ந்து வந்தது பாட்டு:

அம்மா பரதேவி தயாபரியே!
சும்மா உலகின் சுமையாக இரேன்!
எம்மாத்திரமுன் பணியிங் குளதோ
அம்மாத் திரம்வைத்து, அடிசேர்த்தருள்வாய்.

பரதேவீ நான் உனக்காகவே உன் பணிக்கே வாழ்வேன். எம் மட்டில் உன் பணியுள்ளதோ அந்தமட்டில் இந்த வினையுலகில் வாழ்வி. காரியம் முடிந்ததுமே என்னை உன் திருவடியில் சேர்த்துக்கொள். ஓம் சுத்த சக்தி என்று வணங்கி, நேராக எனது தியானபீடமான வன்னிமரத்தை நோக்கினேன்.

நான் வெளியே வந்தபிறகுதான் கூட்டமும் வந்தது. அதுவும் வியப்பே. நாலைந்துபேர்கள் மட்டும் என்னைக் குறிப்பாகப் பார்த்தார்கள்; நான்ஒரேநோக்காக வன்னிமரத்தடியில் அமர்ந்தேன்.

## 31. பிரசாதம்

எத்தனைமணி என்று தெரியாது. கணகணவென்று சந்நிதி மணியடித்தது; எனது மண்டையில் வண்டும் சங்கும் அருவியும் சேர்ந்து பாடுவது போன்ற நித்திய நாதானந்தம் என்னுள் இசைத்தது. அந்தி தீபாராதனை யாகிறது. தேவாரதிருவாசகங்கள் முழங்குகின்றன. "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி" என்ற தேவாரநாதம் காதுகுளிர வருகிறது. உள்ளே ஒரு பிரார்த்தனை. "அப்பனே அம்மையே" நானும் இந்தமாதிரி அருட்பாடலால் உன்னை ஆராதனை செய்ய அருள்! பிஞ்சுக்கவி ஒன்று எழுந்தது:

பிறந்ததும் உனக்கே, வளர்ந்ததும் உனக்கே
பிதற்றிடும் கவியும் உனக்கேதான்.
துறந்ததும் உனக்கே கரைந்ததும் உனக்கே
சுத்த சுதந்தரச் சுடரே ஓம்!
நிரத்தரமான பரஞ்சுட ரொளியே!
நிலவிடும் ஞான விளக்காகும்
வரந்தரு வாயென் மனதினில் வளரும்
வானமுதே அருளுருவே ஓம்...

அருளுருவே ஓம் சுத்தசக்தி" என்று நான் வாய்விட்டுச் சொன்ன போது "யாரது" என்று சத்தம் கேட்டது. நான் இருந்தஇடம் இருள் மூலை; நான்தான் என்றேன். யார் நீ?...என்று வந்தார் தேவேந்திரபட்டர். அவரை எனக்குத்தெரியும், என்னை அவர் அறிவார்...அட நீயாடா...இந்தா பிரசாதம்" என்று இனிய சக்கரைப்

பொங்கல் தந்தார். என்ன வியப்பு! என் அம்மா எனக்கு அன்னமும் அளித்தாள். ஆச்சரியம்! அன்று யாரோ கட்டளைநடத்தி வினியோகம் செய்வித்தார். அதை எல்லாருக்கும் தந்தபிறகு பிராகாரத்திற்கும் கொண்டுவந்த பட்டர் என்னையும் கண்டு தந்தார். அதுவே உண்மை; என்றாலும் பராசக்தியே என் உட்பசி தீர்த்ததாக உணர்ந்தேன். அன்றுமுதல் நான் யாரிடமும் கையேந்தியதில்லை. பசி என்று பறந்ததில்லை. உணவு என்னைத் தேடிவந்தாலே உண்பது; எனது உட்புறப்பசிகளையும் என்னையும் என் வாழ்வையும் சுத்தசக்திக்கே பூரணசரணுகதியாக்கினேன். பிறகு நடந்ததெல்லாம் திருவருளிச்லைசதவிர எனது முயற்சியே இல்லை. வந்ததும் போனதும் சுத்தசக்தியிச்சை. நான் இருந்தபடியே குழந்தையாயிருக்கிறேன்.

இப்படி நான் உள்ளின்பத்தில் ஆழ்ந்திருக்கும்போது ஊரெல்லாம் என்னைத் தேடித்திரிந்த உறவினர் முடிவில் யாரோ சொல்லக் கேட்டு இந்த இடத்திற்கே வந்தனர். தாயார் "செல்லையா" என்றழைத்தாள். நான் பேசாமல் ஒன்றும்அறியாதவன்போல் "போவோம் வீட்டிற்கு" என்று முன்னுல் ஓடிச்சென்றேன்.

என் வாழ்வு புதுமைபெற்றது. நான் மாறிப்பிறந்தேன். தாயார் மட்டும் என்னை அறிந்துகொண்டாள். மாமா இரண்டாந் தாரம் மணந்துகொண்டார். லக்ஷ்மி பிறந்தாள். அவள் ஜாதகத்தையும் என் ஜாதகத்தையும் மாமா சும்மா பார்த்துப்பார்த்துச் சிந்தித்தார். மற்றொரு நிகழ்ச்சி என் ஞானதாகத்தைத் தூண்டியது.

## 32. ஆனந்தக் களிப்பு

நான் யார்? எதற்காகப் பிறந்தேன்? வந்தவினையென்ன? செல்கதி என்ன?... என்பதை அறிந்தேன். அன்றுமுதல் என் வாழ்க்கை உள்முகமானது. எனது வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறத் தக்க கலைகளையே வளர்த்தேன், அதற்கேற்ற சாதனங்களையே தேடினேன். யோகமே எனது தொழிலானது. அதற்குச் சாதனமாகவே கலையும் கவிதையும் பணியும் உதவின. நான் உலகமாயத்தில் ஆழ்ந்துவிடாதபடி அடிக்கடி உலகியல்லைப இயற்கையிறைவன் ஆயிரம் நாடகங்களாக என்முன் காட்டினுன். உறவினர் பாகச் சண்டையும், மாமி மருமிச்சண்டையும், பொருமைச் சூழ்ச்சிகளும் என்முன் நாடகமாக நடித்தன. நேற்று "தம்பீ" என்றவன் இன்று "தடியா போடா" என்கிறுன். பொய்யும் கோளும் புனைப்பும் சினப்பும் மனிதவாழ்வைப் பாழ்செய்கின்றன. வறுமை மடமை பிணி மூடத்தனம் அடிமைமனப்பான்மை அச்சம் அநீதிகள் அமைதியை உண்கின்றன. உலகம் நரகமாகிறது. பள்ளிக்கூடம் பிரம்படிக் கூடமாயிருக்கிறது. எனக்கும் அதற்கும் ஏழாம்பொருத்தம். அதனுல் வீட்டில் வசவு. எப்படா ஓய்வுநாள் வரும் என்று காத்திருந்து, மதுரைக்குப் போவேன். மதுரை மீனுட்சி சந்நிதியில் என்குறைகளை முறையிட்டாலே மனப்பாரம் நீங்கும். ஏதாவது செய்து பொருளைச்சேர்ப்பது, உண்பது உறங்குவது, வம்படிப்பது, சண்டையிடுவது இவையே மக்கள் வேலையாயின. ஒருநாள் இரவு

சிமைத்துவைத்து, வீட்டில் சிலர் வம்பாடிக்கொண்டிருந்தனர். நான் ஒரு மூலையில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்தேன். "மகாயோகி, சாமியார்" என்று கையாண்டியில் தொடங்கி இந்தப் பயல் பரதேசியாகப் போகிறான்...டே இப்படியெல்லாம் இருந்தாயோ தெரியுமா...என்று கிளம்பி, என்னை எல்லாரும் புண்படுத்தினர்கள். நான் எல்லாம் பொறுத்துக்கொண்டே கோயிலுக்கு ஓடினேன். 'துன்பந் தொலைந்து இன்பம் பெருகத் துணைசெய் அன்னம்மா' என்று பாடி அம்பிகையைத் தொழுது நின்றேன். "அம்மா உலகம் புளித்தது, கசந்தது. இங்கே எனக்கு என்ன வேலை?...நானர்? என்ன செய்யவந்த நான் என்னசெய்கிறேன்? மீண்டும் மனஇருள் மதியை மறைக்கிறதே; ஞானவழி காட்டியருள் தாயே...என்று வணங்கியபோது வெளியே பொற்றாமரைப் பக்கமிருந்து இனிய பாட்டுவந்தது;சுத்தசக்தியே வழிகாட்டுகிருள்... என்று ஓடினேன். பண்டாரங்கள் தப்பறை தட்டிக்கொண்டு பாடினர்:

சங்கரா! சங்கரா! சம்போ

பாராதி பூதம்நீ அல்லை—உன்னிப்
பார் இந்திரியம் கரணம்நீ அல்லை
ஆராய் உணர்வுநீ என்றான்—ஐயன்
அன்பாய் அளித்தசொல் ஆனந்தம் தோழீ!

சங்கரா! சங்கரா! சம்போ!

ஆங்கென்றும் ஈங்கென்றும் உண்டோ—சச்சி
தானந்த ஜோதி அகண்டவடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டால்—பின்னர்
ஒன்றென் றிரண்டென் றுரைத்திட லாமோ?
வந்த வரவை மறந்து—மிக்க
மாதர்போன் பூமி மயக்கத்தில் ஆழும்
இந்த மயக்கை அறுக்க—எனக்கு
எந்தைமெய்ஞ் ஞான எழில்வாள் கொடுத்தான்.

இறைவன் அன்பருக்கன்பான மெய்யன்; ஆனந்த அருட்குரு நாதன். இதயமத்தியில் அருளுணர்வால் அவனைக் காண். பிறகு பரமசுகமாய் வாழ்வாய்" என்ற வேதப்பொருள் என் மனதைக் கொஞ்சியது, பண்டாரங்கள் பாட்டை நிறுத்தியதும் "இது யார் பாடல்" என்று கேட்டேன். மகான் தாயுமானர் பாடல்...ஆஹா என்ன இனியவேதம். நான் தாயுமானரின் மற்றப் பாடல்களைப் பார்த்திருந்தும்; இந்த ஆனந்தக்களிப்பு என்கண்ணிற் படாததேன்? பக்குவம் வரட்டும் என்று இறைவன் காத்திருந்து இன்று அருளினானோ? ஆம், ஆனந்தக்களிப்பு கவலையை அறுத்தெறிந்து வாழ்விற்கும் பேரின்பஅமைதி தந்தது. பராபரக்கண்ணியுடன் தொட்டிலாடிய என் குழந்தைப்பருவம் ஆனந்தக்களிப்புடன் முடிந்தது... இப்போது வயது எட்டு. இனி நான் படித்த கதையைச் சொல்லுகிறேன்.

வளர்ந்தகதை முற்றிற்று.

நீங்க ஆனாலும் இப்பிடி ரகசியமா கண்ணாளம் பண்ணிக்கவே கூடாதுங்க. ஒங்களுக்குத் தகுந்த ஒரு 30 வயசு அம்மாளே பண்ணிகினு இருந்தா எத்தினி சொகம்மா நம்பகுடும்பம் நடக்கும்...என்றுதானே மெஷின்போல் பேசுவதை சர்மா கவனிக்கிறாரா இல்லையா என்பதே சந்தேகமாகவிருந்தது.

அவர் எத்தகைய பதிலும் சொல்லவில்லை. கோபிக்கவும் இல்லை. ப்ரமை பிடித்ததுபோல் உட்கார்ந்திருக்கையில் ஒருவன் கடிதம் ஒன்று கொடுத்துச் சென்றான். சில நிமிஷங்கள் கடிதத்தையும் படிக்கவில்லை. தோட்டக்காரனுக்கும் பதில்சொல்லவில்லை. தோட்டக்காரன் போய் விடுவதாகச் சொல்லியதை மட்டும் கவனித்தார். "டேய்! பேசாமல் உள்ளேபோ! பிறகு நான் உன்னிடம் பேசுகிறேன். நீ இதைவிட்டுப் போகக்கூடாது; ஆணை இட்டிருக்கிறேன்" என்றுமட்டும் கூறி அவனை அனுப்பினார்.

"கலாவதி தூக்குப்போட்டுக்கொள்ளப்பார்த்தாளா ?...தற்கொலையா!" என்றுநினைக்கும்போது அவர்இதயமே வெடித்து விடும் போலாகிவிட்டது. பின்னும் சில நிமிஷங்கள் கழித்துக் கடிதத்தைப் பார்க்கலானார். இவருடைய ஏற்கெனவே அளிந்த புண்ணாகிய உள்ளத்தில் இன்னும் எரிகிற எண்ணெயை ஊற்றுவது போல் தோன்றிவதைத்தது. மறுபடியும் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தார்.

"ஸார்! ஆபத்து......ஆபத்து...உடனே உஷாராகுங்கள்! நீங்கள் சென்றமாதம் ஒரு கண்ட்ராக்டருக்கு உதவி செய்வதாகக் கூறி அதற்காக 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவனுக்குக் காரியத்தை முடித்துக்கொடுத்தீர்களல்லவா? அந்த நோட்டுப் பூராவும் கள்ள நோட்டு என்பதும் அந்த நோட்டுவகையறு அம் மனிதனிடம் கண்டு பிடிக்கப்பட்டு அவனைக் கைதுசெய்து விட்டார்கள். எனக்கும் உமக்கும் உள்ள நட்பிற்காக இதை எழுதுகிறேன். உஷார்! உஷார்!'

என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் உண்மையில் உயிர் இருக்கிறதா, இல்லையா என்கிற நிலைமை உண்டாகிவிட்டது. அப்படியே சாய்ந்துவிட்டார். தூரவிருந்து பார்த்துக் கொண்டிருந்த தோட்டக்காரன் விவரம் புரியாது ஓடிவந்து "எஜமான்! எஜமான்! என்ன சமாசாரம்? சின்னய்ய, சின்னம்மாவுக்கு ஏதாச்சும் ஆபத்து வந்துடுத்துங்களா? ஐயையோ! ஏன் இப்பிடி கட்டை போல ஆயிட்டீங்க ..எஜமான்!...என்று கத்தியவாறு அவரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். அவனுக்கு விஷயம் புரியாது ஒரே பயமும் திகிலும் கப்பிக்கொண்டு வாட்டியது.

N492612
183156.

தேவநாதனும் மிராசுதாரரின் மகனும் சாப்பிட்டபிறகு சிறிது நேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்த பின் ஒருவிதமான முடிவுக்குவந்தார்கள். மறுநாள் அதிகாலையில் வீடுவீடாகச் சென்று பண்ணை ஆட்களெல்லோரையும் தேவநாதன் சந்தித்து அவர்களை ஒரு இடத்தில் கூட்டி மிகவும் சாந்தமாயும் அன்பாயும் பேசத் தொடங்கி "நண்பர்களே! நான் யாரோ அன்னியன் உங்கள் விவகாரங்களில் தலையிடுவதைப்பற்றி நீங்கள் என்மீது கோபிக்கலாம். என்னை வெறுக்கலாம். இங்கு நடந்துள்ள சகலமான விஷயங்களையும் நான் விசாரித்து விவரமாகத்தெரிந்துகொண்டேன்.



நேயர்களே! உங்கள் குலம் தலைமுறை தலைமுறையாகப் பிறந்து வாழ்ந்து விளங்கிவரும் இந்த ஊரைவிட்டு, நீங்கள் அந்த குமாஸ்தாவின் மாயா போதனையைக்கேட்டு மயங்கி ஏதோ வேறுதொழில்

சாலையில் வேலை செய்துகொடுப்பதாயும் அதில் உங்களுக்கு நிரந்தரமான செல்வம் புதையல்போல் கிடைத்துவிடும் என்றும் நம்பி ஏமாறுகிறீர்கள்! 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை' போலத்தான் உங்கள் கதி முடியும். நீங்கள் சாச்வதமான தொழிலையும் விட்டு இங்கு சண்டையுடன் அங்குபோனாலுங்கூட அங்கு உங்களைப் பிறர் மதிக்கமாட்டார்கள். 'இவர்கள் கலகக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், வேலைநிறுத்தம் என்ற தொத்துவ்யாதி பிடித்தவர்கள்' என்கிற இழிவான பெயர்வந்து அதுவே உங்களைப் பிற்காலத்தில் வருத்தும்...

என்று கூறுவதைக் காதில் வாங்காது அந்த கும்பலில் உள்ள சிலர் "டேய்! நீ யாரடா அது இங்கு இடுக்குப்புல் முளைச்சமாதிரி வந்து மகா ப்ரஸங்கம்பண்ண ஆரம்பித்துவிட்டாய்? போடா உன் வேலையைப் பாத்துண்டு. எங்களுக்கு நீ உபதேசம் செய்யவேண்டாம். மரியாதையாகப் போய்விடு" என்று பலமாகக் கத்தினர்கள்.

தேவநாதன் எத்தனையோ சாந்தமாயும் அன்பாயும் சொல்லும் வார்த்தைகள் முற்றும் இந்தக் கலகக்காரர்களின் காதில் விழவே இல்லை. ஒருவனை அடக்கப் பலகுரல்கள் கிளம்பி பெருத்த இரைச்சலையும் கலவரத்தையும் உண்டாக்கிவிட்டன.

அக்கூட்டத்தை எப்படியாவது அடக்கிவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் தேவநாதன் "அன்பர்களே! வீண்கலவரம் செய்யாதீர்கள். உங்களுடைய நிரந்தரமான நன்மைக்காகவே நாங்கள் பாடுபடுகிறோம். சிறிது பொறுமையை வகித்து சாவதானமாக இருங்கள். நீங்கள் எதிர்பாராத நன்மைகளை எல்லாம் அடைந்து வாழலாம். அதன் பிறகாகவது என்னை நீங்கள் விரோதி என்று நினைக்காமல் நண்பனாக எண்ணுவீர்கள். கடவுள் மீது ஆணையாக நான் உங்களுடைய நண்பனேயன்றி விரோதியல்ல என்பதை நம்புங்கள்" என்று இவன் மிகுந்த வணக்கத்துடன் சொல்லும்போது, "டேய், சோதாப்பயலே! நீயாடா நன்மையைச்செய்ய சாந்தாவதாரம் எடுத்து வந்திருக்கிறாய்? உன்னுடைய எதிர்காலத்திய நன்மைகளை நீ சற்றும் கவனிக்காமல் இந்த ஏழைகளுக்குள் கலகத்தை விளைவிப்பதற்கா வந்துவிட்டாய்" என்று கர்ஜித்தவாறே தேவநாதனை சில முரடர்கள் தடிகளால் தாக்கினர்கள்.

அந்த முரடர்களை ஏவிவிட்ட குமாஸ்தாவும் அந்தக் கூட்டத்தில் பெரிய தடிகொண்டு தேவநாதனை நன்றாக அடித்து நொறுக்கிவிட்டான். பெரிய கூக்குரலும் சண்டையும் உண்டாகிய அதே சமயம் எதிர்பாராமல் அந்த க்ராமத்தைப் பார்வையிடுவதற்காக திடும்ப்ரவேசமாக வந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், இருவரும் மிராசுதாரர் வீட்டிற்கே வந்தார்கள்.

இந்தக் கலவரத்தை அறிந்து மிராசுதாரர் மகன் சந்துரு ஓடி வந்து சமாசாரத்தைச் சொல்லி உத்யோகஸ்தர்கள் உள்பட இங்குவந்து குமாஸ்தாவைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்துக்

கொண்டார்கள். வேண்டுமென்றே இரவு வண்டியிலனுப்பிய குமாஸ்தா இங்கு எப்படிவந்தான் என்ற சந்தேகம் மிராசுதாரருக்கு உண்டாகிவிட்டதும் கடுங்கோபத்துடன் அந்த கும்பலையும் அந்த குமாஸ்தாவை நோக்கினர்.

இதற்குள் சந்த்ரு போலீஸ்காரர்களுக்கு ஆளைத் தாத்தினான். குமாஸ்தா தான் ஒன்றுமே தெரியாதவன்போல் மிராசுதாரரைப் பார்த்து, "ஸார்! நீங்கள் என்னை அனுப்பிய உடனே நான் இரண்டு மைல் தூரங்கூட போயிருக்கமாட்டேன். அப்போது ஒரு ஆள் ஓடிவந்து இதோ இந்த அயோக்யன் கலகத்தை விளைவிக்க ஏற்பாடு செய்து ரகஸியமாக எல்லாம் நடக்கிறது என்று சொன்னான். நான் அதைக்கேட்டதும் உடனே திரும்பிவந்து எத்தனை முன் ஜாக்ரதையாக பாதுகாப்புகள்செய்து கூட்டங்கூட்டாதவாறு தடுக்க முயன்றும் இம்மாதிரி கலகத்தைக் உண்டாக்கிவிட்ட பாவியைத் தாக்காமல் என்ன பண்ணுவது சார்? என்னை அவமரியாதையாகப் பிடித்துக்கொள்வது தர்மமா? இது அடுக்குமா?" என்று கத்தினான்.

தேவநாதனுக்கு பலமான அடிப்பட்டுவிட்டதால் அவன் மூர்ச்சையாகி விழுந்துவிட்டான். க்ராமத்தில் நிச்சிந்தையாகத் திரிந்து வேலைசெய்துகொண்டிருந்த ஜனங்கள் இந்த கலகத்தையும் தேவநாதன் அடிப்பட்டு விழுந்ததும் மிராசுதாரர் கோபாகவந்து குமாஸ்தாவைப்பிடித்துக்கொண்டதையும்பார்த்து, ஒன்றும்புரியாது விழித்தனர்; உண்மையில் வெளியூரில் கஷ்டமில்லாத உழைப்பினால் ஏராளமான பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையினால் இத்தகைய காரியத்தில் இறங்கிய தொழிலாளர்களில் பாதி பேருக்குமேல் நடுநடுங்கி, செய்வதறியாது தவித்தனர்.

இதற்குள் தேவகியும் காவேரியும் முதியோர் கல்வி போதிப்பதற்காக எத்தனித்த முயற்சியைத் தொடர்ந்துசெய்ய எண்ணுவதற்குள் இந்த மகத்தான கலகம் விளைவதைக்கேட்டுத் தாமும் இதில் சகாயம்செய்ய எண்ணி எந்தத் தொழிலாளர்கள் வீண் கலகத்தை விளைவிக்கிறார்களோ அவர்கள் வீடுகளுக்கு நேரில் சென்று அந்தத் தொழிலாளர்களின் மனைவிகள், தாயார் முதலிய பெண்மக்களை முறையே நோக்கி ஹிதமாகப்பேசி இந்த வீண் கலகத்தினால் எதிர்காலத்தின் பயங்கரத்தையும் வாழ்வே சிதறிப் போய்விடும் நிலைமைகளையும் விவரமாக எடுத்துரைத்து அவர்கள் மனத்தில் படும்படிக்குச் சொல்லி "தாய்மார்களே! நீங்கள் உடனே அங்குவந்து இக் கலகத்தில் உங்கள்வீட்டு ஆண்மக்கள் சேராமல் பார்த்துக்கொள்ளுங்கள். இந்தச் சண்டையின் விபரீதம் உடலுக்கோ உயிருக்கோ சேதங்கூட விளைத்துவிடும். நீங்கள்தான் இதில் முனைந்து அவர்களை விலக்கவேண்டும். உங்கள் ஆண்மக்களுக்கும் சரி, உங்களுக்கும் சரி. கல்வியறிவு கடுகளவாவது இருக்குமானால் இந்தமாதிரி நிலைமை வந்திருக்குமா! இத்தகைய சண்டைகாரணமாக எந்தெந்த ஊர்களில் எப்படி எல்

லாம் விபரீதம் விளைந்தது என்பதை அவ்வப்போது பத்ரிகையில் படித்திருந்தால் இத்தகைய பயங்கர பிசாசு தாண்டவத்தில் வேடிக்கையாக இறங்குவார்களா? கல்வியறிவு இல்லாததனால் உலகவிஷயமும் தெரியாது, ஆத்மவிஷயமும் தெரியாது புழுவைப்போல் பலனற்றவாழ்க்கை நடத்தவேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள். இனியாவது கண்ணைத் திறந்துகொள்ளுங்கள். கலகம் பெரிதாவதற்கு முன்பு நீங்கள் வந்து உங்கள் மக்களைக் கூட்டிவாருங்கள்'' என்று பரக்கப்பரக்கக் கூறினார்கள்.

சிலர் ஓடிவந்தார்கள். சில முரடர்களின் மனைவிகள் வருவதற்கே பயந்தார்கள். இதற்குள் கலகம் வலுத்து அடிதடியில் வந்துவிட்டது என்கிற விஷயமறிந்து எல்லோரும் அலையக்குலைய யாருக்கு என்ன வந்துவிட்டதோ! என்ற திகிலுடன் அழுதுகொண்டே ஓட்டமாக ஓடிவந்தார்கள்.

இவர்கள் வரும்சமயம் குமாஸ்தாவை நேருக்கு நேராக மிராசுதாரரே பிடித்துக்கொண்டதும் தேவநாதன் மூர்ச்சையாகி விழுந்துவிட்டவனை சந்துரு ஒரு வண்டியில் போட்டு ஆஸ்பத்ரிக்குக்கொண்டு போனதும் இதே கூட்டத்தில் இரு பிளவு உண்டாகி சிலர் மிராசுதாரர் காலில் வணங்கி, ''சாமீ! எங்களை மன்னிக்கவேணும். இந்த மகாபாவியின் வார்த்தையைக் கேட்டுத்தான் நாங்கள் நாசமாய்ப் போய்ட்டோம். எங்களை கை உட்டுடாதீங்க.'' என்று குமாஸ்தாவின் உண்மையை அப்படியே சொல்லிவிட்டார்கள்.

பின்னும் சிலர் இப்படியும் போகாமல் அப்படியும் போகாமல் த்ரிசங்குசொர்க்கத்திலிருந்து தவித்தார்கள். தேவநாதனின் நிலையைக்கேட்டு தேவகி கதிகலங்கிப்போய் ஆஸ்பத்ரிக்கு காவேரியுடன் ஓடினாள். அதே சமயம் அன்று வந்த பத்ரிகையில் வெகு முக்யமாய் பெரிய கொட்டை எழுத்தில் வந்திருந்த விஷயத்தைப் படித்த கணேசன் அந்தக் கூட்டத்தின் முன்பே அந்த பத்ரிகையைக் கொண்டு உரத்துப் படித்தார்.

## கள்ளநோட்டுக்காரர்கள் பிடிபட்டார்கள்.

வேம்பூர் க்ராமத்தைச் சேர்ந்த வேலாயுதம் என்பவர் கள்ளநோட்டு விஷயத்தில் சம்மந்தப்பட்டிருப்பதை இரகஸிய போலீஸார் துப்பறிந்து கண்டுபிடித்துக் கைதுசெய்துவிட்டார்கள். வேலாயுதம் என்பவர் திடீர் என்று ஒரு சோப்பு பாக்டெரிவைத்துத் தொழில் நடத்த ஏற்பாடு செய்ததாயும், அதற்கு அவருடைய உறவினரான சோமநாதன் என்பவர் உதவிசெய்து வருவதாயும், கள்ளநோட்டுப் பணத்தைப் பலருக்கு லஞ்சங் கொடுத்துக் காரியம் செய்து வந்ததாயும், அவருடைய வீட்டை சோதனை போட்டதில் சகல விவரமும் கடிதப் போக்குவரத்தில் தெரிந்து விட்டதுடன் சுமார் லக்ஷரூபாய்கள் வரையில் கள்ளநோட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டதாயும், சோமநாதனையும் போலீஸார் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்றுமுள்ள விஷயத்தைப் படித்த க்ஷணமே குமாஸ்தா

வாகிய சோமநாதன் 'ஹா!' என்று ஒரு அலறல் அலறினன். அதே ஷாக்கினல் அவன் ப்ரக்ஞையற்றுவிட்டான்.

இதற்குள் லாரியில் போலீஸும் வந்துவிட்டார்கள். குமாஸ்தாவை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு தொழிலாளர்களையும் ஒப்படைத்துவிட்டு சகலவிஷயங்களையும் கூறினர்கள். போலீஸாருக்குப் பரமத்ருப்தியாகிவிட்டது. வேலாயுதத்தின் விஷயத்தில் சம்மந்தப் பட்டுள்ள சோமநாதனே இங்கு தற்செயலாகக் கிடைத்து விட்டதால் அவர்கள் எக்காளமிட்டுக் கொக்கரித்தவாறு. "ஓகோ! கள்ளநோட்டுப் பெரிய மனிதரின் நண்பர் சோமநாதன் இவர்தானு? சபாஷ்! கள்ள நோட்டின் மகிமையும் கலகம் விளைவிப்பதன் ஆநந்தமும் எப்படி இருக்கிறது என்று இப்போததானே தெரியப் போகிறது. பாலும் தேனுங் கலந்ததுபோல் இருக்கும் சார்" என்று கூறுவதைக் கேட்டு பொதுமக்கள் சிரித்தார்கள்.

தொழிலாளர்களின்பாடு திண்டாட்டமாகிவிட்டது. உடனே அந்த அயோக்ய சோமுவைத் திட்டவாரம்பித்துவிட்டார்கள். "சாமீ! நாங்களா ஒதுவும் பண்ணலீங்க, இவருசொல்லித்தான் சேஞ்சேங்க, எங்களுக்கு ஒன்றுமே தெரியாதுங்க. காலே கும்பிட்றேனுங்க, எங்களே உட்டுடுங்க" என்று சிலர் கெஞ்சுகிறுர்கள்.

இதற்குள் அத் தொழிலாளர்கள்வீட்டுப் பெண்களும் கதறத் தொடங்கி மிராசுதாரர் காலில் விழுந்தும் போலீஸார் காலில் விழுந்தும் கண்ணீர்வழியக் கெஞ்சி வேண்டத்தொடங்கினர்கள். முக்யமாக இருந்தவர்களை போலீஸார் சாவடியில் பந்தோபஸ்தாக வைத்துப் பூட்டிவிட்டு தேவநாதனைப் பார்க்க ஓடினர்கள். "முதல் நாள் இதே ஊரில் வேறுவிதமாகக் கலகம் தாண்டவமாடியது. இன்றோ அமைதியை ஒரு க்ஷணத்தில் வீர வாலிபனுன தேவநாதன் தான் அடிப்பட்டும் உதைபட்டும் நிலைநாட்டிவிட்டான். அந்த வீர வாலிபனுக்கு ஒருவிதமான விபத்தும் இல்லாதிருக்கவேண்டும். எங்கு அடிப்பட்டுவிட்டதோ, என்ன ஆகியதோ, படுபாவி ஒரு க்ஷணத்திற்குள் இத்தனை பெரிய விபத்தை உண்டாக்கிவிட்டானே" என்று குமாஸ்தாவை திட்டினர்கள். எங்கும்,ஒரே பரபரப்பும் ஆஸ்பத்ரிக்கு ஓடுவதுமாக ஜனங்கள் காணப்பட்டார்கள். மிராசுதாரரின் வியப்பும், சந்தோஷமும் கரைகடந்தது எனினும் தேவநாதனுக்கு ஒன்றுமில்லாமலிருக்கவேண்டுமே என்று கவலையும் வதைத்தது.

## 19

அந்த க்ராமம் மிகப் பெரிய க்ராமமாகையினல் ஆஸ்பத்ரி உயர்ந்த முறையில் விசாலமாகவே அமைந்திருந்தது. சுற்றுவட்டாரங்களிலுள்ள அனேக சிறிய க்ராமங்களுக்கு இந்த ஆஸ்பத்ரி ஒன்றுதான் இருப்பதால் அதற்கேற்ற வசதிகளுடன் இருந்தது.

இந்த கலகம் நடப்பதைக் கேட்டவுடனே கட்டாயம் அடிபட்டவர்கள் ஆஜராக வருவார்கள் என்று ஆஸ்பத்ரியார் எதிர்

பார்த்தபடியே காயம்பட்டவர்கள் தேவநாதன் உள்பட பத்து பேர்களுக்குமேல் வந்துவிட்டார்கள். வெகு அக்கரையுடன் தேவநாதனுக்கும் மற்றவர்களுக்கும் சிகிச்சை நடத்தியபடியே "அனாவச்யமான இம்மாதிரி காரியத்தில் ஏன் இறங்கினீர்கள்? அநியாயமாய் கை நரம்பு ஒடிந்துபோய்விட்டதேப்பா! உங்கள் சண்டையின் காரணமாக வழியோடு போகிறவனுக்கு உயிருக்கே உலைவைத்ததுபோல் செய்துவிட்டீர்களே" என்று கூறினார்கள்.

தலையில் பலமான அடிப்பட்டுப்ரக்ஞையற்றிருந்த தேவநாதனுக்கு சிலமணி நேரங்கழித்துத் தன்ஞாபகம் உண்டாகியது; அப்போதும் சமாதானம் செய்வதாகவே எண்ணி, "அன்பர்களே! வீண்கலாட்டா செய்யாதீர்கள். உங்கள் நன்மைக்குத்தான் நாங்கள் பாடுபடுகிறோம்"...என்று கூறுவதைக் கேட்ட தேவகி கண்ணீர் வழிய "அண்ணா! அண்ணா! கவலைப்படாதே, கடவுள் உன் பங்கிலிருந்து பரிபூர்ண கடாக்ஷத்தை வெகுவிரைவில் செய்துவிட்டார். போலிஸாரிடம் சோமு அகப்பட்டுக்கொண்டான். அவன் உறவினனான வேலாயுதமும் பிடிபட்டுவிட்டானாம். இன்றைய பத்ரிகையில் பார்த்தேன். இவர்கள் கள்ளநோட்டுகள் செய்யும் கூட்டத்தினராம். இந்த குமாஸ்தாவின்மீது இந்த குற்றத்தைத் தவிர அந்த குற்றமும் சேர்ந்திருப்பதால் போலீஸார் மிகுந்த சந்தோஷப்படுகிறார்களாம். நீ நிம்மதியாக இரு அண்ணா, கவலைப்படாதே" என்று தேற்றினாள்.

இதற்குள் கணேசன், சந்த்ரு,மிராசுதார் எல்லோரும் இவனைச் சுற்றிக்கொண்டு தம்தம் அன்பையும், ஆனந்தத்தையும், உணர்ச்சி ததும்பப் பேசிப் புகழ்ந்தார்கள். தேவநாதனின் இதயம் இதைக் கேட்டு கட்டுமீறி மகிழ்ந்ததெனினும், குமாஸ்தா அன்றுதன் இளைய தாயார் வந்துவிட்டதாகச்சொல்லியவார்த்தைகள் நிஜமா பொய்யா? அவள் ஏன் நம் வீட்டைவிட்டு வரவேண்டும்? அப்பா என்ன செய்கிறார்?...என்கிற புதிய யோசனையில் மனம் குழம்பியதால் மிராசுதாரரைப் பார்த்து "ஸார்! பகவத்க்ருபையால் இந்த கண்டத்தில் ஜெயித்து ஜெயபேரிகை அடித்தாயிற்று. நீங்கள் என் சிறிய தாயாரைப்பற்றி சொல்லியது என் மனத்தைவிட்டகலவில்லை. இனி எனக்கு உடம்பு ஒன்றுமிருக்காது. அந்த விஷயம் சரியானதா, கட்டுக்கதையானதா என்று முதலில் நான் அறியவேண்டும். தன் கடமையை மறந்து ஏதோ அல்ப ஆசைக்கு அடிமையாகி ஒருபெண்ணை மணந்தும், அவள் எங்கப்பாவை ஏமாற்றிவிட்டு வந்துவிட்டாள் என்றால் அது சரியானதா? ...என்று இதைப் பற்றியே படபடவென்று பேசுவதை மிராசுதார் தடுத்துச் சமாதானப்படுத்தி அவனை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படியும் பிறகு இது விஷயத்தைவிசாரித்துச்சொல்வதாயும்கூறிவிட்டு டாக்டர்களிடம் ப்ரத்யேகமாகச் சொல்லி இவர்கள் எல்லோரையும் வெகு ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள்ளும்படிக்கு வேண்டிக்கொண்டு எல்லோரும் வீட்டிற்கு வந்தார்கள்.

அடிபட்டுப் படுத்துள்ள தொழிலாளர்களின் வீட்டுப் பெண் மணிகள் ஆஸ்பத்ரியில் வந்து வாசலில் கத்துகிறார்கள். தங்கள் மனிதர்களைப் பார்க்க எத்தனை சொல்லியும் ஆஸ்பத்ரிக்குள் விட மறுத்துவிட்டதால் வாசலிலேயே கதறுவதைப் பார்த்துச் சகிக் காத தேவகி மேலதிகாரிகளிடம் ப்ரத்யேக உத்திரவு பெற்றுவந்து அவர்களை அழைத்துச் சென்று அவரவர் மனிதர்களைக் காட்டிச் சமாதானம் செய்துவைத்துப் பின் "அம்மா! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நன்றாகக் குணமாகி விடும். ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்; ஊரோடு ஒக்க வாழ்; என்பது பெரியாரின் வாக்கு. அதை நீங்கள் உணராததற்குக் காரணம் கல்வி யறிவும் அனுபவஞானமும் இல்லாததே யாகும். இனிமேல் தாம் வசிக்கும் ஊரில் உத்தமமான முறையில் தொழில் செய்து கண்ணிய மாக வாழ்வதைப் பாருங்கள். யார் யாருக்குக் கள்ளநோட்டுக்கள் அந்த படுபாவி சோமு கொடுத்திருக்கிறானோ அவர்களை எல்லாம் போலீஸார் கைது செய்யப்போகிறார்கள். நீங்களும் அதில் சம் மந்தப்பட்டிருப்பவர்களானால் உண்மையை ஒளிக்காது கூறி அவர் களிடம் மன்னிப்புக் கோரிவிடுங்கள். சொல்ப தண்டனையுடன் போய்விடும். இனிமேல் இம்மாதிரி எந்த வம்புச் சண்டைக்கும் போகாதீர்கள்" என்று புத்திமதி சொல்லிவிட்டுத் தன் அண்ணன் பக்கலிலேயே இருக்க அனுமதிபெற்று அவனுக்கு சிச்ருஷை செய்துகொண்டே பகவானையும் வேண்டி ப்ரார்த்தனை செய்தாள். அவள் உள்ளக் கண்ணாடியில் இத்தனைக்கும் காரணம் தன் தகப்ப னாரின் மூடத்தனமல்லவா என்று நினைக்கும்போது, அவருடைய தோற்றம் அப்படியே தெரிந்தது. அடுத்த க்ஷணம் அதன் பக்கத்தி லேயே பேதைப்பெண் கலாவதியின் உருவமும் பரிதாபகரமாகத் தோன்றி வேதனை செய்தது.

மறுநாள் காலையில் தேவநாதன் நன்றாகத் தெளிவுபெற்று தன் சகோதரியை அழைத்து, "செல்வி! நான் ஒன்று தீர்மானம் செய்துவிட்டேன். நேற்றுப் பூராவும் நான் மயங்கிக்கிடப்பதாகவும் நோயினால் பாதை படுவதாகவும் நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால், உண்மையில் எந்த விதமாக நமது குடும்பத்தின் ஒற்று மையை நிலை நாட்டுவது, நம் சிறிய தாயார் என் க்ராமத்திற்கே வந்து விட்டாள் என்கிறதுபோன்ற கவலையும் யோசனையுமேதான் நான் செய்துகொண்டிருந்தேன். என்னை வீட்டிற்கனுப்பிவிடும் படியாக பெரிய டாக்டரிடம் கேட்டு உத்திரவு வாங்கிவிட்டேன். ஆகையால் இன்றே நான் வீட்டிற்கு வந்துவிடுகிறேன். வந்த பிறகு மிராசுதாரரின் உதவியால் அவருடைய வில் வண்டியை வாங்கிக்கொண்டு நான் கட்டாயம் நமது சிறிய தாயாரிடம் நேரில் போய் விஷயத்தை அறிந்துவரப்போகிறேன். இஷ்டமிருந்தால் நீயும் வா. வேறு வழியே எனக்குத் தோன்றவில்லை. ஆத்திரத்தில் அப்பா என்ன செய்துவிட்டாரோ என்று எனக்கு யோசனையா யிருக்கிறது. மேலும் இந்த கள்ளநோட்டு விஷயம் கேள்விப் பட்டதுமுதல் எனக்கு ஒரே பயமாயும் சந்தேகமாயுமிருக்கிறது,

ஏனென்றால், கள்ளநோட்டு விஷயமாக வேலாயுதத்தைக் கைது செய்திருப்பதாக அறியும்போது மிகவும் பயமாயிருக்கிறது. ஏனெனில் இதேபெயருடைய மனிதன் அப்பாவிடம் அடிக்கடி வந்துகொண்டிருந்தது எனக்கு ஞாபகம்வருகிறது. இந்த ஊரும் பேரும்தான் அவன்கூட சொன்னதாக நினைவு. ஆகையால்தான் எனக்கு இதே கலவரமாக இருக்கிறது. இந்த ரகஸியங்களை நீ யாரிடமும் வெளியிடாதே; ஒருவேளை இதே வம்புதண்டாவில் அப்பாவும் சம்மந்தப்பட்டதாக ஏதாவது விஷயம் வெளியாகியிருக்குமோ? அதனால் வெளியாருக்காக ஏதாவது சாக்கு போக்குகளைச் சொல்லி நோட்டுக்களை மறைப்பதற்காக கலாவதியை அனுப்பியிருப்பாரா, அல்லது அது விஷயம் அவளுக்குத் தெரியாதிருப்பதற்காக அனுப்பி இருப்பாரா? ஒன்றும் விளங்காமல் பலவிதமாகக் குழம்பித் தவிக்கிறது என் மனம். உடனே நான் அப்பாவை பார்ப்பதைவிடச் சிறியதாயாரைப் பார்ப்பதுதான் உசிதம் என்று தோன்றுவதால் நீ ஒன்றும் குறுக்கே பேசாதே. நம் குடும்பத்தின் மானத்தை முதலில் காப்பாற்றவேண்டும். கணேச மாமாவை நான் வரச்சொன்னதாகச் சொல்லி அழைத்துக் கொண்டு வா" என்றான்.

மறுபேச்சின்றி தேவகி அப்படியே அழைத்துவந்தாள். மிராசுதாரர் வண்டியில் வீட்டிற்கு வந்துவிட்டான். ஆஸ்பத்ரியிலேயே இருப்பதுதான் உசிதம் என்று எத்தனை சொல்லியும் கேட்காது வீட்டிற்கு வந்தவனை மிகவும் அன்புடன் காவேரியம்மாள் உபசரித்து "தேவநாதா! இந்த விஷயம் இத்தனை சடுதியில் முடிவடைந்தது ஒருபுறமிருக்கட்டும். உன் தகப்பனுருக்கு தெரிந்தால் என்ன ஆகுமோ என்கிற பயமாகவே இருக்கிறது. என்னசெய்வது? நீ சொல்வதைக் கேளாமல் வீட்டிற்கும் வந்துவிட்டாயே!" என்றாள்.

தேவநா:—மாமீ! நீங்கள் எத்தகைய கவலையும் படவேண்டாம். உங்களால் அதி முக்யமான ஒருகாரியம் ஆகவேண்டும். தடை சொல்லாமல் அதை முடித்துக் கொடுக்கவேண்டும். மாமாவைக் கூப்பிடுங்கள்.

கணேசன் வந்ததும் தான் எப்படியும் கட்டாயமாய் தன் சிறியதாயாரைப் பார்த்து அதிமுக்யமான விஷயங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்றும் அதைத் தெரிந்ததும் தான் ஆஸ்பத்ரியில் படுத்துக்கொள்கிறேன் என்றும் பிடிவாதம்செய்து கிளம்பிவிட்டான். இவனுடன் தேவகியும், கணேசனும் வந்தார்கள். ஜில்ஜில் என்ற சப்தத்துடன் வண்டியும் கிளம்பிச் சென்றது. தேவநாதன் மனத்திலும் ஆயிரக்கணக்கான எண்ணங்களாகிய அலைகள் மோதிமோதி உடைந்து கலக்கின.

மாலை 5 மணி சுமாரிருக்கும். எங்கும் மாலைநேரத்தின் தோற்றமும் சிலுசிலுப்பான மந்தமாருதமும் ஆனந்தமாக ஒன்றுகூடி மக்களின் மனத்தில் ஒருவித இன்பத்தையும் நிம்மதியையும் கொடுத்தன. சலசலப்பான நீரோடைகளின் காட்சி அத்புதமான வசீகரத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தது.

அதுசமயம் மிராசுதாரரின் வண்டி ஜம்ஜம்மென்று மணிகளும் சலங்கைகளும் சப்திக்க அக்ராகாரத்திற்குள் நுழையும்போது அங்குள்ள ஒவ்வொருவரும் இந்த வண்டியையே பார்த்து ப்ரமிப்புடன் பேசிக்கொண்டார்கள். கலாவதியின் வீடு எது என்பது தெரியாததால் யாரைக் கேட்பது எப்படிக் கேட்பது என்ற பெரிய யோசனையுடன் தேவநாதன் வெகு கூர்மையாய்க் கவனித்து வந்தான். மிகவும் தாழமானதும் கூரை குடிசை போன்றதுமான வீட்டுவாசலில் வண்டியை நிறுத்திவிட்டு, அங்கு நின்றிருந்தவளை உற்று கவனித்தான்.

தங்கள் வீட்டுத் தோட்டக்கார ராமுவின் மனைவி குப்பம்மாள் என்பதை அறிந்து ஆச்சரியத்துடன், "குப்பம்மா! நீ இங்கு எதற்காக வந்திருக்கிறாய்? சின்னம்மாள் வீடு எது உனக்குத் தெரியுமா?" என்றான். இவனைவிட ஆயிரம்பங்கு அதிகரித்த வியப்பும் திகைப்பும் துக்கமும் ஆத்திரமும் அடைந்த குப்பம்மாள் "சாமீ! சின்ன எஜமான்! நம்ப கொயந்தெ எங்கே? இதென்ன தலையிலே கையிலே கட்டு கட்டிருக்குதுங்க! சின்னஎஜமானியம்மாள் இந்த வூட்டுலேதான் இருக்கிறாங்க, வாங்க" என்று ஆவலும் பதபதப்பும் த்வனிக்கக் கூறியவாறு இவர்களை எல்லாம் அழைத்துச்சென்றாள்.

தலைமீது கூரைஇடிக்கும்படி அத்தனை தாழமான வீட்டில் தலைநோயுடன் குனிந்து உள்ளேசென்றான். கலாவதி அங்கு தாழ்வாரத்தில் ஒரு விளக்கேற்றிவைத்து அதன் பக்கலிலுள்ள ஸ்வாமி படத்தருகில் கண்மூடி த்யானத்தில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தாள்.

அவள் சரீரம் மெலிந்துபோய் தலையும் வேஷமுமாக இருப்பதைக்கண்ட தேவநாதன் பரிதாபத்துடன் "அம்மணீ! சின்னம்மா! உங்கள் குமாரன் நமஸ்கரிக்கின்றேன்" என்று கூறும்போது அவனையுமறியாது கண்ணீர்முட்டி, குரல் கம்மியது.

கட்டுக்கடங்காத மனக் கொதிப்புடன் தேவகி சடக்கென்று கலாவதியின் அருகில் சென்று "சித்தி!" என்று கூவியவாறு சேர்த்துக் கட்டிக்கொண்டாள். உண்மையில் கலாவதிநல்ல உத்தமப் பிறவி பிறந்தவள். அவளுடைய வாழ்க்கையில் மிகவும் துக்கத்தையும் கஷ்டத்தையும் தீராத தரித்திரத்தையும் அனுபவித்திருப்பினும் இதயத்தில் உள்ள பிறவிக்குணமாகிய நல்ல உத்தம குணங்கள் பலவற்றாலும், பக்தியின் ஆளந்தத்தினாலும் உள்ளத்தில் தரித்திரம் என்பதே கிடையாது பரிபூர்ணமாக நிறைந்திருந்தது. அந்த த்ருப்தியினால் அவள் தெம்பாக வாழ்க்கை நடத்தினாளேயன்றி வேறு எத்தகைய பலமும் இல்லை.

தேவநாதன்குரலும் தேவகியின் அன்புமொழியும் ஏககாலத்தில் கேட்டதும் பகவானே ப்ரத்யக்ஷமாகிவிட்டதுபோல் அபாரமான சந்தோஷம் பொங்கியவாறு ஆவேசத்துடன் எழுந்து தேவகியின் அணைப்பில் மெய்மறந்து சில வினடிகள் கண்ணைமூடியே மவுனமானள். அடுத்த க்ஷணம் சிறிது தெளிவு பெற்று..."தேவகி!....தேவநாதா...உண்மையாகவா உங்களை நான் பார்க்கிறேன்? அல்லது உருவெளித்தோற்றமா?...இதென்ன காயம்? என்ன கை கட்டுகள்? உங்கள் பிதாவே அடித்துவிட்டாரா?...முதலில் இப்படி உட்காருங்கள். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"......என்று அன்பும் ஆவேசமும் ததும்பக்கேட்டாள்.

தேவநா:—சித்தி! நமஸ்காரம். எங்கப்பா அவ்வளவு தூரத்திற்கு வரவில்லை. இதுவேறு ஏதுவோ விஷயம். அது கிடக்கட்டும். நீங்கள் எப்போது இங்கு வந்தீர்கள்! எதற்காக அப்பாவைவிட்டு வந்தீர்கள்! எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லையே?...

தேவகி:—சின்னம்மா! உங்களுக்கு என்ன உடம்பு? ஏன் இவ்வளவு மெலிந்துவிட்டீர்கள்? அப்பாவும் இங்கு வந்திருக்கிறரா?...

கலாவதி:—குழந்தைகளா! உங்கப்பா இங்கு வரவில்லை. அவர் உங்களுக்குச் செய்த த்ரோகத்திற்காக நான்தான் அங்கிருக்கப் பிடிக்காமல் வந்துவிட்டேன். மகாபாவி—என்னல் உங்களை நிரந்தர அடிமையாக்கி ஆலாய்ப் பறக்கவிடுவதற்கு என்மனம் சகிக்கவில்லை. எத்தனைதான் எடுத்துரைத்தும் உங்கப்பாவின் மனம் இரும்பினும் கொடிய கல்லாகிவிட்டதால் நான் அவருக்குத் தெரியாமல் தோட்டக்காரனின் உதவியினலேயே வந்துவிட்டேன். நீங்கள் சென்ற அன்றே நானும் வந்துவிட்டேன். இதுவரையில் உங்கப்பாவிடமிருந்து எத்தகைய தகவலும் கிடைக்கவில்லை. சனியன்கள் ஒழிந்ததாகவே எண்ணிவிட்டார்போலிருக்கிறது...

தேவநா:—சித்தி! இந்தக் கலியுகத்தில் உன் போன்ற ஒரு மாற்றுந்தாய் இருக்கிறுள் என்று சொன்னல் அதை யாருமே நம்பமாட்டார்கள். உலகத்தின் சகஜ சுபாவத்தின் போக்கே இது. தாயே! நான் இப்பொழுது இங்கு எதற்கு வந்தேன் என்றால், உங்கள் காலைப் பிடித்துக்கொண்டு உங்களை வேண்டுகிறேன். எங்களிடம் நீங்கள் இத்தனை அன்புவைத்திருப்பது கடவுள் ஆணையாக உண்மையாயின் தாங்கள் தயவுசெய்து பெரிய மனது பண்ணி இப்போதே கிளம்பி அப்பாவிடம் போய்விடவேண்டும். அப்பாவின் அல்ப ஆசையினல் செய்பத்தகாத காரியங்களையும் செய்து இருக்கும்போது தாங்கள் அதை உடைத்தெறிந்துவிட்டு இம்மாதிரி வந்தது சரியில்லை தாயே!...எங்களுடைய வம்ச பரம்பரையின் கண்ணியத்தைப் பெரியோர்கள்மூலம் கேட்டு நான் பெருமையடைந்திருக்கிறேன். அதை நீங்கள் காப்பாற்றவேண்டும். அப்பா அந்த எண்ணமே இல்லாது முன்னேர்களின் பெருமையைக் குலைத்து வருகிறார். இதை என் தாயார் இருந்தவரையில் எத்த

னையோ தடுத்துக் கண்ணியத்தை நிலைநாட்டினர். தாங்களும் அதைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொள்வதற்காகவே நான் இத்தனை விபத்தான எனது நிலைமையைக்கூட பாராமல் வந்தேன். தாங்கள் தயவுசெய்து இப்போதே புறப்பட்டுச் செல்லவேண்டும். இத்தனை நாட்களுக்குள்ளே நம் வீடு எந்த நிலைமையிலிருக்கிறதோ என்ற கவலை என்னை வாட்டுகிறது.

கலா:—(பெரிதாக ஒரு சிரிப்பு சிரித்தாள். அச் சிரிப்பில் வாத்ஸல்யமும் சத்ய நெறியுந்தான் பிரகாசித்தன. தேவநாதனைப் பார்த்து)...குழந்தாய்! இது கலியுகமல்லவா? ஆகையினால் மிகவும் வயதில் சிறியவளான எனக்கு என்னைவிட பெரியமகனை பகவான் கொடுத்ததற்காக நான் பரமத்ருப்தியடைகிறேன். அதோடு க்ராமம் க்ராமமாகச் சென்று க்ராமஸேவைகள் செய்தும் முக்யமாக க்ராமாந்தரத்தில் உண்டாகிய கலகங்களைத்தீர்த்துச் சமாதானத்தை நிலவச்செய்த வீரவாலிபன் என்றும், ஜெயபேரிகையடித்த சிங்கம் என்றும்உன்னை இந்தக்ராமத்துஜனங்கள் வாயாரப்புகழ்ந்ததை நான் முன்பே கேட்டிருந்தும் நீதான் அந்த கீர்த்திவாய்ந்த மூர்த்தி என்று எனக்குத் தெரிந்ததுமுதல் என்னுள்ளம் பூரிப்பது கொஞ்சநஞ்சமன்று. இத்தகைய மாணிக்கத்தை வீட்டைவிட்டு ஓட்டிய மனிதரிடம் வாழ்க்கை நடத்த இஷ்டமின்றி நான்வந்தது உண்மையே! குழந்தாய்! ஊர்ச்சண்டையைச் சமாதானம் செய்துவைக்கும் வீரசிங்கமாகிய நீயே வீட்டுச்சண்டையையும் தீர்த்துவைத்துச் சமாதானப்படுத்துவாய் என்றதை ஏற்கெனவே அறிந்தும் எதிர்பார்த்தும் தான் நான் இப்படிவந்தேன்.

மைந்தா! ஊர்ச் சண்டையைத் தீர்க்கும் உத்தமன் உற்றார் சண்டையைப் பார்த்துச் சகிக்கமாட்டான் என்பதை என்னுள்ளம் அறிந்ததுபோல் உன் பிதாவுக்குத் தெரியவில்லை. உன் விருப்பப்படியே இதோ இப்போதே கிளம்புகிறேன். என்னவிருந்தாலும் நீ அதைப் பொருட்படுத்தாது மன்னித்து அவருக்கே புத்திவரும்படியாகச் செய்துவிடு. நீங்கள் இருவரும் இப்போதே என்னுடன் வந்தாலன்றி நான் அங்கு போகமாட்டேன். என்னுடைய வாழ்வில் நான் ஆதிமுதல் கண்ட ஏமாற்றமும் படுதோல்வியும் சகிக்க முடியாத சங்கடமும் போதும்! கிழவருக்கு வாழ்க்கைப்பட்டாலும் நான் சந்தோஷத்தையும் மனநிம்மதியையும் அடையலாம் என்றுதான் துணிந்தேன். அந்த எண்ணத்தில் மண்ணைப்போடும்படியான பெரிய பூகம்ப அதிர்ச்சியே அங்கு உண்டாகிவிட்டதால் நான் வந்துவிட்டேன். ஆகையால் நீ சண்டையை நிவர்த்தித்து வைத்துச் சமாதானத்தை உண்டாக்குவதுபோல் வீட்டிலும் நீயே முன்னேவந்து செய்துவிடு. அம்மா, தேவகீ! நீயும் உன் அண்ணனுக்கு நியாயத்தைச் சொல்லி அழைத்துக்கொண்டு கிளம்பு. நாம் மூவரும்சேர்ந்து புதுவாழ்க்கைத் தொடங்கி நிம்மதியை அடையலாம்...என்று தனது உணர்ச்சி பூராவும் ததும்பக் கூறினாள்.

தேவநாதனுக்கு எத்தகைய பதிலும் சொல்லமுடியாது தவித்தான். எனினும் கள்ளநோட்டு சம்மந்தமாய் தன் பிதாவுக்கு எத்தகைய ஆபத்தும் வராதிருக்கவேண்டுமே என்கிற பயம் உள்ளூர இருப்பதால், அதை முதலில் தீர்ப்பதற்காகத் தான் போயே தீர வேண்டும் என்ற எண்ணம் ஏற்கெனவே உண்டாகியது. கலாவதியின் அன்புமொழிகள் அதைப் பின்னும் தூண்டிவிட்டன. "சித்தி! முதலில் உங்களிடம் தனியாக ஒரு முக்ய விஷயமாகப் பேச வேண்டும். இப்படி வாருங்கள்"....என்று தனியாக அழைத்துச் சென்று, "தாயே! பரம ரகஸ்யமாக இந்த விஷயத்தை நீங்கள் செய்தாலன்றி நாம் தப்பமுடியாது. அப்பாவின் லஞ்சத் தாண்டவத்தை நீங்கள் கட்டாயம் கண்டிப்பீர்கள். அவருடைய நன்மைக்கு நீங்கள்தான் சொல்லி திருத்தமுடியும் என்று நம்பினேன். ஆனால், நினைத்ததொன்றும் நடந்ததொன்றுமாக ஆய்விட்டது. கள்ளநோட்டுகள் போடும் கூட்டத்தினரை போலீஸார் பிடித்துக் கைதுசெய்துவிட்டதாகப் பத்ரிகையில் பார்த்தேன். அதுமுதல் எனக்கு இருப்பாகவே இல்லை. ஏனென்றால் அப்பா லஞ்சம்வாங்கியது கொஞ்சநஞ்சமல்ல; லஞ்சம்கொடுத்த மகானுபாவர்களில் இந்தக் கள்ளநோட்டுக்காரர்களும் சேர்ந்திருக்கிறார்கள் என்பது என் எண்ணம். இவருக்கு இரும்புப் பெட்டியே கோயில்; காகித நோட்டுகளே தசாவதார மூர்த்திகளும் மற்ற இதர கடவுள்களும்; அதை எண்ணி எண்ணிப் பார்ப்பதே நித்யபூஜையும் த்யானஜபமும்!

ஒன்றான தெய்வத்தை மறந்து இத்தகைய வழிபாடுகளையே செய்துகொண்டுவரும் மனிதருக்கு அந்த தெய்வங்கள் கொடுக்கக் கூடிய பலன்கள் எவை? அது தெரியாதா? பாபத்தை மூட்டை கட்டிக்கொள்வதற்கான பல வழிகளையும் இஷ்டபூர்த்தியாகக் கொடுக்கும். கரைகாணாத இன்பங்களை அனுபவிப்பதுபோன்ற மோகவலையில் சிக்கவைத்துக் கடைசியில் மோக்ஷஸாம்ராஜ்யம் போன்று சிறைவாசத்தையும்கொடுத்து,உலகம் உள்ளளவும்தூற்றும் படிக்குச் செய்துவிடும். இம்மாதிரி பெரிய மனிதர்கள் பலரை நாம் பார்க்கவில்லையா? ஆகையினால் அப்பாவுக்கு இத்தகைய பெரும் விபத்து நடக்காதவண்ணம் நீங்கள்தான் முதலில் போய்த் தடுக்கவேண்டும். நான் கூடவந்தால்கூட அவருக்கு ஏற்கெனவே உள்ள கோபம் பின்னும் தலைதூக்கி விபரீதத்தில் கொண்டுவிடும். ஆகையால் தாங்கள் முதலில் புறப்படுங்கள்"...என்றுசகல விஷயத்தையுங் கூறினான்.

இதைக்கேட்ட கலாவதிக்குத் திடுக்கிட்டது. "ஹா! சிறைவாசமா? இத்தகைய ஜெயப்ரதானமான மகனைப்பெற்றுள்ள தந்தைக்கு அத்தகைய சிறைவாசமா? லஞ்சம் வாங்கி கைதியாகிவிட்டார் என்கிற அவலக்ஷணப்பெயரா வருவது?......இத்தகைய சுத்தவீரனாகிய உனக்கும், உன் சகோதரிக்கும் இந்தப் பழிச் செய்கையால் எத்தனைதூரம் பாதிக்கும் என்பதை என்னுள்ளம் அறிகிறது. தேவநாதா! என்னால் உங்களை விரட்டியடித்தது

போதாமல் என்றென்றைக்கும் அழியாத கருப்புவடுவை உண்டாக்கி உங்கள் இருவருடைய வாழ்க்கையிலும் மண்ணைப்போட நான் சகிக்கவில்லை. லஞ்சம் வாங்கிச் சிறைக்குச் சென்றுள்ளவனின் பெண்ணை யார் கட்டுவது? இந்த பிள்ளையும் அப்படித்தானிருப்பானோ என்கிற சந்தேகத்தால் பெண்ணையுங் கொடுக்கமாட்டோம், உத்யோகமும் கொடுக்கமாட்டோம் என்று உலகம் உங்கள் தலையில் கல்லைப்போடும்; அத்தகைய கொடிய பயங்கரத்திற்கும் நான் ஆளாகமாட்டேன். தேவநாதா! உடனே இப்போதே நீங்களும் என் கூடவே வாருங்கள். அவருடைய கொட்டத்தை அடக்குவதற்கு இப்போதே இந்த விஷயத்தையே நாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு திருத்திவிடலாம். நீங்கள் வராது நான்மட்டும் போனால் பலனிருக்காது. ஒருவேளை இதற்குள்ளாகவே ஏதாவது இது விஷயமாக நடந்திருந்தால் என்ன செய்வது?நான்மட்டும் போய் இத்தகைய நிலைமையில் அகப்பட்டுக்கொண்டால் என்னசெய்வது? உங்கள்வீட்டு விஷயம் ஏதுவுமே முன்பின்னறியாத நான் எப்படி சமாளிக்கமுடியும்? ஆகையால் எத்தகைய மனக்கசப்பு இருப்பினும் உங்கள் தாயாகிய எனக்காக நீங்கள் இருவரும் உடனே கிளம்பிவரவேண்டும். நான் எங்கு போகிறேன் என்ற விவரத்தை அவருக்குத் தெரிவிக்காததால் நம்முடைய விலாசமே யாருக்கும் தெரியாது. நாமாகச் சென்றால் தான் விபத்தைநீக்கிக்கொள்ளலாம்." என்று படபடத்துக் கூறினாள்.

கலாவதிக்கு இதுகாறும் இருந்த மனோநிலைமையும் கவலையும் ஒருவிதமாக இருந்தது. இப்போது இவ்விஷயங்களைக் கேட்டதும் உண்மையில் அவள் உள்ளத்தில் தேவநாதனின் புகழுக்கு இந்த செய்கை எங்கே பங்கத்தை விளைவித்துவிடுமோ! அதற்கு இடங்கொடுக்காமல் காப்பாற்றவேண்டும். ஜெயவீரனாக விளங்கும் மகனுடைய பெருமையைக் கண்டுகளிக்க பாக்யம்பெறாத தாயாரின் ஆத்மா தன்னுடைய ஸ்தானத்தில் வந்துள்ள மகாபாவியினால் இத்தகைய கொடுமைகள் நடந்து தன் குழந்தையின் கண்ணியம் குலைந்துவிட்டதே என்று வயிறெரிந்து சாபமிடுவாளல்லவா; இத்தகைய வீரவாலிபனைப் பெற்றபிதா அவன் மகிமையை அறிந்து மனம்பூரித்து அதை வ்ருத்திசெய்யாவிடினும் இத்தகைய மகத்தான அவமானத்தையாவது உண்டாக்காமலிருந்தால் போதும். என்னுடைய வாழ்வு தாழ்வானாலும் இந்த இருவருடைய வாழ்வும் பெருமையுடன் நடந்தால்அதுவே என் பிறவியின் சார்த்தகமாகும். ஒரு ஏழைப்பெண்ணைப் பணத்திமிர் பிடித்த கிழவன் மணந்தான். அதனால் குடும்பமே சிதறிப் பாழாகிவிட்டது. மூத்தவள் குழந்தைகளை இளையாள் நாசமாக்கிவிட்டாள்....என்கிற பழிச்சொல்லுக்கு இடமளித்துப் பாவியாவதைவிட...ஐயோ! பாவம் ஏழைச் சிறுமி கிழவனை விதிவசமாக மணந்தும் அவளால் குலம் உத்தாரணமாகி புகழ் ஜெயபேரிகை யடிக்கிறது என்று உலகம் கொண்டாடும்படியான ஒரு பாக்ய வழியில் வாழ்க்கை நடத்தினால்

போதும்...என்கிற தீவிரமான எண்ணமே உதித்த அதே வேகத்துடன் பேசினுள்.

தம் குடும்பத்தின் க்ஷேமத்திற்கும் தம் மக்களின் விபத்தைக் காத்து உதவி செய்வதற்கும் எந்த உத்தமகுணம் படைத்தவர்களும் பின்னடையமாட்டார்களல்லவா? எத்தகைய பகையும், த்வேஷ மனப்பான்மையும் மத்தியில் சுவர் போன்று வளர்ந்திருப்பினும் இத்தகைய சம்பவங்கள் நேருகிற சமயத்தில் அச்சுவரை இடித் தெறிந்துவிட்டு காரியத்தில் கண்ணுவது தம் கடன் என்று துணி வார்கள். அத்தகைய கோஷ்டியில் பிறந்துள்ள தேவநாதனுக்குத் தன் குடும்பத்தின் கண்ணியம் பறிபோகாதிருந்தால் போதும் என்ற ஆத்திரமும் அக்கரையும் உச்சத்தை எட்டியதால்,உடனே கலாவதியுடன் கிளம்பத் தயாரானுன். கலாவதியும் உடனே கிளம்பினுள். தேவநாதன் முதலியவர்கள் வந்த வண்டியிலேயே எல்லோரும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்ருர்கள். இவர்களுடன் கணேசனும் தேவநாதனுக்காகச் சென்ருர். கிழவரிடமிருந்து எந்த ஒரு காரணத் திற்காக கலாவதி வந்துவிட்டாளோ அதே காரியம் தன் வரையில் வெற்றிபெற்றுத் தானே தன் மக்களைக்கூட அழைத்துச்செல்லும் படியான பாக்யம் திடீரென்று எதிர்பாராதவிதம் கிடைத்து விட்டதையே எண்ணி அவள் உள்ளம் பேரானந்தமடைந்தது.

## 21

வீட்டு வேலையைவிட்டுப் போய்விடுகிறேன் என்று கூறிய தோட்டக்காரன், சர்மா ஆணையிட்டுக் கூறியதைத் தட்டிக் கொண்டு போக மனமின்றித் தவித்துநிற்கையில், இம்மாதிரி சர்மா கடிதத்தைப்பார்த்து மூர்ச்சையாகிவிட்டதும் ஓடிச்சென்றுதாங்கிக் கொண்ட தோட்டகாரனுக்கு கடிதத்திலிலுள்ள விஷயம் இது போன்றதாக இருக்கும் என்ற அனுமானங்கூட உண்டாகவில்லை. இங்கிருந்து சென்ற கலாவதியின்விஷயம் ஏதாவது வந்திருக்குமா? அல்லது வீட்டுப்பெண்ணும் பிள்ளையும் வெளியே போய்விட்டவர்களுக்கு ஏதாவது விபத்து நேர்ந்ததோ; தற்கொலை புரிந்தோ...... விபரீதம் விளைந்திருக்குமோ......என்றுதான் தோன்றியதால், அவனுக்கு குடல் நடுக்கமெடுத்துவிட்டது.

இவனுக்கு எழுதப்படிக்கத்தெரியாததால், கடிதத்தில் என்னவிருக்கிறது என்பதை யாரிடமாவது அறிந்துகொண்டு வரலாமா என்று எண்ணி சர்மாவை மெல்ல கட்டிலில் ஆச்வாசப்படுத்திப் படுக்கவைத்து, அவர் கையிலிருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு பக்கத்துவீட்டுக்காரிடம் காட்டுவதற்காக ஓடக்கிளம்பினுன்.

கிலியினுலும் விபரீத விஷயமாகையினுல் அதன் அதிர்ச்சியினுலும் சோர்ந்து கிடந்த சர்மாவுக்கு இவன் கடிதத்தை எடுத்துக் கொண்டு ஓடத்தலைப்பட்டதும் எங்குமில்லாத பயமும் நடுக்கமும் உண்டாகிவிட்டதால் "டேய்! டேய்! இங்குவாடா! எனக்கொரு

ஆபத்துமில்லே. இங்கு வா. போகிற ப்ராணனே இப்போதே வாங்கிவிடாதே. இப்படிக்கொண்டுவா" என்று ஓடிவந்து கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டு தேகம்குலுங்க அழுதவாறு தோட்டக்காரனை ஏறஇறங்கப் பரிதாபத்துடன் பார்த்தார்.

வெகு வருஷகாலமாகப் பழகும் மனிதனுகையால் இக்குடும்பத்தில் மிகவும் பற்றுதலுள்ளவனுக இருப்பதால் சர்மாவின் பரிதாபமானபார்வையும் புலம்பலும் அவன் உள்ளத்தை உருக்கியது. "எஜமான்! இன்னுங்க விசயம்? ஒண்ணுமே புரியிலீங்களே! என் இப்பிடி அழுவிறீங்க? சமாசாரத்தை சொல்லுங்க" என்று பதறியவாறு கேட்டான்.

பணச் செருக்கும் படாடோபத்தின் அகங்காரமும் நிறைந்த பிண்டமாயிருந்த சர்மாவின் சப்த நாடியும் இக்கடிதத்தினுல் ஒடுங்கி அகங்காரம் அடங்கித் துவண்ட நிலைமையில் தோட்டக்காரனைப்பார்க்கும்போது தன்னுடைய பெரும் விபத்தைத்தீர்க்கும் உற்றதுணைவன் இவன்தான் என்கிற புதியஎண்ணமும் ஒரு தனித்த நம்பிக்கையுடன் கூடிய சக்தியும் உண்டாகியது. இதற்கு முன் தான் காலால் வேலையிட்டு அதிகாரம் செய்த ஆளாகவே தோன்றவில்லே. தோட்டக்காரனை வெகு பரிதாபமாகப் பார்த்து அவனிரு கைகளேயும் பிடித்துக்கொண்டு......... "என்னுடைய மடத்தனத்தின் பயங்கரத்லதை இப்போதுதான் அறிந்து வருந்துகிறேன். இப்போது நான் பேராபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். அதை அறிவிப்பதற்குத்தான் இந்தக் கடிதம் வந்திருக்கிறது. "பயங்கரமான நடுசமுத்திரத்தில் துணைக்கோர் துரும்புகூட இல்லாத அனுதரவான நிலைமையில்தான் இந்த லஞ்சப்பிசாசு உங்களே விட்டு வேடிக்கைபார்க்கும். அதை விட்டுஒழியுங்கள். நமக்கு நேர்வழியில் கிடைக்கும் காலணுவின் கவுரவம் இந்த கால் லக்ஷத்திற்கு வராது. என் வார்த்தையைக் கேளுங்கள்" என்று பெரியம்மாள் என்னிடம பலதரம் முட்டிக்கொண்டபோது மத்தகஜமாகிய ஆனேக்கு அடி சறுக்காது என்கிற திமிரில் நான் இருந்துவிட்டேன். அடிசறுக்கி ஆனே விழுந்துவிட்ட காலம் இப்போது நெருங்கிவிட்டது. இந்த சமயம் நீ எப்படியாவது என்னேக்காப்பாற்றவேண்டும்.

எந்தப் படுபாவியோ, கள்ளநோட்டுகள் போட்டிருக்கிறுனும். என்னுடைய பணத்தாசையின் வேகத்தில் நான் பத்தாயிரம் ரூபாய்களே அப்படியே நோட்டுக்களாக வாங்கி இரும்புபெட்டியில்வைத்துவிட்டேன். அந்த நோட்டை எனக்கு லஞ்சமாகக்கொடுத்த படுபாவி வேண்டுமென்று என்னேக் காட்டிக்கொடுப்பதற்காக லஞ்சம் வாங்கிய விஷயத்தைச் சொல்லிவிட்டால் என்கதி அதோகதியாகிவிடும்.இந்த சமயத்தில் நான் என்னசெய்வது என்று தெரியவில்லே.,

என்று கூறிமுடிப்பதற்குள் தோட்டக்காரன் சர்மாவைத் தேற்றி, "சாமீ! கண்ணுகெட்டப் பெறவு சூரியநமஸ்காரம் செய்வதுண்ணு பெரியம்மா சொல்லுவாங்களே! அது சரியாய்ப்பூட்டுதுங்க. இதோ பாருங்க. இப்பவும் பாதகமில்லீங்க. சாமி ஆண்ட

வன் நம்மைக் காப்பாத்துவாங்க. நீங்க பயப்படவாணுங்க. மொதல்லே நீங்க அந்த தப்புநோட்டெ எடுத்து கொளுத்திப் புடுங்க; ஒங்களே புடிச்ச பீடை தானே பூடுதுங்க....

என்று இவன் சொல்லிக்கொண்டிருக்கையில் வாசலில் "சார்! சார்!" என்று கூப்பிடும்குரல் கேட்டு, தீயை மிதித்தவன்போல் நடுநடுங்கிய சர்மா "ஐயையோ! இதுயாரோ தெரியவில்லையே" என்று கதிகலங்கி நின்றார். மாடி வராண்டாவிலிருந்து மெல்ல தோட்டக்காரன் எட்டிப்பார்த்தான். இரண்டு போலீஸ்காரர்களும் இன்ஸ்பெக்டர் முதலியவர்களும் நிற்பதைக்கண்டு அவன் தள்ளுதள்ளிய வாறு...."எஜமான்! போலீஸ்காரங்க வந்திருக்கிறாங்களே...என்ன செய்றது?"...என்று சொல்லும் வார்த்தைகளைக்கேட்கும் போதே சர்மாவின் சப்தநாடியும் அடங்கி சரீரமே ஆடித்துவளவாரம்பித்தது. "போலீஸ்காரர்களா?" என்று ஹீனஸ்வரத்தில் கேட்டார்.

"ஆமாம் எஜமான்! இப்பொ என்ன பண்றது ஒண்ணும் புரியிலீங்களே! அவங்க மேலேமேலே கத்தறாங்களே! மொதல்லே நோட்டை எடுங்க! இல்லாட்டி நீங்க எங்காச்சும் ஒளிஞ்சிக்கங்க; நானு கதவெ தறந்து ஐயர ஊரிலே இல்லேன்னு சொல்லி அவங்களே அனுப்பிட்றேன். பெறவு நீங்க வந்து நோட்டே எடுத்துக்கொளுத்திப்புடலாம். மொதல்லே எங்காச்சும் ஒளிஞ்சுக்கங்க." என்று பதறப்பதறக் கூறினான்.

சர்மாவுக்குத் தான் என்னசெய்வது. எப்படி எங்கு மறைவது என்று தோன்றாமல் தத்தளிக்கையில் தோட்டக்காரன் "சாமீ! நீங்க பெட்டியே தறந்து நோட்டேஎடுத்திக்கிட்டு தோட்டத்திலே இருக்கிற என் குடிசையிலே போய் ஒளிஞ்சிக்கங்க. அவங்களே நான் தளுக்கா அனுப்பிட்டு ஒங்களே கூப்பிட்றேன்" என்றான். உடனே சர்மா இரும்புப் பெட்டியிலிருக்கும் கள்ளநோட்டுக்களைமட்டும் எடுத்துக்கொண்டுபோய்தோட்டக்காரன்குடிசையில்உட்கார்ந்தார்.

தோட்டக்காரன் தூங்கி எழுந்தவன்போல் கொட்டாவி விட்டுக்கொண்டு "யாரது, இப்பிடி கத்தறது?" என்று கடுகடுப்பாகக் கூறியவாறு கதவைத் திறந்தான். அப்போதுதான் போலீஸ்காரர்களைக் கண்டு நடுநடுங்குவதுபோல் அபிநயித்து "ஐயையோ சாமீ! நீங்களா வந்திருக்கங்கோ? மன்னிக்கணுங்க, மன்னிக்கணும், எஜமானே பாக்கவந்தீங்களா! வாங்க வாங்க!...எஜமானே இப்படித்தான் சதா சர்வகாலமும் யாரானும் பாக்க வந்துகிட்டே ஒவித்ரியம் செய்யராங்கன்னு கதவு போட்டுக்கிட்டு உள்ளே போனேன். ஒழுப்பாளி பாருங்க. கண்ணெ ரவெ இஸ்துப்புட்டுதுங்க. எஜமான் வெளியே போயிருக்கிறாரு. குந்திக்கங்க. வந்துடுவாரு." என்று தடபுடல் மரியாதைசெய்து நாற்காலிகளைக் காட்டி உட்காரவைத்தான்.

வந்தவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தபடியே. "எம்பா; வீட்டில் யாருமே இல்லையா? உங்க எஜமானருடைய இளம்மனைவி இன்று

தானே வந்தார்கள்....என்று முடிப்பதற்குள் தோட்டக்காரன்சற்று அசட்டுச் சிரிப்புடன் தலை குனிந்தபடி...."ஹி....ஹி... அவங்க வந்த ஒடனே யார்யாரோ சினேகிதகாரருங்க வந்து இட்டிகினு போயிருக்காங்க. மருவுவைக்க ஆசைபடராங்க......

போலீ:—ஓ! இந்த சின்னஞ்சிறு தம்பதிகள் மருவு உண்ணத்தான் போயிருக்கிறார்களா! பேஷ்! யார் வீட்டில் விருந்து? விருந்தும் சாப்பிட்டுவிட்டு ஒங்க எஜமானர் தொழிலாகிய லஞ்சத்தையும் புதிய மனைவியின்மூலம் வாங்கிக்கொண்டு வந்துவிடுவாரல்லவா? உளவறிந்த பெருச்சாளியாகிய உனக்கும் ஏதாவது கொடுப்பாரா?...

தோட்ட:— இன்னுங்க அப்படி சொல்றீங்க. எங்க எஜமான் அப்படி எல்லாம் ஒண்ணுமே செய்யமாட்டாருங்க. அவரு குணம் ஒங்களுக்குத் தெரியாதுங்க...

போலீ:—வாஸ்தவம்பா! அவரு குணம் எங்களுக்கு எப்பிடி தெரியும்? அவருடைய செய்கையை அறிந்து அதற்கு மரியாதை செய்து மகிழ்விப்பதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம். டேய்! சும்மாபேசாதே! ஒங்க எஜமான் எப்போ வருவாரு சொல்லு.... என்றதைக் கேட்டதும் உண்மையில் தோட்டக்காரன் பயந்து போய் திருகத்திருக விழித்தான். என்ன பதில் சொல்வதென்று தெரியாது க்ஷணநேரம் திகைத்துவிட்டான்.

மறுபடியும் சற்று சமாளித்துக்கொண்டு"சாமீ! நீங்கசொல்றது ஒண்ணுமே புரியல்லீங்களே! ஐயாவுக்கு வயசாயி கண்ணாலம் பண்ணிகிட்டது தப்புன்னு சொல்றீங்களா? அல்லாட்டிபோனா ஐயாவுக்கு நீங்களும் விருந்துவைக்கப்போறீங்களா?......எனக்கு அத்தெப்பத்தி இன்னுங்க. ஐயா இன்னும் கொஞ்சநேரத்திலே வருவாரு; குந்திக்கிட்டிருங்க.இல்லாட்டிபோனா இன்னும் கொஞ்ச நேரங்கயிச்சு வாருங்க" என்றான்.

அதில் ஒரு இன்ஸ்பெக்டர் சிரித்துக்கொண்டே "ப்ரமாதமான விருந்துவைப்பதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். டேய்! உண்மையை நீ ஒளிக்கப்பார்க்கிறாய்; உங்கள் எஜமானர் எங்கேபோனார்? எப்போதுவருவார்? உடனே சொல்லு" என்று அதட்டலாகக் கேட்டார்.

குறிப்பறிவதிலும் தப்பறிவதிலும் மிகவும் சூக்ஷமம்வாய்ந்த மற்றொரு இன்ஸ்பெக்டர் "சார்! நீங்கள் இவனுடன் பேசிக்கொண்டிருங்கள்; இந்தவீட்டுத்தோட்டத்தில்உயர்ந்த பழவகைகள் அடங்கிய மரங்கள் ஏராளமாக இருக்கின்றனவாம்.மொட்டுமொட்டென்று எத்தனைநேரம் உட்கார்ந்திருப்பது. அப்படி சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறியவாறு அவர் கிளம்பியதைப் பார்த்ததுதான் தாமதம். தோட்டக்காரன் தலையில் செம்மட்டியாலடிப்பதுபோல் தோன்றி கதிகலங்கச் செய்துவிட்டது. பின்புறமுள்ள தன் குடிசையில் சர்மா ஒளிந்திருப்பதை எங்கே கவனித்துவிடுகிறாரோ என்கிற நடுக்கல் இவனை வாட்டியது.

இவன் நடுங்குவதைப் பார்த்துக் குறிப்பாலறிந்துகொண்ட இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் ஆங்கிலத்தில் மற்றவர்களுக்கு இவனுடைய நடுக்கலைக் காட்டி "இவனை கவனித்துக்கொள்ளுங்கள். நான் பின்புறம்போய்ப் பார்த்துவருகிறேன்." என்று கூறிவிட்டு நேரே தோட்டத்துப் பக்கம் சென்றார். ஏதோ பெரிய அனர்த்தம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த தோட்டக்காரன் செய்வதறியாது திக்ப்ரமைகொண்டு தவிக்கிறான். அவன் கண்கள் சுழலமிட்டுக் கால்கள் நடுங்கவாரம்பித்து மூச்சும் தாத்தியது.

---

## 22

நோட்டுக்களைச் சுருட்டிக்கொண்டு தோட்டத்து குடிசையில் புகுந்த சர்மாவின் பயமும் நடுக்கமும் சொல்லமுடியாது. தான் உள்ளேசென்றவுடனேயே முதலில்நோட்டுக்களைக் கொளுத்திவிட வேண்டுமென்ற தீவிர எண்ணம் உண்டாகியது. தோட்டக்காரன் குடிசையில் கொளுத்த வசதிகள் கிடைக்காததால் அந்த நோட்டுக்களை ஒரு கந்தத்துணியில் ஒரு கல்லையும் வைத்து அழுத்தமாகக் கட்டிக் கிணற்றில் போட்டுவிட்டு மறுபடியும் குடிசையில் புகுந்துகொண்டார். யாராவது இந்தப் பக்கம் வருகிறார்களா! தோட்டக்காரன் தன்னைக் கூப்பிடவருகிறானா என்று குடிசைக்குள்ளிருக்கும் கீத்தை விலக்கிப் பார்த்துக்கொண்டே திகிலும் கிலியும் பிடித்துக்கொண்டு நின்றார். சற்று தூரத்தில் பூட்ஸ் ஓசைகேட்டதும் சர்மாவின் குலைநடுக்கம் அதிகரித்துவிட்டது. தன்னுடைய திமிர்கொண்ட செய்கையின் அவகேடு இப்போதுதான் நன்றாகப் புரிந்தது. அதோடு தன் மனைவி படித்துப்படித்துச் சொல்லியதெல்லாம் இப்போதுதான் பளிச்சென்று தெரிந்து உள்ளத்தைக் கிளறியது. 'மாதம் பிறந்தால் விள்ளாது விரியாது ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வாங்கும் ஒரு பெரிய மனிதனின் செய்கையா இது!' என்று தன் மனைவி கூறிய வார்த்தைகள் கணீர் கணீர் என்று காதில் ஒலிப்பதுபோல் தெரிந்தது.

"அத்தகைய உத்யோகஸ்தனாகிய நானா குடிசைக்குள் புகுந்துகொண்டு திருடன்போல் ஒளிகிறேன். அடாடா! நான் எத்தகைய துஷ்க்ருத்யங்களைச் செய்து பேராபத்தை விலைக்கு வாங்கிவிட்டேன். இந்த விபரீத வெட்கக்கேட்டை ஊரார் அறிந்தால் எத்தகைய அவமானம். "ஊருக்கெல்லாம் உபகாரியாய் உழைத்து ப்ரமாதமான பெயரெடுத்துள்ள மகனைப் பெற்ற பாவியா இவன்!" என்று உலகம் தூற்றும்படியாகச் செய்துகொண்டதோடு அவனை வீட்டைவிட்டும் துரத்திவிட்டேனே! இந்த சமயம் அவன் இங்கு இருந்தால் எத்தனை உதவியாக இருக்கும். ஒன்றும் தெரியாத தோட்டக்காரன் என்ன பேசப்போகிறானோ! எப்படி தத்துபித்தென்று அகப்பட்டுக்கொள்வானோ?" என்று கவலையும் துக்கமும் சொல்லத்தரமற்ற வேதனையுடன் துடிதுடித்தவாறு குடிசையின்

சுவருடன் சாத்தியிருந்த மற்ஞெரு ஓலைப்பாயின் மறைவில் புகுந்து கொண்டு பாயைமேலே மறைத்துக்கொண்டார்.

தோட்டத்தின்பக்கம் வந்த இன்ஸ்பெக்டர் வெங்கீர ரும், ஸாமான்கள் போடும் அறை, கட்டைமுட்டைகள் போடும் அறை முதலியவைகளைப் பார்த்துக்கொண்டுதான் வந்தார். என்னவிருப் பினும், லஞ்சம் வாங்குகிற இழிவான புத்தி இருப்பினும் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் பெரிய மனிதர் இப்படி கேவல மாகப் புகுந்துகொள்ளமாட்டார் என்று அவருக்குத் தோன்றியது. அதனுல் இன்னுமுள்ள இடங்களில் உள்ளே நுழைந்து பார்க்கவில்லை. எனினும் தோட்டக்காரனின் முகம் ஏன் அப்படி மாறவேண்டும், அவனுடைய உணர்ச்சி ஏன் மாறவேண்டும் என்று ஒரு எண்ணம் தோன்றியது.

மறுபடியும் யோசனையுடன் ஒருதரம் தோட்டத்தைச் சுற் றிப்பார்த்தார். தோட்டக்காரனின் குடிசையில் எட்டிப் பார்த்தார். இருட்டான மூலையில் பாயுடன் பாயாக ஒட்டிக்கொண்டிருக்கும் சர்மாவின் இருப்பிடம் தெரியவில்லை. பூட்ஸ் ஓசை குடிசையின் சமீபத்தில் கேட்கக்கேட்க சர்மாவின் உயிர் ஊசலாடிக்கொண் டிருக்கிறது என்பதைக் கூறவாவேண்டும்?

"இனி என் ஜென்மத்தில் அக்ரமமான எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. இது சத்யம். கடவுளின் நினைப்பே அற்று கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று மதயானையைப்போலத் திரிந்து நானும் கெட்டு குடும்பத்து கண்ணியத்தையும் கெடுத்து உலகம் இழிவாகப் பேசித் தூற்றும் முறையில் சகல அம்சத்திலும் செய்து விட்ட மகாபாவத்தை இப்போது இந்த நாகவேதனையில்தான் அறி கிறேன். அடிக்கடி அந்தபுண்யவதி "சக்கனிராஜ மார்க்கமுலுண்டக சந்துல தூரனேல ஓ மனஸா"....என்று ஸ்ரீ த்யாகய்யர்வாளின் கீர்த் தனத்தினுல் என்னைத் திருத்த முயன்றதையும் லக்ஷியம் செய்யாமல் பாழாகிவிட்டதற்குப் பலன் இந்த ஒரு சம்பவமே போதும்!

பகவான் தன்னை அனவரதமும் பஜிக்கும் பக்தர்களைக்கூட நன் ருக சோதித்தப்பின்னர் இன்பநிலையைக்கொடுத்ததாகப் பெரியோர் கூறியதை மதிக்காது திரிந்த நான் பகவானையே பஜிக்காமல் பணம் பணம் என்று பறந்து பாழாகிய சண்டாளனை பகவான் சோதிக் காமல் சும்மா விடுவாரா? வேணும்! வேணும்! மகா ஈனஜென்ம மெடுத்துள்ள என் வயிற்றில் சேற்றில் செந்தாமரை பூத்ததுபோல உத்தம வீர வாலிபன் எப்படியோ பிறந்து எனக்கே புத்திமதிகள் எடுத்துரைத்தும் என் செவியில் விழாமல் யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொண்டதுபோல் என்னை நானே பாழாக்கிக்கொண்டு அவனை ஊரார்வீட்டுப் பெண்ணெதிரில் அடிக் கவும் துணிந்தேனே! சீச்சீ! அந்த பாதகச்செயல்தான் என்னை இப்படி வதைக்கிறது. வேணும்! வேணும்! நன்ருக வேணும்." என்று தனக்குள் எண்ணி மனம் தத்தளித்து தன் குற்றத்தை உணர்ந்து வருந்துகையில் தான் புகுந்த குடிசைக்குள்ளேயே

இன்ஸ்பெக்டர் எட்டிப் பார்ப்பதை பாயின் சிறுசிறு த்வாரத்தின் வழியாயும் நிழல்,பூட்ஸ்ஓசை,முதலியவைகளாலும் அறிந்ததுதான் தாமதம், தன்னுயிரை நேரே எமனேவந்து கட்டிஇழுப்பதுபோன்ற ஒரு தாங்கமுடியாத அதிர்ச்சியும் பயமும் தோன்றி உடல் பூராவும் வெயர்வை வெள்ளம் பொங்கி வழிய அவருடைய ஸ்மரணையே தப்பிவிடும்போலாகிவிட்டது.

எட்டிப்பார்த்த ஆள் திரும்பிப்போய்விட்டதைஅறிந்த பின்னர் தான், எமன் தன்னை விட்டுவிட்டுச் சென்றதாக ஒரு பெருமூச்சு வந்தது. இம்மாதிரி சோதனைகள் ஏறஏறத்தான் அவர் மனத்தின் போக்கு மாறி நன்ருகத் திருந்தி ஒருவித வைராக்யத்துடன் உறுதி கொள்ளஆரம்பித்தது.

"கலாவதி சென்ற இடமும் தெரியாது; தேவநாதன் சென்ற இடமும் தெரியாதே. என்னசெய்வது? பாழும் பணம்! பணம்! என்று கொள்ளிவாய்ப் பிசாசுபோல் இரவு பகல் லஞ்சம் வாங்கிச் சம்பாதித்துச் சேர்த்துள்ளதை ஆண்டு அனுபவிக்கும் உரிமை யுள்ள குழந்தைகளையும், பாவம்! ஏழைப்பெண் கலாவதியையும் மனத்தைப் புண்ணுக்கி விரட்டியடித்த மகா பாவி இனிமேல் எதை எண்ணி என்ன பயன்? இனியாவது இத்தகைய யகத்தான பாத கத்தைச் செய்யாது மனது உறுதியாக இருந்தால் போதும். இதே இடத்தைக் கோயிலாகக்கொண்டு ப்ரதிக்ஞை செய்துகொள்கிறேன். இந்த இரவு தப்பித்துவிட்டால் நாளைக்குள் என் வாழ்நாளையே வேறு வழியில் மாற்றிவிடுகிறேன்" என்று தனக்குள் கூறியவாறு உட்கார்ந்தார். 'இதைவிட நரகவேதனை இனி வேறு வேண்டாம்' என்று தோன்றியது.

தோட்டக்காரன் எப்போது தன்னைக்கூப்பிட வருவான் என்று அதையே எதிர்பார்த்திருந்தார். தோட்டத்தைவிட்டு இன்ஸ்பெக் டர் உள்ளே வருகிறவரையில் தோட்டக்காரனின் மூச்சு திணறிக் கொண்டே இருந்தது. இதை விட்டுப்போவதற்கும் மனத்துணிபு வரவில்லை. எங்கே தன் எஜமானர் அகப்பட்டுக்கொள்கிருரோ என்கிறபயம் வேறு வதைத்ததால்,துடித்தவாறு நின்ருன். இன்ஸ் பெக்டரைப் பார்த்த பிறகுதான் அவனுக்கு மூச்சு சரியாக வந்தது.

வந்த இன்ஸ்பெக்டர் ஆங்கிலத்தில் மற்றவர்களிடம் தோட் டத்தில் ஒருவருமில்லை என்றும் என்ன இருப்பினும் பெரியமனிதன் இம்மாதிரி ஒளியமாட்டான் என்று தோன்றுவதாகவும் சொல்லி விட்டு, வாசலில் ஒரு சேவகனை மட்டும் காவல்வைத்துவிட்டு "நாம் வெளியே போய்வரலாம். அதற்குள் வந்துவிடுவார்" என்ருர்.

பிறகு தோட்டக்காரனைப் பார்த்து "டேய்! நாங்கள் போய் நாஸ்தா பண்ணிவிட்டு வருகிறேம். அதற்குள் உங்கள் எஜமானர் வந்தால் நாங்கள் வந்துபோனதையும், உடனே திரும்பி வருவதாயும் சொல்லு" என்று கூறிவிட்டு, வாசலில் ஒரு ஹெட்கான்ஸ்டேபிளை காவல்வைத்துவிட்டுப் போனுர்கள்.

இம்மட்டுமாவது தனக்கும் எஜமானருக்கும் சற்று வழியுண்டாகியதே என்று எண்ணியவனுய் அவர்கள் சென்றதும் தோட்டக்காரன் வீதியிலிருக்கும் சேவகனுடன் தானும் சற்று நின்றான். அதற்குள் இவனுக்கோர் யுக்தி தோன்றியது. "அப்பா! நீ இப்பிடி பாத்துக்கோ! அப்போம்புடிச்சு பொழைக்கடைப்பக்கம் போவணும். வவுத்தெ வலிக்குது. யாராச்சும் வந்தா இப்பிடி குந்திருக்கச் சொல்லு. இதோ வந்துடறேன்" என்று கூறிவிட்டு ஓட்டமாகப் பின்புறம் போய் "சாமீ! ஒரு சேவகனைமட்டும் வாசல்லே காவல் வெச்சுட்டு மத்தவங்க போயி இருக்கறுங்க. அவங்க பேசிகிண வார்த்தேலேந்து கள்ளநோட்டுக்குமட்டும் வல்லேன்னு தெரியுது. சாமீ! ஜாக்ரதையா தப்பிச்சுக்குங்க" என்றான்.

அதற்கு சர்மா, "டேய்! நீ முதலில் வாசல்லேயே அந்த ஆளுடன் பேசிக்கொண்டிரு. நான் உள்ளேவந்து ஒருக்ஷணம் சில காரியம் செய்துவிட்டுப் பின்புறமாக வெளியேபோய் வாசல் பக்கம்வந்துவிடுகிறேன். பிறகு பயமே இல்லை. ஜாக்ரதையாயிரு" என்று கூறினர்.

தோட்டக்காரன் வாசலில்வந்து சேவகனுடன் பேசியபடியே வாசலில் விற்கும் மலைப்பழம், கமலாரஞ்சு முதலியவைகளை பேரம்செய்து வாங்கிக்கொடுத்து அவனைச் சாப்பிடச்செய்து பலாக்குக்காட்டிப் பொழுதை வளர்த்தினன்.

இதற்குள் சர்மா விசித்திரமான மாறுதலுடன் உள்ளே பூனை போல்வந்து இரும்புப்பெட்டியை ஓசைப்படாமல் திறந்து அதிலிருந்த நோட்டுக்களில் சில நூறுரூபாய் நோட்டுகள் தவிர மற்றவற்றை அப்படியே எடுத்து ஒரு சிறிய பெட்டியில் வைத்து, வெந்நீர் அறையில் உள்ள ஒரு பெருச்சாளி பொந்துக்குள் வைத்து மேலே கங்காளத்தைத் தூக்கிவைத்து மூடி, அதில் ஜலத்தை நிரப்பிவிட்டுத் தான் சரியான உடையணிந்துகொண்டு தோட்டத்து வழியாய் வெளியே போய்விட்டார். அதன்பிறகுதான் அவர் மனது சாந்தியடைந்தது.

வாசலில் காவலிருக்கும் சேவகன் டெஜன் கணக்கில் பழங்களைத் தள்ளியவாறு உட்கார்ந்திருந்தான். வெளியே இருந்து வருவதுபோல் சர்மா சற்று நேரத்திற்கெல்லாம் வந்தார். வாசலில் சேவகன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து வியப்புற்று, "யாரு! என்ன சமாச்சாரம்?......எங்கு வந்தீர்கள்?" என்று மிகவும் புதிதாய்க் கேட்பதுபோல் கேட்டார்.

தோட்டக்காரன்:—எஜமான்! நீங்க எங்கே போனீங்க? எப்போ வருவீங்கன்னு தெரியாது நான் முழிக்கிறேன். இன்னும் யாரோ இனிஸிபெட்டர் ஐயாங்க கூட வந்தாங்க. மறுபடியும் வரேன்னு சொல்லி இருக்காங்க. இவருமட்டும் இங்கே இருக்கிறாரு. எனக்கு என்னமோ ஒண்ணுமே புரியலீங்க; போலீஸ் காரங்கன்னாலே எனக்குப் பயங்க!

சர்மாவைப் பார்த்துக்கொண்டே பின்தொடர்ந்து வருவதுபோல் முதலில் வந்த போலீஸ்காரர்கள் வந்துவிட்டார்கள். சர்மா அவர்களைப்பார்த்து வெகு உத்ஸாகமாய் வரவேற்று, "வாருங்கள்! என்ன சாமாச்சாரம்? இப்படி உட்காருங்கள்" என்று ஆசனமளித்து உபசரித்தார்.

இன்ஸ்பெக்டர்:—சார்! நீங்கள் தயவுசெய்து உங்கள் இரும்புப் பெட்டியைத் திறந்து காட்டவேண்டும். உங்கள்மீது லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதனுல்தான் நாங்கள் இதோ உத்திரவுடன் வந்திருக்கிறோம்" என்றார்.

உடனே சர்மா "என்ன! லஞ்சம் வாங்கியதாக குற்றச் சாட்டா? இதென்ன விபரீதம்? எந்த கிராதகன் இம்மாதிரி சொல்லியது! இரும்புப்பெட்டிமட்டும் பார்ப்பானேன். வீட்டையே சோதனை போடுங்கள். இதோ சாவிகள், பாங்கி புத்தகங்கள் சகலமும் இந்தாருங்கள்..."டேய்! ராமா! வீடு பூராவும் இவர்கள் பார்க்கும்படி அழைத்துச்சென்று காட்டு......சார்! அரிசி, புளி, முதலிய சாமான் வைக்கும் உக்ராண உள்ளேக்கூட பார்க்கலாம்" என்று சற்று படபடத்துக் கோபத்துடன் கூறுவதுபோல் கூறி, சகல சாவிகளையும் உதாசீனமாக வீசி எறிந்தார்.

இச் செய்கை போலீஸாருக்கே மிகவும் ஆச்சரியமாகவிருந்தது. இரும்புப் பெட்டியைக்கிளறியதில் சில நூறுரூபாய் நோட்டுக்களைத் தவிர வேறு எதுவுமே இல்லே. பாங்கி புத்தகங்களைப் பார்த்தால் அதில் 10-ஆயிரம் ரூபாய்க்கு ரொக்கம்மட்டும் இருந்தது. இன்ஷியூர் பாலிஸிகள், கவர்மெண்டு ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள், முதலியவைகள் சுமாராகத்தான் இருந்ததேயன்றி, கள்ளநோட்டுமில்லே இவர்கள் எந்த சந்தேகத்திற்காக வந்தார்களோ அந்த நோட்டே இதில் இல்லே.

அதாவது சர்மா லஞ்சம் வாங்குகிறார் என்கிற புகார் வெகு காலமாகவே உலாவுகிறதை ஊர்ஜிதப்படுத்திக் கையுங் களவுமாகப் பிடிப்பதற்காகவே முதல்நாள் சில நோட்டுக்களில் அதிகாரிகள் ஒருவிதமான அடையாளம் குறிப்புவைத்து அவற்றைச் சர்மாவிடம் லஞ்ஜமாகச் சேர்க்க ஏற்பாடு செய்தார்கள். அந்த நோட்டுக்களின் நம்பர்களைக்கொண்டு அவை இங்கு கிடைத்துவிட்டால் சர்மாவை சுலபமாக மடக்கிவிடலாம் என்று செய்த சாகஸத்தில் தோல்வியே உண்டாகிவிட்டதுகண்டு இன்ஸ்பெக்டர்கள் திகைத்தார்கள்.

இம்மாதிரி உளவுடன் போலீஸார் வந்திருப்பது சர்மாவுக்குத் தெரியாது எனினும், இரும்புப் பெட்டியில் ஏராளமாய் நோட்டிருப்பதைக்கண்டு தன்மீது சந்தேகம் உதிக்கலாம் என்பதற்காக அவர் முன்கூட்டி நோட்டுக்களை மறைத்தாரேயன்றி வேறில்லே. போலீஸார் கள்ளநோட்டு விஷயமாகமட்டும் வரவில்லே என்பதை தோட்டக்காரன் சொன்னபிறகுதான் இந்த யோசனேயும் தோன்றியது. போலீஸ்காரர்கள் தமக்கு வேண்டியபடி சகலமும் சோதனை போட்டுப் பார்த்தார்கள்.

கணக்குப் புத்தகத்தில், பாங்கி புத்தகத்தில் இவருடைய வருமானத்திற்குச் சரியான குறிப்புகளே கிடைத்ததால்,மேல்கொண்டு ஒன்றுமே செய்யமுடியவில்லே. வீடு பூராவும் ஒருமுறை பார்த்த பிறகு "சார்! நாங்கள் போய்வருகிறோம். எங்களுடைய கடமையை நாங்கள் செய்தோம். மன்னிக்கவேண்டும்" என்று கூறிச் சென்றுவிட்டார்கள்.

போலீஸார் பேசிக்கொண்டதிலிருந்தும் அவர்கள் தேடியதிலிருந்துந்தான் சர்மாவுக்கு போலீஸார் அடையாள நோட்டுவிஷயமாகத்தான் வந்தார்கள் என்பது புரிந்தது. தான் முன் ஜாக்ரதையாய்ச் செய்த காரியம் எத்தனை தூரம் தன்னுடைய பேராபத்தை நீக்கிக் காப்பாற்றியது! "அந்த ஆபத்தான நிலைமையில்சற்று நேரமாவது பகவானை பஜித்து ப்ரார்த்தனைசெய்து வைராக்யமும் உறுதியும் அடைந்ததனுல்தான் இத்தகைய புத்தியைக்கொடுத்து ரக்ஷித்தார்போலிருக்கிறது. "ஆபத்து வந்துள்ளகாலே ஆண்டவனை ஸ்மரிப்பது; இல்லாதபோது திமிருடன் திரிவது. இது மகா அக்ரமம்" என்று என் தாயார் அடிக்கடி சொல்லிய வாக்யத்தை இன்று நானே பிரத்யக்ஷமாக அறிந்துவிட்டேன். இனி இந்த நிமிஷம் உண்டாகிய உறுதியைவிட்டு மாறப்போவதே இல்லே. இது சத்யம்" என்று தனக்குள் தானே எண்ணியபோது அவரை யறியாத ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது.

## 23

புதிய மணவாழ்க்கையில் தான் பேரின்பத்தை யடைந்து ப்ரமாதமாய்த் திளேக்க எண்ணி இரண்டாம்பேர் அறியாது வெகு சுறுசுறுப்புடன்செய்த காரியத்தின் பலன் எப்படி எப்படி எல்லாம் உணர்ச்சியையே மாற்றிவிட்டது என்று தனக்குள் சர்மா எண்ணியபடியே ஊணுறக்கத்தை அடியோடு வெறுத்துப் படுத்துப் புரண்டுகொண்டிருந்தார். தான் இருப்பது வீடா! காடா! என்ற உணர்ச்சியே உண்டாகியது.

உடனே எதையோ எண்ணியவராய் தோட்டக்காரனே வாசற்புறம் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுத் தான் கீழே வந்து வென்னீர் அறையில் மறைத்திருந்த நோட்டுக்களே எடுத்து மிகவும் கூர்மையாய்க் கவனித்தார். நான்கு 500 ரூபாய் நோட்டுக்களில் ஒருவிதமான குறி போட்டிருந்ததைக்கண்டு தனியாக எடுத்து வைத்தார். மற்ற எல்லா நோட்டுகளேயும் அதேபோல் கூர்ந்து கவனித்தார். குறி ஒன்றும் இல்லாததுகண்டு அவைகளே எண்ணினர். சுமார் 25 ஆயிரம் ரூபாய்க்கு இருப்பதைப் பார்த்ததும்,"அடாடா! இத்தனையும் நாம் லஞ்சம் வாங்கிய பணமா! எத்தனை குசாலாக வாங்கிய பணம்! எத்தனை விபத்தில் நம்மை மாட்டவைத்து எத்தகைய புத்தியைப் புகட்டி என் மூடத்தனத்தை நானே அறிந்திருந்தும்படி உபதேசமும் செய்துவிட்ட ஆச்சரியத்தை என்ன

வென்று சொல்வது?" என்று தனக்குத்தானே வியப்புக் கடலில் மூழ்கினார்.

விபத்தை விளைவிக்கும் அந்த குறிபோட்ட நோட்டுக்களை அப்படியே அக்னி பகவானுக்கு இரையாக்கிவிட்டு, மற்ற நோட்டுக்களை எடுத்துக்கொண்டு மறுபடியும் மாடிக்கு வந்தார். அனாதை நிலையத்திற்குப் பத்தாயிரம், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் கொடுக்கும் பால்பண்ணைக்கு 5 ஆயிரம், கோயில் ஜீர்ணோத்தாரண கைங்கர்யத்திற்கு 10 ஆயிரம் ஆக 25 ஆயிரத்தையும் முறையே கவர்களில் போட்டு உள்ளே கடிதமோ மேல்விலாஸமோ எதுவும் எழுதாமல் கவரை ஒட்டினார். தான் செய்த மகா பாவத்திற்கு இதுதான் சரியான பரிகாரம் என்று திட்டமாக அவர் மனதில் தோன்றியது.

இருள் பிரிவதற்குமுன்பே கால்நடையாகத் தானே நேரில் முக்காடுடன் சென்று கடிதம் கொடுப்பதுபோல் அந்தந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களிடம் கொடுத்துவிட்டு மன நிம்மதியுடன் வீட்டிற்கு வந்தார். இதயத்தை அழுத்திக்கொண்டிருந்த பாரம் நீங்கி ஒரு ஆனந்தமான தெம்பும் புதிய ஞானமும் உண்டாகியது.

எனினும், தன் வீட்டை போலீஸார் சோதனைபோட்ட விஷயம் வெளியாரறிந்தால் என்ன அவமானம், எப்படி பிறர் முகத்தில் விழிப்பது என்கிற வேதனையும்உண்டாகி வதைத்தது. நல்லவேளைக்கு இவர் ஆபீஸில் லீவு எடுத்திருப்பதனால் வீட்டுடன் உட்கார்ந்திருப்பதையே அன்று வ்ருதமாகக் கொண்டார். சமையல்காரனும் இல்லாததால் காப்பிக்கும் வழியில்லை. முதல்நாள் பட்டுள்ள மனக் கொதிப்பும் திகிலும் பட்டினியும் ஒன்றுகூடித் தாளாமல் திடீரென்று ஜுரம் உண்டாயிற்று. தன்னுடைய அலங்கோலமான நிலைமையில்தான், தன்வீடு காடாயிருப்பதும் தன் வாழ்வு ஸாரமற்ற சூன்யமாய் இருண்டு கிடப்பதும் நன்றாகத் தெரிந்தது.

மனம்போன போக்கில் திரிந்து, 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்,' என்றிருந்த நிலைமையில் திடீரென்று ஒரு பூகம்பத்தின் அதிர்ச்சிபோல் ஒன்றன்பின் ஒன்றாகச் சோதித்துவிட்டதால் அதைத் தாங்காமல் படுத்துவிட்டார்.

தோட்டக்காரன் இவருடைய நிலைமையைக் கண்டு பரிதாபமடைந்து, "சாமீ! இப்பிடியே கடந்தா இன்னாபண்றதுங்க. ஒங்களேபாக்க எனக்கு சங்கடமாயிருக்குதுங்க. இந்த பாலெ நானே காய்ச்சிகொண்டாந்தேன். இதையாவது சாப்பிடுங்க" என்று பலவந்தப்படுத்தினான்.

சர்:—ராமா! உன்மனைவி கலாவதியுடன் போயிருப்பதாகச் சொன்னாயே! எந்த ஊருக்குப் போயிருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா? நீபோய் அவர்களைத் திருப்பி அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறாயா! அதோடு நம்ப தேவநாதனையும் தேவகியையும்

தேடி அழைத்து வருகிறாயா...எனக்கு ஏதோ பயித்யம் பிடித்தது போலிருக்கிறது. கண்ணிருந்தும் கபோதியாகிவிட்டேன். குழந்தைகளைப் பார்க்க மனம் துடிக்கிறது. எங்குபோனார்கள் என்று உனக்குத் தெரியுமா?

தோட்ட:—எனக்குத் தெரியாதுங்களே எம்பொஞ்சாதி போன ஊருகூட அம்மா சொல்லவாணும்னு சொன்னாங்களாம், அவசொல்லாமே போயிட்டாளே...சாமீ! நம்பவூட்டு சமயல்கார ஐயாவே கேட்டா நம்ப கொயந்தேங்க போயிருக்கிற இடம் ஒரு வேளே தெரிஞ்சிருக்கும். அவரை நான்போய் இட்டாரட்டுமா?

சர்மா:—ராமு! நானே அவனை அழைக்துவரும்படி உன்னிடம் சொல்ல எண்ணினேன். நீயே கேட்கிறாய். நடந்தவிஷயம் எதையும் அவனிடம் சொல்லாமல் நான் கூப்பிடுவதாகப் போய் அழைத்துவா—என்றார்.

ராமு அப்போதே போய்ச் சமயல்காரர் ஊரில்லை என்று திரும்பிவிட்டான். கலாவதிமட்டும் தன் தாய்வீட்டிற்குத் தானே போயிருக்கவேண்டும். வேறு எங்கு அவளுக்கும் இடம். அந்த இடத்தை ராமனுக்குச் சொல்லி அனுப்ப நினைத்தார். ஆனால் தன்னிலே தெரிந்தும், தன்னை மணந்த ஒரு யுவதிக்கு தான் நோய் வாய்ப்பட்டுள்ள நிலைமையில் அவள்வந்து துக்கப்படவேண்டாம்; ஜுரம் குறைந்ததும் தானே நேரில்போய் அழைத்துவருவது என்று தீர்மானித்துக் கொண்டார். அந்த எண்ணமே மனத்திற்கு சற்று ஆறுதலளித்தது.

---

## 24

பிறகு எத்தகைய சந்தடியுமின்றி சில நாட்கள் கழிந்துவிட்டன. சர்மாவின் ஜுரம் குணமாகவே இல்லை. தோட்டக்காரனின் கவலையோ சொல்லிமுடியாது, என்னசெய்வதென்று தவித்தவாறு சர்மாவின் பக்கத்திலேயே இருந்து கவனித்துவந்தான்.

அன்றுவந்த பத்ரிகையில் பொம்மை பார்க்கும் தோட்டக்காரன் அதில் தேவநாதன் படம் வந்திருப்பதைப் பார்த்து பூரிப்படைந்து "எஜமான்! எஜமான்! இதோ பாருங்க, நம்ப சின்ன எஜமான் படம். இதிலே என்ன எயுதியிருக்கு படியுங்க எஜமான்! இது எந்த ஊருன்னு பாருங்க. இப்பவே நான்போய் கூட்டியாந்துட்றேன்" என்று பரக்கப்பரக்கக் கூறி படத்தைக்காட்டினான்.

தாகம்தாகம் என்று தவிக்கும் மனிதனுக்கு துலாம்பரமான காவேரி ஜலமும் கங்கை ஜலமும் ஏராளமாகக் கிடைத்துவிட்டால் எத்தனை சந்தோஷப்படுவானோ அதேபோல் சர்மா அந்தப் படத்தைவாங்கி ஆவலே வடிவாகப் பார்க்க உள்ளம் உருகி ஒருவித உணர்ச்சிமேலீட்டால் கண்களில் நீர் பொங்கி புத்திரவாத்ஸல்யம் மேலிட்டுப் பூரித்தது.

## ஜெயபேரிகை யடித்த ஜெயவீரன்.

ஆலம்பாக்கம் கிராமத்தில் மிராசுதாரரின் வேலையாட்களுக்குள் மூண்ட கலகத்தை இப்படத்திலுள்ள தேவநாதன் என்கிற வாலிபன் வெகு சாந்தமாக அடக்கிச் சமரசத்தை உண்டாக்கி பழயபடியான நிலைமையில் ஆட்கள் வேலை செய்யும்படியாகச் செய்துவிட்டான். கூட்டத்துக் கலவரத்தில் எதிரிகள் தேவநாதனை நன்ருக அடித்துவிட்டதால் அவன் ஆஸ்பத்திரியில் இருக்கிறுன். ஆண்டவன் அவனுக்கு சகலவித க்ஷேமமும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். வாழ்க தேவநாதன்.

என்றதைப் படிக்கப் படிக்க அவர் உள்ளம் குழைந்து கண்ணீர் ஆருகப் பெருகுகிறது. அதே பத்தியில் கொட்டை எழுத்தில்.

## வாரி வழங்கிய வள்ளல்

தன் பெயரோ, அதன் அறிகுறியோ, ஒன்றுமே இல்லாமல் அனுதை நிலயம், பால்பண்ணை, கோயில் ஜீர்ணேத்தாரணம் முதலியவற்றிற்கு 10,5,10 ஆயிரமாக ஒரு வள்ளல் வாரி இறைத்திருக்கிறுர். கடிதத்தில் விலாசங்கூட ஏதோ பத்திரிகையில் அச்சாகி இருந்ததைக் கிழித்து ஒட்டியிருக்கிறது. தான் தர்மம் செய்வது வலக்கைக்குத் தெரிந்தது இடக்கைக்குத் தெரியக்கூடாது என்பது பழயமொழி; இக்கலியில் அத்தகைய மகான்களை த்யாகிகளைக் காண்பதே அரிது. கருப்பு மார்க்கெட்டிலோ, லஞ்சம் வாங்கியோ சேர்த்துள்ள பணமாயினுங்கூடத் தம் பெயர் ப்ரக்யாதியாய்ப் பரிமளிக்கும் வகையில் படாடோபமாகக் கொடுப்பதையே நாம் கலியுகத்தில் பார்க்கிறோம். அப்படிப்பட்ட காலத்தில் இத்தகைய மகோபகாரியும் உலகிலிருப்பதனுல்தான் மழை பெய்து க்ஷேமத்தைக் கொடுக்கிறது. வாழ்க வள்ளல்.

என்று பத்திரிகைக்காரர்களே எழுதியிருந்ததையும் தானே படித்தார். ஆனுல், அதனுல் மனது அதிக உணர்ச்சியை அடையவில்லை. தன் மகனுடைய ஆபத்தான நிலைமைகண்டு கவலையும், அவன் நேர்வழியாக உலகிற்குப்பாடுபட்டுப் புகழ் சம்பாதித்திருக்கும் உத்தம வழியைக் கண்டு பூரிப்பும் உண்டாகி உணர்ச்சி மேலிட்டுவிட்டது. அதை அடக்கமாட்டாது...டேய், ராமு! நம்ப குழந்தைகள் ஆலம்பாக்கம் என்கிற க்ராமத்திலிருக்கிறுர்களாம். அங்கு நடந்த சண்டையை தேவநாதன் சமாதானம் செய்ததில் பலத்த அடிபட்டு ஆஸ்பத்ரியில் இருக்கிறுனும் என்று சொல்லும்போது அவரால் தாங்கமுடியாது அழுதுவிட்டார்.

"என்ன! என்ன! அடிபட்டு ஆஸ்பத்ரியிலிருக்கிறுங்களா! ஐயோ! நம்ப சின்ன எஜமானு...சாமீ! நான் இப்பவே ஓடிப் போரேனுங்க. நீங்க படுத்திருங்க. என் மச்சானே ஒங்களுக்குத் துணை வெச்சுட்டுப்போரேனுங்க. என்ன கஷ்டகாலங்க இது?

நம்ப ராஜாவுக்கு ஒண்ணுமில்லாமே இருக்கணுமே"...என்று அவனும் கண்ணீர் உதிர்த்தான்.

சர்மா:—டேய்! நான் மகா பாவிடா! இப்போதுதான் நான் செய்த படுமோசம் தெரிகிறது. இத்தகைய வீரமகனை நான் வாய் கூசாமல் பயித்தியம் என்றும் தூர்த்தன் என்றும் என்னுடைய கேவலமான அல்ப ஆசைக்காகச் சொல்லிவிட்டேனடா! அந்த முட்டாள்தனத்தின் பயங்கரம் என்னிதயத்தை இப்போது பிளக்கிறது. ராமா! நீ உடனே போய் என்னுடைய கண்மணிகளையும் கலாவதியையும் அழைத்துக்கொண்டுவா!...ராமா...என்னுடைய மானக்கேட்டைமட்டும் சொல்லாதே—என்று கூறியபடியே இரும்புப்பெட்டியைத் திறந்து 500 ரூபாய்களை எடுத்து அவனிடம் கொடுத்து "இந்தா! இதை வைத்துக்கொண்டு ஒரு சிறிய நிலத்தை வாங்கு. இன்னும் பணம் கொடுக்கிறேன்." என்றார்.

ப்ரமித்துப்போன ராமன் "சாமீ! இதெல்லாம் எதுக்குங்க. என் காலம் முடிய என்னெ வெச்சு ஆதரிச்சுடுங்க. அது போதும். நம்ப கொயந்தெங்க வந்து வூட்லே பழுய களை வந்தா போதுங்க" என்று சொல்லும்போது ராமா! "பழயகளை வாராமலென் போகிறது? இதோ இப்போதே வந்துவிட்டது" என்று மணியடிப்பதுபோல் கலாவதி கூறியவாறு உள்ளே நுழைந்தாள். பின்னுலேயே தலையில் கட்டும் கையில் கட்டுமாக தேவநாதன் மிக்க பயபக்தியுடன் வருவதையும் பார்த்த ராமு "எஜமான்! எஜமான்! அதோ நம்ப கொயந்தெங்க, எஜமானியம்மா......எல்லோரும் வந்துட்டாங்க. என்ன ஆச்சிரியங்க. அம்மா எப்படியோ கொயந்தெங்களே இட்டாந்துட்டாங்களே...சின்னய்யா! சின்னம்மா" என்று பேசத் தெரியாமல் சந்தோஷத்தில் குதித்தான்.

சர்மா தன்னை மறந்த சந்தோஷத்தில் தேவநாதனை சேர்த்துக் கட்டிக்கொண்டு "செல்வா! மனிதன் பழுத்தால் என்கிற கட்டுரையின் தத்துவத்தை இப்போதுதான் அறிகிறேன்....என் குற்றத்தை மன்னித்துவிடு கலாவதி! நீயே உத்தமி! நீயே கலியுகத்தில் உதாரணப் பெண்மணி. உன்னிடம் நான் பரிபூர்ணமாக மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு தெரியவில்லை" என்று கூறி பேசமாட்டாது தவித்தார். தேவநாதனின் உணர்ச்சி மேலிட்டது. 'அப்பா' என்று கூறமாட்டாது கூறிப் புலம்பிவிட்டான். "அப்பா! பழய விஷயங்கள் கிடக்கட்டும். கள்ளநோட்டு விஷயம் என்ன வாயிற்று? அதே வேலாயுதம் உங்களிடம் பலதரம் வந்து பேசுவதை நான் கவனித்திருப்பதால் ஓடிவந்தேன்" என்றான்.

இதைக்கேட்ட சர்மாவுக்கும் ராமுவுக்கும் ஆச்சரியமாகிவிட்டது. தனக்கு நேரவிருந்த விபத்து நீங்கிய விவரத்தைக் கூறி, "பகவான்தான் என்னைக் காப்பாற்றினர். என்னுடைய ஆணவம் அடங்கிவிட்டது. இனி நான் புனர்ஜென்மம் எடுத்துவிட்டேன்." என்று சொன்னதைக் கேட்டபிறகுதான் எல்லோருக்கும் மனது சாந்தியும் சந்தோஷமும் அடைந்தது. கணேசனும் இவர்களுடன்

கூட வந்திருப்பதைப் பார்த்த சர்மா......"யாரு....கணேசனு!"... என்று வியப்புற்றார்.

"ஆமாம். கணேசமாமாதான். அவரிடம்தான் நானும் தேவகியும் போயிருந்தோம். அவர்தான் எங்களை வைத்து ஆதரித்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்."

என்ற திருக்குறள் வாக்யத்தை இவரே கடைபிடித்துக் காட்டிவிட்டார்.

என்று முடிப்பதற்குள் சர்மா எழுந்து கணேசனைத் தழுவிக்கொண்டு "கணேசன்! என்னுடைய பெருங்குற்றத்தை மறந்துவிடுங்கள். மனிதன் மிருகமாயிருந்த காலத்தின் செய்கையை மனிதன் மனிதனுகியபிறகு மறந்துவிடுவதுதானே நலம்.

இதற்குள் கலாவதி "அடாடாடா! மனிதன் மிருகமாய் முட்டிவிட்ட குற்றத்திற்காக, மனிதன் மனிதனுகியதும் அதற்கோர் பரிகாரம் செய்ய வழி உண்டல்லவா! கணேசனுடைய மருமகளாக தேவகியைக்கொடுத்து பரிகாரம் தேடிவிட்டால் போகிறது.' என்ருள். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

கணேசன் சர்மாவைத் தழுவிக்கொண்டு "சர்மாஜி! பழய விஷயங்களைப்பற்றி இனி பேசவே வேண்டாம். எப்போதும் ஒரே மாதிரியான நிலைமை வாழ்க்கையில் உண்டாகவே உண்டாகாது. மாறிமாறித்தான் வந்துகொண்டிருக்கும். சிலருக்கு லேசாக இருக்கும். சிலருக்கு பலமாக இருக்கும். இதைத்தவிர வேறில்லை. எப்படி எல்லாம் நடந்தும் கடைசியில் நல்லதே பகவான் காட்டுகிருன் என்பதற்கு புராணங்களும், இதிஹாஸங்களும், சரித்திரங்களுமே நமக்கு ஆதாரம். அதுவே நான் நம்போன்ற சாமான்யர்களுக்கு வருமேயன்றி வேறில்லை. கலாவதியின் பரிசுத்தமான உள்ளத்தின் சக்திதான் இன்று உங்களை ஒன்றுகூட்டிப் பிணைத்துவிட்டது. முதலில் அவளுக்குத்தான் நன்றிகூறவேண்டும்" என்ருர்.

"எல்லாம் சரிதான்: முதலில் இப்போது மாணிக்கத்தைத்தேடி அழைத்துவந்தால்தான் நவரத்னஹாரம் பூர்த்தியாகும். மாணிக்கம் இல்லாததால் பூர்த்தியாகவில்லை. அதோடு சமயல்காரனும் வந்துவிட்டால் பழயபடி சகலவிதமும் சிறப்பாகிவிடும். அம்மா! நீங்கள் தான் இவ்விரண்டையும் செய்யவேண்டும்" என்று தேவகி சொல்வதைக்கேட்டு கலாவதி அவளை யப்படியே கட்டித் தழுவினுள்.

இரும்புப்பெட்டியிலிருந்த பாரம் காலியாகி இதயப்பெட்டியில் இன்பமும், சாந்தியும், பக்தியும் நிரம்பிவிட்டதால் சர்மாவின் நோய்கூடப் பறந்துவிட்டது. உண்மையான இன்பத்தின் உணர்ச்சி அவருடைய உடல்பூராவும் பரவி மின்ஸாரம்போல் தாக்கி மெய்மறக்கச்செய்தது. தேவநாதனின் பூரிப்பில் அவன் உடம்பும் குணமாகிக்கொண்டு வந்தது. பின்னும் சில நாட்களாயின. மிராசுதாரின் மகளும், கணேசனுடைய மகனும் கலாவதியின் மருமகளும், மருமகனுமாகிவிட்ட பெருமையை உண்மையில் தேவகியைப்

பெற்ற தாயார் இருந்தால்கூட அத்தனை சந்தோஷப்பட்டிருப்பாளோ என்று சந்தேகந்தான். நன்ருக அல்லல்பட்டவர்களுக்குத்தான் அடுத்துவரும் இன்பத்தின் பரிபூர்ணஉணர்ச்சி பளிச்சென்று தெரிவதுபோல் கலாவதியின் வாழ்க்கை ஒரு படிக்கட்டு உயர்ந்து ஊர் ஜனங்களை ப்ரமிக்கச்செய்தது. இந்தப் புதியவாழ்க்கையின் சந்தோஷத்தை மாணிக்கந்தான் முற்றிலும் அறிந்து உணர்ந்து அனுபவித்தாள் என்ருல் மிகையாகாது. முன்னிலும் பதின்மடங்கு இன்பம் வீட்டில் தேங்கியது.

இப்போது விச்வநாத சர்மாவின் தானதர்ம கைங்கர்யங்களை தினம்தினம் கொண்டாடாதவர்களே இல்லை. ஐக்யமும் அன்பும் ஒன்றுகூடிய குடும்ப வாழ்க்கையின் இன்பநாத கீதம்போல் ஒலிக்கும் சந்தோஷத்தில் மெய்மறந்து பூரித்தாள் கலாவதி; இதைவிட நித்யகல்யாண வைபவ மங்களசுகம் வேறென்ன வேண்டும்? வேறென்ன இருக்கிறது? அவள் விரும்பியதும் இதுதானே! உண்மையான சந்தோஷ ஸாகரத்தில் அவள் இதயம் நிறைந்து பூரித்தது. மங்களம். சுபம்.


## வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)

ரூ. 3-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
தெய்விக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி

ரூ. 1-4
கோபாலரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு

அணா. 6.
உளுத்த இதயம்

## வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4.
2. மதமா, மனமா? 1-4.
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1-8.
4. ராணி சீலாவதி 1-0.

## ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்

ப்ர. ப. அண்ணங்காசாரியர் உரையுடன் பாராயணபதிப்பு ரூ. 1-0.



| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா. | வெளிநாடு |
|---|---|---|---|
| தனிப் பிரதி | அணா 4. | 0—4—6. | 0—5—0 |
| வருடச் சந்தா | 3-0-0. | 3—8—0. | 3-12—0 |

# ‘கண்டதுமில்லை, கேட்டதுமில்லை’

## ஸ்ரீமதி T. V. ஜயலக்ஷ்மி திருவேங்கடாசாரி

ஆம்; கண்டதுமில்லை கேட்டதுமில்லை. நாம், சாதாரணமாக கல்வியோ, சங்கீதமோ, கைவேலையோ, கற்பிக்க ஓர் ஆசானைத் தேடி மாதச் சம்பளம் அளித்து அந்த வித்தையைக் கற்றுக்கொள்கிறோம். ஸ்தோத்திரப் பாடல், பிரபந்தம், கீதை முதலியவைகளை ஒருவரிடம் கற்றால், அவை முடிவுறும் போது நம்மால் இயன்ற காணிக்கையை குருவின் பாதத்தில் சமர்ப்பித்து, அவர் ஆசியுடன் அதை அநுசந்திக்கிறோம். இம்மாதிரி சிஷ்யர்கள் குருவினிடம் தம் பக்தியைத் தெரிவிப்பதைப் பார்க்கிறோமே யல்லாது சிஷ்யர்களுக்கு குரு ஞாபகார்த்தப்பரிசளிப்பதைக் கேட்டாவதிருக்கிறோமா?

ஆனால், இத்தகைய அதிசய சம்பவம் எங்கள் சங்கத்தில் நடந்தது. எங்கள் கீதாசாரியை ஸ்ரீமதி கனகம்மாள் (சங்கத்தில் கீதை கற்பிக்கும் ஆசிரியை) செய்த அற்புதவேலைதான். எங்கள் சங்கத்தின் கொள்கைகளில் ஒரு அங்கமான கீதையின் 18-வது அத்தியாயம் ஆரம்பிக்கும் தினத்தன்று ஏதோ சில முக்யமான பூஜைகள் செய்யவேண்டுமென்றும் அதை அடுத்தவகுப்பு நடக்கும் செவ்வாயன்று ஆரம்பிக்கலாமென்றும் ஆசிரியை சொன்னார். தற்செயலாக அன்று ரோஹிணி நக்ஷத்திரம் சேர்ந்துவந்தது, அவருக்குச் சொல்லொணாத மகிழ்ச்சியை உண்டாக்கியது.

அன்று காலை அவர் என்னிடம் வந்து கூடத்தைச் சுத்தம்செய்து கீதாசாரியன் படத்தையும், மஹாலக்ஷ்மி விக்ரகத்தையும், அங்கு ஏள்ளப் பண்ணும்படி சொல்லிப்போனார். நானும் அவ்வாறே அலங்காரம் செய்து வைத்தேன். அவர் சொன்னதுபோலவே, சரியாக இரண்டரைமணிக்கு வந்துவிட்டார். (எப்போதும், வகுப்புக்கு, நிமிடம்கூட தாமதிக்காமல் வந்துவிடுவார்.) எப்படி என்கிறீர்கள்? ஒரு வண்டி சாமான்களுடன் எல்லாவற்றையும் இரண்டு மூன்றுதரமாக தன் கையாலேயே எடுத்து வந்தார். சரியாக குறித்த நேரத்தில் கீதா பாராயணம் ஆரம்பித்தோம்.

முன் அத்தியாயம் முடிந்து மற்றொன்று ஆரம்பிக்கும்போது கற்பூர ஆரத்தி செய்தார். பாராயணம் முடிந்ததும் சிஷ்யைகளான எங்களை மணைப் பலகையில் உட்கார்த்தி, குங்குமம் வைத்து, சந்தனம்பூசி, காலுக்குத் தன்கையாலே நலுங்குவைத்தார். ஆகா! அச்சமயம் அவருடைய மனப் பூரிப்பை அள்ளிவீசும் மந்தகாச முகத்தைப் பார்த்துஎன்னால் பேசவும் முடியவில்லை. ஒருவொரு சிஷ்யைக்கும் தாம்பூலததில் ஒவ்வொரு வெள்ளி லக்ஷ்மிவிக்ரஹத்தையும் வைத்து அளித்துவிட்டு முடிமுதல், அடிவரையில் அன்புடன் தடவிக்கொடுத்து வணங்கிய காட்சியில் லயித்து தாம்பூலத்தை கைநீட்டிப் பெற்றுக்கொள்ளவும் மறந்துவிட்டேன். பின்பு பதினெட்டாவது அத்தியாயத்தை ஆரம்பித்துச் சொல்லிமுடித்து, பகவானுக்கு தூபதீப ஹாரத்திகளைச் செய்து வெகு பக்தி பரவசத்துடன் கற்பூர மங்களாரத்தி பண்ணி, முடிவில் பெற்றதாயின் அன்புடன், இதயபூர்வமான ஆர்வத்துடன், எங்களையும் நிறுத்தி திருஷ்டி கழித்தார்.

ஆஹா! அச்சமயம் கீதாசாரியனே அங்கு ப்ரத்யட்சமாகிவிட்டதாகத் தான் தோன்றி உடலெல்லாம் மயிர்க்கூச்செறிந்து நம்மையே மறக்கச் செய்துவிட்டது. அன்று எங்களுக்குக் கிடைத்த பாக்கியத்தை அதிலும் எங்கள் கிருஹம் செய்த பாக்யத்தை நினைத்தால் என் மகிழ்ச்சி கூறத்தரமில்லை. இவ்வளவிற்கும், இப்பெரிய பரிசுகளை வாங்கியளிக்க எங்கள் பிரிய ஆசிரியை மகா செல்வவந்தருமல்ல. ஆனால், பக்திச்செல்வமும், விரிந்த மனோசெல்வமும், பகவான் அளித்திருப்பதால், அவருக்கு இவை

ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அவர் வகுப்பு ஆரம்பிக்கும் சமயம் ஒரு மாணவி வராவிடில் அவரே அவளில்லம் சென்று அழைத்துவருவார்.

இத்தகைய உதார குணமும் பக்தி சீலமும், விரக்தி வாழ்க்கையும் அன்புப் பணியும், சேவையில் ஆர்வமும்கொண்ட ஓர் ஆசிரியை எங்கள் சங்கத்திற்குக் கிடைத்தது மகாத்மாஜீயின் ஆசியினுல்தான். இத்தகைய உயர் குணங்கள் வாய்ந்த ஆசிரியைக்கு நாங்கள் அளிக்கும் எந்தக் காணிக்கைதான் ஈடாகும்! எங்கள் இதயபூர்வமான அன்பைத்தான் கைம்மாருகச் செலுத்தமுடியும். அவருக்கு தீர்க்காயுளையும் திடகாத்திரத்தையும் அளித்து எங்களைப்போன்ற பல மாணவிகளுக்கு சேவையை உபதேசிக்கச் சக்தியும் அளிக்கும்படி அந்த கீதாசாரியனின் அடிவணங்கி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

---

# மகாத்மாஜி ஸேவா சங்கம்

## திருவல்லிக்கேணி

சங்கத்தின் நிகழ்ச்சிகளும் வளர்ச்சியும் அமோகமாக விருப்பினும் யாத மோகினியில் தொடர்ச்சியாக வெளியிட இடம் போதாததால் சுருக்கி இப்பொழுது நேயர்களுக்கு விவரம் கொடுக்கிறோம்.

ஆகஸ்டு மீ 5வ வரலக்ஷ்மி வ்ருதத்தன்று ஸ்ரீமதி என். சுலோசனு பாட்டும் வெங்கட் ராமானுஜம் பிடிலும் M. O. பார்த்தஸாரதி ம்ருதங்கமும் சேர்ந்து கச்சேரி அத்புதமாய் நடந்தது. உபதலைவி ஸ்ரீமதிC. ஸாஸ்வதி பாய் வந்தனுேபசாரம் கூறி அமுதவெள்ளம்போல் பாடிப் பரவசமுறச் செய்தார். M. O. ஜானகியம்மாளின் உபயம் அன்று.

12வ கடைசீ வெள்ளிக்கிழமை இந்திரா பார்த்தஸாரதி அழகாகப் பாடினுள். மோகினியின் உபயம் சிறப்பாக நடந்தது.

15வசுதந்திரதினத் திருவிழா ஸ்ரீமதிஸரோஜினிவாதப்பன் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. காலையில் ஸ்ரீமதி ஸாரதா ராமநாதன் கொடியேற்றினுர். ஊர்வலமும் ப்ரஸங்கங்களும் நடந்தன.

24வ ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமியால் பிராட்டியின் வைபவம் காலக்ஷேபம் நடந்தது.

செப்டம்பர் நாலாந்தேதி கவியரசர் பாரதியார் தினம் ஸ்ரீமதி மண்டயம் ஸ்ரீரங்கம்மாள் தலைமையில் நடந்தது. வை. மு. கோ எழுதிய வத்ஸகுமார் என்கிற நாவலை நாடகமாக சங்கத்து அங்கத்தினர்கள் வெகுவெகு அத்புதமாக நடித்து 'சபாஷ்' பெற்றுவிட்டார்கள். டி நிகழ்ச்சியை நடத்த ப்ரெஸிடென்ஸி காலேஜை உதவிய அதிகாரிகளுக்கும் இந் நாடகத்தில் பரிபூர்ண பங்கெடுத்துக் கொண்டுழைத்த எல்லோருக்கும், ப்ரத்யேகமாய் டாக்டர் அங்குளிக்கும் சங்கத்தின் சார்பாக வை. மு. கோ. வந்தனுேபசாரம் தெரிவித்தார். (வத்ஸகுமார் நாடகம் நடிக்க யாருக்கேனும் வேணுமாயின் மோகினி காரியாலயத்திற்கு எழுதிகேட்கலாம்.)

அக்டோபர் 1வவிஜயதசமி தினம் ஸ்ரீமதி C. ஸாஸ்வதிபாய் தலைமையில் கொண்டாடப்பட்டது.

2வ மகாத்மாஜியின் பிறந்தினம் ஸ்ரீமதி கனகம்மாள் ஜகன்னுதாசாரி கொடி ஏற்றத்துடன் ஸ்ரீமதி தங்கம்மாள் சின்னஸ்வாமி தலைமையில் சிறப்பாக நடந்தது. ஸ்ரீமதி தங்கம்மாள் சின்னஸ்வாமி இலவசச் சம்பள நிதிக்கு 15 ரூபாய் நன்கொடை யளித்தார்கள்.



183158

56-வது பக்கத்தொடர்ச்சி.

3௳ பண்டித யதுகோதாச்சார் அவர்கள் ஸ்ரீவெங்கடேச மஹாத்மிய காலக்ஷேபத்தை மிக அழகாக மனதில் பதியும்வண்ணம் செய்தார்.

15௳ வை. மு. கோ. ஸாஹித்தியங்களை சங்கத்து இசைக்கோஷ்டியினர் வெகு இனிமையாக சென்னை ரேடியோவில் பாடினார்கள்.

21௳ தீபாவளிக் கொண்டாட்டம் குமாரி அரவிந்தாவின் நாட்டியத்துடன் நடந்தது.

24௳ பண்டித யதுகோதாசார் அவர்களால் துலாகாவேரி மகத்வம் அதிஅத்புதமாக உபன்யாஸம் செய்யப்பட்டது.

31௳ சங்கத்து ஹிந்திவகுப்பு நடப்பதை ஹிந்தி ப்ரசார சபையின் ப்ரத்யேகபரிசிலனையாளர்கள்வந்து பார்வையிட்டு, தங்களுடையபரிபூர்ணமான த்ருப்தியைத் தெரிவித்து வகுப்பைக் கொண்டாடிச் சென்றார்கள்.

நவம்பர் 1௳ ஆஸ்திக மக்களும் அங்கத்தினர்களும் வியந்து பூரித்து ப்ரம்மாநந்தமடையும் வண்ணம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியவர்கள் ஆழ்வார் தூது என்கிற அதி அத்புதமான விஷயத்தை அம்ருத வர்ஷம்போல் வர்ஷித்துப் பூரிக்கச்செய்தார். இந்த அத்புதமான காலக்ஷேபம் நடப்பதற்கு ஸ்ரீ உடுப்பி க்ருஷ்ணன் கோவிலில் இடம்கொடுத்து உதவிய அதிகாரிக்கு சங்கம் தனது வந்தனத்தைச் செலுத்துகிறது. ப்ரம்மாண்டமான கூட்டத்திற்கு ஏற்ற இடமும் உகந்த உபன்யாஸமும் இதுவே முதல்தரமாகும் என்றும் அடிக்கடி இம்மாதிரி விருந்தை இந்த ஸந்நிதியிலே ஸ்வாமி சங்கத்திற்கு அளிக்க வேண்டுமென்றும் உபதலைவி C. ஸரஸ்வதி பாய் வந்தனோபசாரத்தில் கூறினார்.

8௳ துலாகாவேரி தாயார் கல்யாண வைபவம் வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக பல அங்கத்தினர்கள் கூடி தாம்பூலம் வழங்கி நடத்தினார்கள். முக்யமாய், சங்கத்து ஸ்ரீ மகாலக்ஷ்மி தாயாருக்கு ஸ்ரீமதி K. R. ரங்கநாயகியம்மாள் தங்கத்தில் திருமங்கல்யமும் பட்டுப்பாவாடையும் தன் சொந்த கைங்கர்யமாகச் சமர்ப்பித்து கல்யாண உத்ஸவத்தை மிக மிகச் சிறப்புறும்படிச் செய்தார். பாலிகாகழகத்துச் சிறுமிகள் செய்துவந்த கைவேலைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவை ஸ்ரீமதி C. ஸரஸ்வதிபாய் தலைமை வகித்து நடத்திக்கொடுத்தார். அது சமயம் ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி, A. ஸரோஜாபாய், அழகாகப் பேசினார்கள். வ்யாஸப் போட்டியில் தேறிய பாலிகா கழகத்துச் சிறுமிகள் தங்கள வ்யாசங்களைப் படித்தார்கள்.

சிறிய திருமடலும் திருக்குறளும் பண்டித திருவாலி ராமானுஜாசார்ய ஸ்வாமியால் தொடர்ந்து உபன்யாஸம் நடத்தப்பட்டு வருகின்றன.

நமது சங்கத்தின் முக்ய ஜீவநாடியாய் விளங்கும் மாணவர் இலவசச் சம்பள நிதிக்காக நமது இசை—நாடகக் கோஷ்டினர் டிஸம்பர் மாதம் மற்றொரு அத்புதமான புதிய நாடகத்தை நடிக்கப்போகிறார்கள். விவரம் பிறகு வெளிவரும். சங்கத்து அங்கத்தினர்களுக்குத் தனிச்சலுகைஉண்டு. அங்கத்தினரல்லாதவர்கள் உடனே அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டால் சகல நிகழ்ச்சிகளையும் அனுபவிக்கலாம். சென்ற வருஷம் காந்திநாடகத்தில் அபாரமாக நடித்துப் புகழ் வாங்கியதைவிட ஆயிரமடங்கு வத்ஸகுமார் நாடகத்தில் நன்மதிப்பும் கீர்த்தியும் பெற்றுவிட்டார்கள். இப்போது தயாராகும் நாடகம் இன்னமும் வெற்றிகரமாயிருக்கும்.

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. L.

Jaganmohini (December, 1949.) Regd. No. M. 2210.

# ஜகன்மோகினி
# 27-வது ஆண்டு மலர்

★

## அடக்கவிலையில்
## அளிக்கப்படுகிறது

★

நமது வேண்டுகோளுக்கிணங்கி, அனேக பிரபலஸ்தர்கள் மலரைச் சிறப்பிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அறிஞர்களின் பேராதரவான ஒத்துழைப்பில் உருவாகும் இவ்விசேஷ மலர் பல கலைகளின் பேரிணைப்பாக உங்களை மகிழ்விக்குமென்பது திண்ணம்.

“ஜீவநாடி”—வை. மு. கோ. 87-வது நவீனம்—இம்மலரில் வெளியாகி, பிறகு தனிப் புத்தகமாகவும் வெளிவருகிறது: அதன் விலை ரூ. 1-8-0. நம் 27-வது ஆண்டு மலர் ஷை நவீனத்துடன்கூட, பலபல இலக்கிய, ஆன்மீக, கலை, ஓவிய, போட்டோ அம்சங்களையும் தாங்கி ரூ. 2.க்கே அளிக்கப்படுகிறது: அதாவது, அவ்வளவு அதிகப்படியான விருந்துக்கு 8 அணாவே அதிகம்!

அடக்கவிலைப் பதிப்பாக அளிக்கப்படுவதால் இந்த விசேஷ அனுகூலம். இதை உணர்ந்து உடனே முந்துங்கள். தாமதித்து ரூ. 2. அனுப்பி ஷை மலர் கிடைக்காதவர்களுக்கு ஷை நவீனம் மட்டும் அனுப்பப்பட்டு மீதி சந்தா கணக்கில் வைக்கப்படும்.